படைப்பு
சமூகத்தின் இணைப்பு

ஊற்று-7 | நதி-9 | ஜனவரி 2025 | திங்களிதழ்
ISSN: 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்



## கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி முடிவுகள் - 2024

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-7 | நதி-9 | ஜனவரி 2025

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர்:
**க.சோ.திருமாவளவன்**

நிருபர்கள் குழு:
**முனைவர் கோ.நித்தியா**
**தீபிகா நடராஜன்**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு:
**ஆர்.பிரகாஷ்**

ஓவியக் கலைஞர்கள்:
**திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர், கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
*73388 97788 / 73388 47788*

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** - ப. 04
- **‘கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2024’ முடிவுகள்** - ப. 05
- **வெற்றியின் பரிமாணமும் பரிநாமமும்** – ஆதிரன் - ப. 19
- **விருதுகளும் இலக்கிய நிழல்களும்** – ஆண்டன் பெனி - ப. 27
- **‘வேண்டுமென்றே நாம் படைப்பூக்கத்தைப் பகுத்தறிவுச் சிந்தனையிலிருந்து பிரிக்கிறோம்’** எழுத்தாளர் மியா கூட்டோவுடனான நேர்காணல் தமிழில்: ஆனந்தராஜ் - ப. 30
- **மீட்டெடுக்கப்படும் காலங்கள்** – கவிஜி - ப. 41
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை** – மு.முருகேஷ் - ப. 45
- **நாகம்மையார்** – தி.கலையரசி - ப. 60

## சிறுகதைகள்


- **பாலருவி**
  - விக்ரமாதித்யன் - ப. 23
- **கோபங்கள்**
  - சாஸ்தா - ப. 36
- **ஆச்சி**
  - ச. உமா கண்ணன் - ப. 52





## Facilities

- Capacity 90 - 100 (Persons)
- AC Hall with Audio system
- POP with Profile lights
- Tea / Coffee snacks place
- Projector

**படைப்பு அரங்கம்**
**# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,**
**கார்ப்பரேஷன் காலனி தெரு,**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024**

+91 73388 97788, 73388 47788

## தலையங்கம்

வணக்கம். படைப்பு 'தகவு' எண்பத்தொன்றாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

படைப்பு இலக்கியக் குழுமம் நடத்திய கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி 2024 – முடிவுகள் இவ்இதழில் வெளியாகியுள்ளன. கவிஞர் ஈரோடு தமிழன்பன் பரிசுக்குரிய கவிதைகளைத் தேர்ந்தெடுத்துத் தந்துள்ளார். கவிதைக்கான உள்ளடக்கத்தில் கட்டுப்பாடு இல்லை என்பதால் பல்வேறு பொருண்மையிலான கவிதைகள் பதிவேற்றமாகி உள்ளன.

நவீனமயமாதலால் சிதைந்துவிட்ட சுற்றுச்சூழலையும் பண்பாட்டுக் கூறுகளையும் பேசும் கவிதை முதல் பரிசுக்குத் தேர்வாகியிருக்கிறது. சிறந்த படைப்பின் கடமையாக, சம காலகட்டம் குறித்த தரிசனத்தை வாசிப்பாளருக்குத் துல்லியமாக ஏற்படுத்தியுள்ளது. நல்ல மொழிவீச்சும் நுட்பமாக வெளிப்படும் சமூகச் சிந்தனையும் முதல் பரிசு பெறுவதற்குக் காரணங்களாக அமைந்துள்ளன. இரண்டாம் பரிசு பெற்ற கவிதை, வாழ்வின் இறுதி நிலைக்கு வந்துவிட்ட பின்னால் வாழ்க்கை என்ன மாதிரியாகக் காட்சியளிக்கிறது என்பதான சித்திரமாக அமைந்திருக்கிறது. பெண் தவிப்புச் சூழல் பேசும் கவிதை மூன்றாம் பரிசுக்குத் தேர்வாகியிருக்கிறது. பத்து கவிதைகள் சிறப்புப் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மீனின் கண்கள், அப்பாவின் இறப்பு, தொலைதலும் கண்டடைதலும், ஆதரவற்ற வீடு, காலம் தாண்டும் சுவை, யாவரும் மிருகம், நொடி முள்ளின் மரணம், களப்பலிகள், பரிணாமம் என்று வெவ்வேறு விதமான பொருண்மைகளில் அக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளன.

எழுத்தாளர் மியா கூட்டோவின் நேர்காணல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இவ்இதழில் வெளியாகியுள்ளது. அடையாளத்தைத் தேடுதல் மற்றும் கட்டமைத்தல் குறித்தும் படைப்புகள் குறித்தும் பேசியிருக்கிறார்.

விருதுகளும் இலக்கிய நிழல்களும் என்ற ஆண்டன் பெனியின் எள்ளல் கட்டுரை, பொயட் ஆஃப் தி வேஸ்ட்ஸ் திரைப்படப் பார்வை, ஶ்ரீரசாவின் கவிதையுலகம், வெற்றி குறித்த ஆதிரனின் அலசல், நாகம்மையார் குறித்த கட்டுரை என இவ்இதழ் நிறைந்துள்ளது.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

– ஆசிரியர்.

# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி முடிவுகள் - 2024



படைப்பு இலக்கியக் குழுமம் தமிழ்க் கவிதையுலகிற்குப் பெரும் பங்களிப்பைத் தொடர்ந்து அளித்துவருகிறது. அதன் முக்கிய முன்னெடுப்பாக ‘கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி’ எனக் கவிதைப் போட்டியினை அறிவித்துச் சிறந்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்துத் தமிழுலகத்திற்கு அறிமுகப்படுத்துகிறது. இவ்வாண்டுப் போட்டியில் எந்தத் தலைப்பிலும் / எந்தக் கருவிலும் கவிதைகள் எழுதிப் பதிவிடலாம் என வேண்டுகோள் விடப்பட்டது. இப்போட்டிக்கான மொத்தப் பரிசுத் தொகையாக ரூபாய் 40,000 அறிவிக்கப்பட்டது. கவிஞர்கள் தங்களது கவிதைகளைப் படைப்பு இணையதளத்தில் பதிந்தனர். மகாகவி ஈரோடு தமிழன்பன் பரிசுக்குரிய கவிதைகளைத் தேர்ந்தெடுத்து அளித்தார். பரிசு பெற்ற கவிதைகள் சான்றிதழ்களுடன் இங்கு வெளியாகின்றன.

## பரிசு விவரம்:

| | |
|---|---|
| மொத்தப் பரிசு | : 40,000 |
| முதல் பரிசு | : 15,000 |
| இரண்டாம் பரிசு | : 10,000 |
| மூன்றாம் பரிசு | : 5,000 |
| சிறப்புப் பரிசு | : 10 நபர்கள் - 10,000 ரூபாய் (இந்திய ரூபாய் மதிப்பில் தலா ஆயிரம் ரூபாய்) |

### பரிசு பெற்ற கவிஞர்கள் :

முதல் பரிசு : வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்

இரண்டாம் பரிசு : சுசித்ரா மாரன்

மூன்றாம் பரிசு : ஜே.ஜே.அனிட்டா

### சிறப்புப் பரிசுகள் :

ச.ஆனந்தகுமார்

போஸ் பிரபு

மகேந்திரன் நவமணி, மலேசியா

காயத்ரி பழனியம்மாள் (மகிழினி காயத்ரி)

ஸ்ரீவாரி மஞ்சு

கீர்த்தி (ரமேஷ்)

ராம் பெரியசாமி

மணி அமரன்

கி.சரஸ்வதி

சுப்பையா கந்தையா

# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி


பதிவு எண்:521/2018

படைப்பு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்பேட்டி

கவிதைத் தொடரில்

முதல் பரிசு பெற்ற

படைப்பாளி வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்

அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2024
நாள்

மகாகவி ஈரோடு தமிழன்பன்
நடுவர்

## முதல் பரிசு

## வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்

ஆதி காலத்திலிருந்து
நான் உருண்டோடிய வழித்தடத்தை
குழி தோண்டிப் புதைத்திருக்கிறார்களென்று
புலம்பியது கூழாங்கற்களைத் தேடும் ஆறு...
நெடுஞ்சாலை விரிவாக்கத்தில்
வேரோடு பிடுங்கியெறியப்பட்ட மரத்தில்
தன் குஞ்சுகளைத் தேடித் தவிக்குது
கரிச்சான் குருவியொன்று...
இனி உன் விளைச்சலிலெல்லாம்
விதைகளே வளராது
எங்களிடம் விலை கொடுத்து வாங்கென
பாரம்பரிய விவசாயிகளை வதைக்கும்
மரபணு மாற்று விதை வியாபாரிகள்...
எங்கள் இருப்பு
நகருக்கே வெறுப்பெனக் கூறி
ஆண்டாண்டுகாலமாய் வசித்த இடத்திலிருந்து
துரத்தியடிக்கிறார்களென்று
கொந்தளிக்கும் நகரின் ஆதிக்குடிகள்
அத்தனை பேரும் நியாயம் கேட்டனர் கடவுளிடம்...
கூப்பிட்ட குரலுக்குச் செவிமடுக்கும்
உங்கள் ஆதிக்கடவுள் இங்கில்லை
புதுக்கடவுள் என்னிடம் சொல்ல விரும்பினால்
நாள், நட்சத்திரம், அர்ச்சனைச் சீட்டோடு
வரிசையில் வாருங்களென அசரீரி கூப்பிட்டது...

# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி


பதிவு எண்:521/2018

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்பேட்டி

கவிதைத் தொடரில்
இரண்டாம் பரிசு பெற்ற
படைப்பாளி சுசித்ரா மாரன்
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2024
நாள்

மகாகவி ஈரோடு தமிழன்பன்
நடுவர்

## இரண்டாம் பரிசு

## சுசித்ரா மாரன்

### இறுதிகளில் படிகிற இருள்

வயதானவர்கள் மட்டும்
வாழ்கிற வீடுகளில்
படிந்து கிடக்கிறது
ஓர் இருள்

எப்போதும் ஒருக்களித்திருக்கும் கதவுகள்
எப்போதேனும் ஒலிக்கிற அழைப்பு மணிக்கு
சோம்பித் திறக்கின்றன

இன்னதென்று உணரமுடியாதபடி
வியாபித்திருக்கும் தைலமருந்துகள் வாசனை
யாரையும் வயசாளியாக்கிவிடும்

விசை அழுத்தியவுடன்
தயங்கி எரிகிற குழல் விளக்குக்கு
பல கதைகள் தெரிந்திருக்கலாம்

வண்ணங்களில் ஒளிர்ந்த சுவர்களில்
அழுக்குக் கையூன்றி நகர்ந்த உள்ளங்கைத் தடம்
ஏதோ செய்கிறது

சுற்றம் சூழ்ந்திருந்த
நினைவுகளை
மங்கலாகச் சுமந்தபடி
தூசுத்திரைக்குப் பின் பழைய நிழற்படங்கள்

விரும்பியே விட்டுவைத்திருக்கின்றதாகத் தோன்றுகிற
எண்ணெய்ப் பிசுக்கில்
பிள்ளைக்குப் பிடித்த
பலகார மணம் இருந்திருக்குமோ

சாலைமட்டம் உயர்கையில் குள்ளமாகி
பழைய தோரணை குன்றி
வயதாகிக்கிடக்கிறது
மணவிழா மணிவிழா
மகிழ்ச்சிகள்
ஒரேயொரு கல்யாண சாவு
என ஓங்கியுயர்ந்திருந்த வீடு

●


பதிவு எண்:521/2018

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்பேட்டி

கவிதைத் தொடரில்
மூன்றாம் பரிசு பெற்ற
படைப்பாளி ஜே.ஜே.அனிட்டா
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2024
நாள்

மகாகவி ஈரோடு தமிழன்பன்
(நடுவர்)

# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

## மூன்றாம் பரிசு

## ஜே.ஜே.அனிட்டா

### விலக்கப்பட்ட கனி

இறந்த பறவையின் அலகில்
அது மிதந்த வானுடலின் நிழல்.
நான் தாபமுற்றிருக்கிறேன்.

நேர்ந்து விட்ட செம்மறியின்
கண்களினின்று பழுப்பு நிறத்தில்
பெருகுகிறது விடுதலைக்கான பிரார்த்தனைகள்.
சுமந்தவள் நினைத்திருக்கக் கூடும்.

விலங்கும் அறியாத மூர்க்கத்தோடு
மகளென்று அறியாமல்
மதுப்பிறழ்வில் சிதைத்தபோது
அவளுக்கு வயது பத்து.
எனக்கு பூஜ்ஜியம்.

நரம்பு அறுந்த கருவியில்
காலம் இசைக்கிறது துயரத்தின் பாடலை.
ஆண் போகம் உச்சமேறினால் மிருகம்.
பெண் சாபத்தின் பாகம்.

வேர்களற்ற மரமொன்று
மனவுயரத்தில் நடப்பட்டிருந்தது.
நான் இறந்துகொண்டிருந்தேன்.

பிறந்ததும் குப்பையில் எறியப்பட்ட சிசுவைச் சுற்றி
நட்சத்திர முலைகள்.
என் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.

இவ்வுலக நியதியின் கீழ்
மரணம் என்பது விடுதலை
உண்மையில் மன்னிப்பென்பதே
தண்டனை.

நான் பெண்ணாய்ப் பிறக்க
வேண்டிக்கொள்கிறேன்.

# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி


பதிவு எண்:521/2018

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

கவிதைத் தொடரில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி ச.ஆனந்தகுமார்
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2024
நாள்

மகாகவி ஈரோடு தமிழன்பன்
நடுவர்

## சிறப்புப் பரிசு

## ச.ஆனந்தகுமார்

### கேள்விகள்

ஞாயிறுகளின் குறுகிய
தெருக்களில்..
கூடைகளுக்குள் கிடத்தப்பட்டிருக்கும்
மீன்களின் கண்களில்
குடியிருக்கும் கேள்விகளின்
அடர்த்தியை எதிர்கொள்ளமுடியாமல்
தலைகுனிவேன்..

கடைகளுக்குள் கண்ணாடித்தொட்டிகளில்
அலைகிறபோதெல்லாம்
பக்கவாட்டில் திரும்பி
எனைக் கேள்விகள்
கேட்கிற மாதிரியே தோன்றும்..

கடற்கரையில் காற்று வாங்குகையில்
கடல் கொண்டு எனைச் சுற்றி
மீன்கள் முறைப்பதாய் ..
மூச்சுத்திணறும்.

கடைசியாக வெள்ளம் புகுந்து
வீட்டிற்கு வெளியே படகு
வந்துவிட வேண்டுமென
வேண்டுதலோடு காத்திருந்தபோது..
எட்டிப்பார்த்த மீனின் கண்களில்
கேள்விகளுக்குப் பதில் கொஞ்சம்
கண்ணீர் தெரிந்தது..

•


பதிவுஎண்:521/2018

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்பேட்டி

கவிதைத் தொடரில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி போஸ் பிரபு
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2024
நாள்

மகாகவி ஈரோடு தமிழன்பன்
(நடுவர்)

# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

## சிறப்புப் பரிசு

## போஸ் பிரபு

### புகை

ஊரில் ஏதேனும் இறப்பென்றால்
முதலில் அங்கு நிற்பார் அப்பா
பிணம் எடுப்பவர்
பிணம் எரிப்பவர்
பந்தல் போடுபவர்
எல்லோருக்கும் வலது கைபோல்தான்
அப்பா

பச்சபுள்ளங்க பசிதாங்காது
ஓட்டலுக்குக் கூப்பிட்டுப் போய்
சாப்பிடவைங்கடா
என்பார்
பெட்ரோமாக்ஸ் லைட் ரெண்டு
வாடகைக்கு வாங்கி வை
சீட்டு விளையாட வருவானுக
சீட்டுக்கட்டும் வாங்கி வைங்க

பொம்பளைங்க நீர் மாலைக்கு
எத்தனை குடம்
ஆம்பளைகளுக்கு எத்தனை சொம்பு
நீர் மாலைக்கு
என்று கணக்கிருக்கும் அப்பாவிடம்

சவ ஊர்வலத்தில்
மது குடித்து ஆடுபவர்களை
அதட்டிக்கொண்டே
பூக்களைத் தூவிச் செல்வார்
யார் மீதும் படாமல்

எல்லாம் முடிந்து வீடு வந்தாலும்
குளித்துவிட்டு
வெற்று உடம்புடன்
கழுத்தில் துண்டைச் சுற்றிக்கொண்டு
பீடியைப் பற்றவைத்தவாறு
பிணம் நல்லா எரியுதானு பார்த்துட்டு வாரேன்
என்று சொல்லும் அப்பாதான்

பெருநகரத்தில்
அடுக்குமாடிக் குடியிருப்பில் இறந்து
அழுகையின்றி
ஆர்ப்பாட்டம் இன்றி மின் மயானத்தில்
பத்து நிமிடங்களில்
பீடியைப் போல
புகையாய் மறைந்துபோனார்
வானுயுரப் புகைபோக்கி வழியே


பதிவு எண்:521/2018

படைப்பு

சமூகத்தின் இணைப்பு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்பேட்டி

கவிதைத் தொடரில்

சிறப்புப் பரிசு பெற்ற

படைப்பாளி மகேந்திரன் நவமணி

அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2024

நாள்

மகாகவி ஈரோடு தமிழன்பன்

நடுவர்

# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

## சிறப்புப் பரிசு

## மகேந்திரன் நவமணி

## மலேசியா

மூலைமுடுக்கின் அடரிருளில் எல்லாம்
நிழலெனச் சலனித்து ஒளிர்கின்றன
தொலைந்த பூனையின் பச்சை நிறக் கண்கள்...
காற்றினில் படபடத்து நழுவும் திரைச்சீலைக்குப் பின்னும்
நிறமிழந்த பொம்மையுடன் பரணிலும்
இப்படி எங்குமில்லாமல் அருவமற்றுப் போனது...
புன்னகைக்க மறந்த நொடிகள்தோறும்
புதுப்பித்தலை நிகழ்த்தியிருந்தன அதன் உரசல்கள்...
அகப்பிளவின் பெருந்துயரங்கள்
பாலையின் துகளென உதிர்ந்திருந்தன...
அமுதத்துளிகளில் பிழைத்திராத நெஞ்சம்
மெல்லிய குழைவினில் உயிர்த்திருந்தது...
வீடு முழுக்க வியாபித்திருந்த
கால்தடங்களில் வசீகர வாழ்வும்
மிருதுவான அன்பும் நிரம்பியிருந்தன...
திசையாவும் அதன் சாயலில் புலரும் ஒளியினில்
தேடிக் களைத்துப் பிரவாகம் கொள்கிறது ஈரம்
இருத்தலின் விழுமியங்கள் தொலைதலில் கண்டடைய
இங்குத் தேவை ஒரு பூனைதான் என்றில்லை
உன்னில் நீயாகவும் இருக்கலாம்




# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

## சிறப்புப் பரிசு

## காயத்ரி பழனியம்மாள் (மகிழினி காயத்ரி)

தனிமையின் தாழ்வாரத்தில்
தரை தாழக் கிடந்தது
மனதின் நிழல்
எவற்றின் மீதெல்லாமோ
பற்றிப் படர்கிறது பாம்பாக

அவமானங்களின் உச்சியில்
சிரந்தாழ்ந்து
கண்ணீர் உகுக்கின்றது

புறக்கணிப்புகளின் காலடியில்
கைவிட்ட அன்பிற்கென மன்றாடுகிறது

பழச்சாற்றில் தளும்பும்
கண்ணாடிக் குவளை விளிம்புகளில்
ஊர்ந்து செல்லும் எறும்பாய்
தடுமாறிப் பரிதவிக்கிறது

நஞ்சில் தோய்ந்த அம்புகளை
முத்தமிட்டு எறிந்தவரின்
பெயர் சொல்லிச் சிரிக்கிறது

மூன்றாம் உலகக்
கடவுளுக்காக
உருகிக் கரைகிறது

கூரையில் சிக்குண்ட
பொம்மைக்காகப் பிரார்த்திக்கும்
குழந்தைக்கு
சிறுகாற்றை அனுப்பிவைக்கும்
மரமாக இருக்கக்கூடும்

இனி வரமாட்டார் என்று
எப்போதோ கைவிட்ட
பழைய கடவுள்

வெயில் தாழும் தெருவின் புழுதியில்
கால் உந்தி
தனக்கே தனக்காக
முதலடி வைக்கிறது
மனதின் குழந்தை

பரவுகிறது எல்லையற்ற
ஒளி

கடவுளோ இவை ஏதும்
அறியாதவர் போல
ஒயின் பருகிக்கொண்டு இருக்கிறார்.


பதிவு எண்:521/2018

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்பேட்டி

கவிதைத் தொடரில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி ஸ்ரீவாரி மஞ்சு
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2024
நாள்

மகாகவி ஈரோடு தமிழன்பன்
(நடுவர்)

# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

## சிறப்புப் பரிசு

## ஸ்ரீவாரி மஞ்சு

### ஆதரவற்ற வீடு

அரவங்களற்ற
ஊமை வலிகளோடு
பொக்கை வாய்க் குழிகளில்
தலைமுறைகளாய்ப்
பல்லாங்குழியாடிய தடயங்களோடு
மயானக் கிழிசலாகிப்போன திண்ணைகள்....

கலைடாஸ்கோப்புகள் நிறைந்த
பல இடுக்குகளில்
ஈனசுரத்தில் வானம்
அந்தப்புர அறையெங்கும்
காமம் தேடிப் படர்ந்த
வெட்டவெளிகள்...

தானியத்தின் சுவடு மறைந்துபோன
நெற்களஞ்சியத்தின் புழுங்கல் மணத்தை
உறிஞ்சிக்கொண்டு தொங்கும்
தலைகீழ் வௌவால்கள்....

மரப்பாச்சிப் பொம்மைகளின்
மகிழ் கும்மிப்பாட்டு
பேரழுகையோடு கசிந்துருகும்
குறுமாடக் கரிக்கொட்டை ஓவியத்தின்
சிதிலங்கள்.

பூட்டி வைத்த ரகசியங்களை
வழிய வைத்துக்கொண்டிருக்கும்
உதிர்ந்துபோன
கதவின் மேலாடை..

மடிமுட்டும் இளங்கன்றைப்
பிரித்துக் கட்டிய மரங்களில்
காரைப் பல்லாய் இளிக்கும்
அடித்தூர்களின்
பால் கறந்த ஒலி
கொல்லைப்புறமெங்கும்...

புராதன நெடியைத் தக்கவைத்தபடி
முற்றத்து வேம்பு
காத்துக்கொண்டுதான் நிற்கிறது
ஆதியில் உயிர்த் தண்ணீர்
விட்டுச்சென்றவர்களின்
தலைமுறை
தன்னைக் காண வருமென்று...


பதிவுஎண்:521/2018

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்பேட்டி

கவிதைத் தொடரில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி கீர்த்தி (ரமேஷ்)
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2024
நாள்

மகாகவி ஈரோடு தமிழன்பன்
(நடுவர்)

# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

## சிறப்புப் பரிசு

## கீர்த்தி (ரமேஷ்)

### காலம் தாண்டும் சுவை

இதில் சோறாக்கித்தான்
அம்மா தங்கள் பசியாற்றியதாகப்
பிள்ளைகள் சொல்ல
அநேகமாய்
ஒவ்வொரு வீட்டிலும்
இருக்கிறது
காலம் தாண்டி வராத
அடுப்பு ஒன்று

நெருப்பெரிந்த அதன் வாழ்வு
பின்னோக்கி
நெடுந்தூரம் போய்விட்டதாயினும்

எப்போதோ வதங்கிய
வரமிளகாயின் நெடியில்
இப்போது ஒருவருக்குத்
தும்மல் வருகிறது

என்றோ காய்ச்சிய
கூழின் குளுமை
இக்கணம் யாரேனும்
ஒருவர் நெஞ்சில்
பனியாய் இறங்குகிறது

முன்பொருநாள் சமைத்த
ரசத்தின் பூண்டு வாசம்
இன்றையநாள்
யாரேனும் ஒருவரது
நாசியில் வீசுகிறது

அன்று சமைத்த கறிச்சுவைக்கு
இன்று யாரேனும்
ஒருவரின் நாக்கு
சப்புக் கொட்டுகிறது

என்றோ உண்ட
காரம் தாளாத
குழம்புக்கு அப்பால்
இத்தருணம்
யாரேனும் ஒருவரின் கண்களில்
கண்ணீரும் வருகிறது.


பதிவு எண்:521/2018

படைப்பு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்பேட்டி

கவிதைத் தொடரில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி கி.சரஸ்வதி
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2024
நாள்

மகாகவி ஈரோடு தமிழன்பன்
(நடுவர்)

# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

## சிறப்புப் பரிசு

## கி.சரஸ்வதி

### களப்பலிகள்

எங்கேனும் இன்னும்
குற்றவுணர்ச்சியுடன் கிடக்கலாம்
மறைந்திருந்து எய்யப்பட்ட
அம்புகள்

உடைக்கத்தானா படைக்கப்பட்டோம்
என்று யோசித்துக் கிடக்கிறது
பெருந்தனுசு

இன்றுவரை சாம்பல் வாசத்தை
முகர்ந்துகொண்டிருக்கக்கூடும்
எரிக்கப்பட்ட நகரங்கள்

என்றென்றைக்குமாக
ஒலித்துக்கொண்டிருக்கலாம்
உடைக்கப்பட்ட
அப்பாவிச் சிலம்புகள்

என்ன தவறிழைத்தோமெனப்
புரியாது தவித்தேயிருக்கின்றன
புதைந்த ரதத்தின் சக்கரங்கள்

ஏதோவொரு கொடிக்கு
ஆதரவாய்த் துறக்கப்பட்டதை
எண்ணியபடியே
நின்றுகொண்டிருக்கிறது
மலைக் காட்டில் ஒரு தேர்

யாருக்கேனும் புகழ் சேர்க்கப்
பலியிடப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள்
அஃறிணைகளின் அரவான்கள்

●




# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

## சிறப்புப் பரிசு

## மணி அமரன்

### நொடி முள்ளின் மரணம்

நேற்றிலிருந்து
அதே இடத்தில்
துடிதுடித்துக்கொண்டிருக்கிறது

பார்த்துப் பார்த்து
விலகி நகரும் கண்களில்
துளியும் பரிதாபமில்லை

இத்தனை நாளும் ஓடிய கால்களை
இழுத்திழுத்துப் பார்க்கிறது
சாகும் முன்
ஓரடி எடுத்து வைத்துவிட

மரணத்திற்குள் ஊர்கையில்
ஆமையின் கால்களிடம் தோற்கிறது
பூமியின் சுழற்சி இன்று

கொலையொன்றுக்கு
மனம் சம்மதிக்க
இனியும்
தாமதிப்பதில் நியாயமில்லை

துடிக்கும் உயிரறுக்க
கூர் வாளெதற்கு
பத்து விரல்களுக்கு
பாவக் கணக்கை எழுதினேன்

நெஞ்சுக் கீறப்பட்ட
கிடாவின் இருதயமென
திறன் தீர்ந்த மின்கலத்தை
பிடுங்கி எறிந்தபோதுதான்
சற்றே ஆசுவாசம் எனக்கு

நின்றுபோன
காலத்தின் முன் நிற்கிறேன்
கண்கள் குளிர இப்போது

அத்தனை
நிம்மதியாய் இருக்கிறது
நொடி முள்ளின் மரணம்.



பதிவு எண்:521/2018

படைப்பு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்பேட்டி

கவிதைத் தொடரில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி ராம் பெரியசாமி
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2024
நாள்

மகாகவி ஈரோடு தமிழன்பன்
(நடுவர்)

# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

## சிறப்புப் பரிசு

## ராம் பெரியசாமி

### யாவரும் மிருகம்

பிரம்மத்தின் தலையில் சிவனும்
நெஞ்சில் நபியும்
வயிற்றில் கர்த்தரும் சிருஷ்டிக்கப்பட்டபின்
அவரவர் குலத்தொழில்களை
பார்ப்பதற்குச் சென்றுவிட்டார்கள்

ஆதாம் ஏவாள்களால்
வீசியெறியப்படுகிற
ஆப்பிள் விதைகள்
முழுவதும் ஒரு காப்பகத்தில்
அடைக்கப்பட்டது

அமிலங்களால்
முளைத்துவிடுகிற
ஆறாம் விரல் மனிதர்களால்
மண்ணில் ஒவ்வொரு விதையாய்
அங்குப் புதைக்கப்பட்டது

நடுநிசியில் பதறியெழுந்த
ஒரு சிறுமி சுவற்றில்
கரிக்கோல் துண்டால்
கிறுக்கிக்கொண்டிருக்கிறாள்

என் உடம்பில் ஊறும்
குருதியை விட
கைகள் அதிகமென்று


படைப்பு
சமூகத்தின் இணைப்பு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்பேட்டி

கவிதைத் தொடரில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி சுப்பையா கந்தையா
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2024
நாள்

மகாகவி ஈரோடு தமிழன்பன்
நடுவர்

# கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

## சிறப்புப் பரிசு

## சுப்பையா கந்தையா

### பரிணாமம்

அந்தத் தெரு வழி செல்லும்போது
நாங்கள்
பேசிக்கொண்டே செல்லக்கூடாது
சிறு வயதில் அப்பாவோடு
செல்லும்போது நான் கற்றது...
அப்பா சிறுவனாக இருக்கும்போது
அந்தத் தெரு வழி
பேசாமல் செல்வதோடு மட்டுமின்றி
செருப்பணிந்தும் செல்லக்கூடாது
தாத்தா அவருக்குக் கற்றுக்கொடுத்தது...
இப்போதோ என் குழந்தைகள்
அந்தத் தெருவழி சிரித்துப்பேசி மகிழ்ந்து
செருப்புக் கால்களோடு
பள்ளிக்குப் போகின்றனர்
அதுவும் அந்தத் தெரு
குழந்தைகளோடு செல்கின்றனர்
நான் என் குழந்தைகளுக்கு
இது குறித்து
எதையும் போதித்ததில்லை
கற்றுக்கொடுப்பதாக இருந்தால்
என் தாத்தாவின் அப்பாவும்
அவர் முன்னோர்களும்
அந்தத் தெரு வழி
செல்லத் தடையிருந்ததைச் சொல்லி
அதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்
●

ஆதிரன்

# வானவில் வண்ண மின்னல்



## வெற்றியின் பரிமாணமும் பரிநாமமும் - வரலாறு

"History repeats itself, first as tragedy, second as farce." - Karl Marx

வெற்றி என்பது சவால் அல்லது போட்டி ஒன்றின் 'முடிவின் விளைவுகளின்' ஒரு நிலை. அது ஒரு போரிலோ அல்லது விளையாட்டிலோ வெற்றி பெறுவது போன்ற உடல்ரீதியானதாக இருக்கலாம் அல்லது தடைகளைத் தாண்டுவது அல்லது இலக்கை அடைவது போன்ற தனிப்பட்டதாக இருக்கலாம். வெற்றி பெரும்பாலும் வலிமை, முயற்சி மற்றும் விடாமுயற்சியைக் குறிக்கிறது மற்றும் சாதனை அல்லது வளர்ச்சியின் தருணமாக இருக்கிறது. இந்தக் கட்டுரையில் வெற்றியின் வரலாறு குறித்துப் புரிந்துகொள்ள முயலலாம்.

வெற்றியின் வரலாறு என்பது மனித நாகரிகத்தைப் பரப்பும் ஒரு பரந்த மற்றும் பன்முகப் புலமாகும். போர், விளையாட்டு, அரசியல் அல்லது சமூக இயக்கங்கள் என மனித முயற்சிகளில் வெற்றி எப்போதும் மையக் கருப்பொருளாக இருந்துவருகிறது. வெற்றி உணரப்பட்டு, அடையப்பட்டு, கொண்டாடப்படும் விதம் காலப்போக்கில் கலாச்சார, அரசியல், தொழில்நுட்பம் மற்றும் தத்துவ வளர்ச்சிகளின் தாக்கத்தால் உருவாகிவருகிறது.

மனிதகுல வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்கள் மற்றும் சூழல்களின் மூலம் வெற்றி குறித்த கருத்தாக்கத்தின் கண்ணோட்டத்தைப் பார்க்கலாம்:

முதலாவதாக, பண்டைய நாகரீகக் காலத்தில் போர் வெற்றிகள் மற்றும் விளையாட்டு வெற்றிகளை எடுத்துக்கொள்ளலாம்.

1. போர் வெற்றிகள்: பண்டைய இந்தியா, எகிப்து, மெசபடோமியா, கிரீஸ், மற்றும்

ரோம் போன்ற ஆரம்பகால நாகரீகங்கள் ‘போர்ப்படைகளின் வெற்றிக்கு’ அதிக முக்கியத்துவம் அளித்தன. அரசர்கள் பெரும்பாலும் போரில் அவர்கள் பெற்ற வெற்றியால் வரையறுக்கப்பட்டனர், மேலும் அவர்களின் வெற்றிகள் பேரரசுகளை விரிவுபடுத்தின மற்றும் புதிய வம்சங்களை நிறுவின. வெற்றியை உறுதி செய்வதற்காகத் தெய்வங்களுக்குச் செய்யப்படும் சடங்குகள் மற்றும் காணிக்கைகள் உருவாக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக மதம் குறித்த கருத்தாக்கங்கள் உருவாக்கப்பட்டன. வெற்றியின் பலனாக பொதுமக்களின் வாழ்வு முறைகள் சிதைக்கப்பட்டன. மனிதர்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். எடுத்துக்காட்டாக, பண்டைய கிரேக்கத்தில், மராத்தான் போர் (கி.மு. 490) மற்றும் தெர்மோபைலே போர் (Thermopylae) (கி.மு. 480) போன்ற போர்களில், வெற்றிகள் அவற்றின் இராணுவ விளைவுகளுக்காக மட்டுமல்ல, பாரசீக சாம்ராஜ்யத்திலிருந்து கிரேக்கச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அவற்றின் கலாச்சார முக்கியத்துவத்திற்காகவும் கொண்டாடப்பட்டன. இந்தியாவில் சோழர்கள், அசோகன், பிற்கால முகலாயர்கள் போன்றோர் இதற்கிணையாக உருவெடுத்தார்கள் என்கின்றனர் வரலாற்றாசிரியர்கள்.

2. விளையாட்டு வெற்றி: பண்டைய கிரேக்கத்தில், ஒலிம்பிக் போட்டிகள் (கி.மு.776இல் நிறுவப்பட்டது) போன்ற நிகழ்வுகளில் தடகள வெற்றிகள் முக்கிய சாதனைகளாகக் கொண்டாடப்பட்டன, இது விளையாட்டு வீரருக்கு மட்டுமின்றி அவர்களின் நகர-மாநிலத்திற்கும் பெருமை சேர்த்தது. இந்தியக் கண்டத்தில் மற்போர்கள் மற்றும் வில்வித்தைகள் விளையாட்டுப் போட்டிகளில் முக்கியம் பெற்றன. ஓவியம், கவிதைகள், சிற்பங்கள் மூலமாக வெற்றியாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டு வரலாற்றில் நிலைபெற்றனர்.

இரண்டாவதாக, இடைக்கால மற்றும் நிலப்பிரபுத்துவச் சமூகங்கள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

1. நிலப்பிரபுத்துவப் போர்காலம்: இடைக்காலத்தில், வெற்றி பெரும்பாலும் நிலப்பிரபுத்துவ அமைப்புடன் இணைக்கப்பட்டது. மாவீரர்கள் மற்றும் பிரபுக்கள் பிரதேசம், கௌரவம் மற்றும் அதிகாரத்திற்காகப் போராடினர். ஆங்கில வரலாற்றின் போக்கை வடிவமைத்த ஹேஸ்டிங்ஸ் போர் (Hastings) (1066) போன்ற போர்கள் தெய்வீகத் தீர்ப்பின் செயல்களாகக் காணப்பட்டன, வெற்றி பெற்ற ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சிக்குத் தெய்வீக அனுமதியைக் கோரினர். போலவே, தமிழக - குறிப்பாக இந்தியத் துணைகண்டத்தின் - ஒட்டுமொத்த வரலாற்றுச் சிதைவு ராஜேந்திர சோழனின் (1012-44) மறைவிற்குப் பின்னதாக அமைந்தது.

2. மத அடிப்படையிலான போர்கள்: வெற்றியின் கருத்து மதப்போர்களுடன் பிணைக்கப்பட்டது, குறிப்பாக சிலுவைப் போர்களின்போது (1095-1291), அங்கு கிறிஸ்தவ மற்றும் முஸ்லீம் படைகள் புனித நிலங்களைக் கட்டுப்படுத்தப் போட்டியிட்டன. இத்தகைய மோதல்களில் வெற்றி பெரும்பாலும் அவநம்பிக்கையின் மீதான நம்பிக்கையின் வெற்றியாகக் காணப்பட்டது, மேலும் இரு தரப்பினரும் தங்கள் வெற்றிகளைக் கடவுளால் அங்கீகரிக்கப்பட்டதாகக் கண்டனர். மாறாக முகலாயர்களுக்கு முன்னதான இந்திய வரலாற்றில் மத அடிப்படியிலான போர்கள் எதுவும் நிகழவில்லை எனலாம்.

மூன்றாவதாக, மறுமலர்ச்சி மற்றும் ஆரம்ப நவீன காலம்:

1. அரசியல் மற்றும் இராஜதந்திர வெற்றி: தேசிய-அரசுகளின் எழுச்சியுடன், வெற்றியின் கருத்து அரசு மற்றும் இராஜதந்திரத்துடன் மிகவும் இணைந்தது. திருவள்ளுவனின் அரசு / அரசியல் குறித்த குறள்கள், சன் ஷூ-வின் போர்க்கலை எழுத்துக்கள், சாணக்கியனின் அர்த்தசாஸ்த்திரம் தொடர்ந்து, மாக்யாவெல்லியின் தி பிரின்ஸ் (1513) என்கிற புத்தகம் போன்றவை இந்த சகாப்தத்தின் அரசியல் வெற்றியை உத்தி, கையாளுதல் மற்றும் உண்மையான அரசியல் மூலம் பிரதிபலிக்கின்றன எனக் கொள்ளலாம்.

*2. அறிவியல் மற்றும் கலைச் சாதனை:* ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலங்களின்போது (14-17ஆம் நூற்றாண்டுகள்), அறிவுசார் மற்றும் கலைச் சாதனைகளும் வெற்றியின் வடிவங்களாகக் காணப்பட்டன. மூலச்சிறப்பு அறிவு (classical knowledge) மற்றும் மனிதநேயத்தின் மறுமலர்ச்சியானது இருண்ட காலத்தின் அறியாமையின் மீது பகுத்தறிவு மற்றும் தனிப்பட்ட திறனின் வெற்றியாகப் பார்க்கப்பட்டது.

நான்காவதாக, புரட்சிகளின் காலம் (18-19ஆம் நூற்றாண்டு): புரட்சிகள் மற்றும் தேசியவாதம் இரண்டும் கலந்த காலமாக இதைப் புரிந்துகொள்ளலாம். 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகள் அமெரிக்கப் புரட்சி (1775-1783), பிரெஞ்சுப் புரட்சி (1789-1799) மற்றும் லத்தீன் அமெரிக்க சுதந்திர இயக்கங்கள் போன்ற முக்கிய அரசியல் புரட்சிகளால் குறிக்கப்பட்டன. இந்தச் சூழல்களில் வெற்றி என்பது இராணுவ வெற்றியை மட்டுமல்ல, ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் முடியாட்சிகள் மற்றும் காலனித்துவத்தின் மீதான தேசிய சுயநிர்ணயம் போன்ற புதிய அரசியல் சித்தாந்தங்களின் வெற்றிகளையும் குறிக்கிறது.

1783இல் பிரிட்டனின் மீதான அமெரிக்கக் காலனிகளின் வெற்றி வெறும் இராணுவ வெற்றி மட்டுமல்ல, அறிவொளிக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு புதிய தேசத்தின் பிறப்பு என்பதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். போலவே, 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நெப்போலியன் போனபார்ட்டின் வெற்றிகள் ஐரோப்பாவின் அரசியல் நிலப்பரப்பைத் தற்காலிகமாக மறுவடிவமைத்தன. நெப்போலியனின் வெற்றிகள் அவரது இராணுவ மேதையின் பிரதிபலிப்பாகக் காணப்பட்டன, ஆனால் வாட்டர்லூவில் (1815) அவரது இறுதித் தோல்வி ஐரோப்பாவில் பழைமைவாத முடியாட்சி திரும்புவதைக் குறித்தது. மாற்றாக, அகிம்சை மற்றும் ஒத்துழையாமைப் போராட்டத்தின் விளைவாகக் கரம்சந்த் காந்தி பெற்ற வெற்றி உலகின் ‘மூலச்சிறப்பு’ மிக்க வெற்றியாகக் கருதப்பட்டது.

ஐந்தாவதாக, உலகப் போர்கள் மற்றும் 20ஆம் நூற்றாண்டுக் காலம்:

முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்: உலகப் போர்களின்போது வெற்றி மற்றும் தோல்வியின் அளவு முன்னெப்போதும் இல்லாத அளவை எட்டியது. முதலாம் உலகப் போர் (1914-1918) பேரரசுகளின் வீழ்ச்சி (ஆஸ்ட்ரோ-ஹங்கேரியன், ஒட்டோமான், ரஷ்யன்) மற்றும் உலகளாவிய நிலப்பரப்பை வடிவமைத்த வெர்சாய்ஸ் உடன்படிக்கை (Treaty of Versailles) உட்பட குறிப்பிடத்தக்க அரசியல் மற்றும் சமூக மாற்றங்களை ஏற்படுத்தியது போன்றவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. குறிப்பாக, இரண்டாம் உலகப் போரில் (1939-1945) நேச நாடுகளின் வெற்றி ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பானில் பாசிச ஆட்சிகளின் தோல்வியைக் குறித்ததாக இருந்தது. அதன் விளைவு உலக அதிகார அமைப்புகளை மறுவடிவமைத்ததாக இருந்தது. இந்த வெற்றியைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பனிப்போர் சகாப்தம் நிறுவப்பட்டது, அங்கு கருத்தியல் வெற்றிகள் (முதலாளித்துவம் vs. கம்யூனிசம்) பாரம்பரிய இராணுவ வெற்றிகளை மாற்றியது. போலவே, முதலாளித்துவ மேற்கு (அமெரிக்காவின் தலைமையில்) மற்றும் கம்யூனிஸ்ட் கிழக்கு (சோவியத் யூனியன் தலைமையில்) இடையே கருத்தியல் வெற்றிக்கான போராட்டத்தைப் பனிப்போர் பிரதிநிதித்துவப்படுத்தியது. இந்த சகாப்தம் கொரியப் போர் மற்றும் வியட்நாம் போர் போன்ற பல பினாமி போர்களைக் கண்டது, அங்கு வெற்றி என்பது பிராந்திய ஆதாயங்களில் மட்டுமல்ல, கருத்தியல் செல்வாக்கின் பரவல் அல்லது கட்டுப்படுத்துதலிலும் அளவிடப்பட்டது குறிப்பிடப்பட்டது.

ஆறாவதாக, 20ஆம் நூற்றாண்டில் கலாச்சார மற்றும் சமூக வெற்றிகள் குறித்த நிகழ்வுகளில், சிவில் உரிமைகள் மற்றும் சமூக இயக்கங்கள், 20ஆம் நூற்றாண்டு சமூகநீதித் துறையில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைக் கண்டன.

சிவில் உரிமைகள், பெண்களின் வாக்குரிமை மற்றும் காலனித்துவ நீக்கம் ஆகியவற்றிற்கான இயக்கங்கள் உலகளாவிய அரசியல் மற்றும் சமூக ஒழுங்கை மறுவடிவமைத்தன. அமெரிக்காவின் சிவில் உரிமைகள் இயக்கம், மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் போன்றவர்களின் பிரமுகர்கள் தலைமையில், சிவில் உரிமைகள் சட்டம் (1964) மற்றும் வாக்களிக்கும் உரிமைகள் சட்டம் (1965) மூலம் பெரும் வெற்றிகளைப் பெற்றது, இது சட்டப்பூர்வ பிரிவினையை அகற்றி, ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கு வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாத்தது என்பதைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இதேபோல, பாலின சமத்துவம் மற்றும் LGBT உரிமைகளுக்கான வெற்றிகள், 1960களில் பெண்கள் விடுதலை இயக்கம் மற்றும் 21ஆம் நூற்றாண்டில் பல நாடுகளில் ஒரே பாலினத் திருமணத்தைச் சட்டப்பூர்வமாக்கியது போன்றவை, சமூக விதிமுறைகள் மற்றும் உரிமைகளை மறுவரையறை செய்தன.

ஏழாவதாக, 21ஆம் நூற்றாண்டில், தொழில்நுட்ப மற்றும் பொருளாதார வெற்றிகள் என்பது, நவீன யுகத்தில், வெற்றி பெரும்பாலும் பொருளாதார மேலாதிக்கம் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. உலகளாவிய பெருநிறுவனங்கள், தொழில்நுட்பத் தலைவர்கள் (ஆப்பிள், கூகுள் அலிபாபா, நோவா நார்டிக்ஸ், டாடா போன்றவை) மற்றும் டிஜிட்டல் தளங்களின் எழுச்சி வணிகம் மற்றும் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் “வெற்றி” என்றால் என்ன என்பதை மறுவரையறை செய்துள்ளது.

மேலும், பண்பாட்டு மற்றும் அரசியல் மாற்றங்கள் அடிப்படையில் நவீன அரசியலில் வெற்றி என்பது பெரும்பாலும் இராணுவ வெற்றிகள் மற்றும் மென் சக்தி, பொருளாதாரச் செல்வாக்கு மற்றும் பொதுக் கருத்து ஆகியவற்றைப் பற்றியது. காலநிலை மாற்றம், மனித உரிமைகள் மற்றும் ஜனரஞ்சகத்தைச் சுற்றியுள்ள இயக்கங்கள் பொதுக்கொள்கை மற்றும் சர்வதேச விதிமுறைகளை வடிவமைப்பதில் வெற்றிகளைத் தேடுகின்றன. ஆகவே, வரலாறு முழுவதும், வெற்றி என்பது இராணுவம், அரசியல், கலாச்சாரம் மற்றும் சமூகம் எனப் பல வடிவங்களை எடுத்துள்ளது. வெற்றிகளை அடைவதற்கான வழிமுறைகள் முரட்டுச்சக்தி மற்றும் வெற்றியிலிருந்து கருத்தியல், இராஜதந்திர மற்றும் பொருளாதாரப் பரிமாணங்களை உள்ளடக்கியதாக உருவாகியுள்ளது.

வெற்றி என்பது ஒரு காலத்தில் முதன்மையாகப் போருடன் இணைக்கப்பட்டிருந்தாலும், இன்று அது பெரும்பாலும் மனித அனுபவத்தை வடிவமைக்கும் மதிப்புகள், கருத்துக்கள் மற்றும் இயக்கங்களின் வெற்றியால் வரையறுக்கப்படுகிறது. சமூக வளர்ச்சியில் வெற்றி குறித்த இவ்விவரணை தவிர்த்து, வரலாற்றில் தனிப்பட்ட ஆளுமைகளின் வெற்றிகள் சமூகம், பண்பாடு அல்லது அரசியலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய தனிப்பட்ட சாதனைகளை எடுத்துக்காட்டுகின்றன. இந்த வெற்றிகள் பெரும்பாலும் மன உறுதி, புதுமை மற்றும் பின்னடைவு ஆகியவற்றால் விளைகின்றன, மாற்றத்தைக் கொண்டுவரும் ஒரு நபரின் ஆற்றலைக் காட்டுகின்றன.

மார்க்ஸ், பெரியார், சித்தார்த்தர், ஐன்ஸ்டீன், கரம்சந்த் காந்தி, ஹிட்லர் முதல் ஆயிரக்கணக்கான தனிமனிதர்களின் சாதனைகளை மனிதகுலம் சந்தித்திருக்கிறது. தொடர்ந்து சந்தித்துக்கொண்டிருக்கும். தனிப்பட்ட வெற்றியின் தன்மைகளாக, துணிவு, சகிப்புணர்வு, புரட்சிகர சிந்தனை, உத்வேகம், விடாப்பிடியான போராட்டம் போன்றவை இருக்கின்றன. தனிப்பட்ட வெற்றிகள், ஒரு தனி நபர் தனது உறுதி மற்றும் தொலைநோக்கு மூலம், மகத்துவத்தை அடைய முடியும் மற்றும் நீடித்த பண்பாட்டை விட்டுச் செல்ல முடியும் என்பதை நமக்கு நினைவூட்டிக்கொண்டே இருக்கும்.

விக்ரமாதித்யன்

# பாலருவி



ஏனோ தெரியவில்லை, சங்குவை நினைக்கும்போதெல்லாம் அருவி ஞாபகம்தான் வருகிறது. (இவன் எப்போதுதான் சங்குவை மறந்து இருக்கிறான்). அவள் அருவி; இவனுக்கான அருவி. குற்றாலத்தில் குழல்வாய்மொழி அம்மன் சந்நிதியில் கல்யாணம் நடந்ததனால் இருக்குமோ. அவளோடு நிறைய தடவை பேரருவிக்குப் போனதனால்? சிற்றருவிக்கு அநேக தரம் சேர்ந்துபோய் வந்ததில்? புலியருவிக்கு அவளுக்காகத்தான் இவன் போனான். ஐந்தருவி இவனுக்குப் பிடிக்கும். ஆனால் அவளோடு மட்டும் போக வாய்க்கவில்லை. செண்பகாடவி இவனுக்கு இஷ்டம். அவ்வளவு தூரம் அவளால் நடக்க ஏலாது. அதனாலேயே அவளோடு அங்கே போனதாக எண்ணத்தில் இல்லை.

தேனருவிக்கு இளந்தம்பதிகளாகப் போயிருக்க வேண்டும். போக சந்தர்ப்பம் அமையாமலே போயிற்று. எத்தனை ஜோடிகள் சந்தோஷமாக வந்து போகிறார்கள், தோளோடு தோள் உரசிக்கொண்டு, கை கோத்துக்கொண்டு, ஒருவர்மேல் ஒருவர் சாய்ந்துகொண்டு.

பழைய குற்றாலத்துக்கும் கூட இவனும் அவளும் இணைந்து போனதில்லை. எப்படி அந்த மாதிரி போகாமல் இருந்தோம் என்று விளங்கவில்லை. சங்கு சோம்பேறியும் இல்லை. இவன் சுறுசுறுப்பு என்றும் இல்லை. ஆனாலும் என்னவோ தூரத்தில் இருக்கும் அருவிக்கரைக்கு இவர்கள் ஒன்றுசேர்ந்து செல்ல முடியாமலே ஆகிவிட்டது.

செண்பகாடவியில் குளிக்கையில்தான் அவள்மேல் ஆசை பொங்கி வரும். ஐந்தருவியில் தனியே நிற்கையில் சண்டாளியென்று தோன்றும். பேரருவிக்குத்தான் ரொம்பவும் சேர்ந்து போனது. அதுவும் பெரியவன் பிறக்குமுன்தான்; சின்னவனுக்குப் பிறகு இவர்கள் அருவிக்குச் சென்றதை எண்ணிவிடலாம். அதுகூட அவள் கூடப் போகவேண்டும் என்கிற ஆசையில் இவன் திரும்பத் திரும்பக் கூப்பிட்டதற்காக. பெண்ணோடு சேர்ந்து அருவிக்கரைக்கும் ஆற்றங்கரைக்கும் வாய்க்கால் கரையாகவே இருக்கட்டுமே.. போய்வருவது வாழ்வில் எத்தனை இனிய அனுபவம். குதூகலமும் மனசின் ரகசியப் பிரதேசங்களைக் கண்டறியும் புது சுகமும் கொண்டதில்லையா அது. வாழ்க்கையில் முப்பது முறை நேருமா இது.

சங்குவுக்கு அருவியில் குளிப்பது பிடிக்கும். அவள் குற்றாலத்தில்தான் ஹைஸ்கூல்

ஓவியங்கள்: அன்பழகன்

படித்தாள். கல்லூரியில் ஒரு மூன்று வருஷம். வேலையும் அங்கேயே கிடைத்தது. படிக்கிற காலம் பூரா அருவிக் குளியல்தான். ஆஸ்டல் பிள்ளைகள் எல்லோரையும் கூட்டிக்கொண்டு போவார்கள். சாரல் காலத்தில் நினைத்த நேரமெல்லாம் சிநேகிதிகளோடு அருவிக்கரை போய்வரலாம்.

அருவி எப்போதுமே அவளுக்குப் பக்கத்தில்தான். மனசுக்கு அருகாமையில். இதுவே அருவியைப் பெரிதாக எடுத்துக்கொள்ளும் சிந்தையை அழித்திருக்க வேண்டும். சங்கு அருவியைக் கையில் வைத்திருந்தாள். இல்லை, இல்லை; நெஞ்சில், நினைவில், இத்தனை வருஷம் அருவியில் குளித்தவள் வேறு எங்கே வைத்திருக்க முடியும்.

இவன் பிறந்தது குற்றாலம் பெரியம்மை வீட்டில்தான். குற்றாலமும் அருவியும் இவனுக்கு வெறுமே உல்லாசப்பயணம் போய்வருகிற இடம் இல்லை. காவலன்கோட்டை மகாராஜா பங்களா சந்திரவிலாஸில் எவ்வளவு காலம் இவன் தங்கியிருந்து சீஸனை அனுபவித்திருக்கிறான். வளர்ந்தது திருநெல்வேலியில் என்றாலும் பத்து வயசிலேயே குடிபெயரும்படியாகி சென்னை, சீர்காழி, வாசுதேவநல்லூர், தென்காசி, இன்றைய தினம் சென்னை இப்படிக் காலம் பாதி கழிந்து போயிற்று.

சங்கு புண்ணியத்தில் குற்றால பாக்கியம் கிட்டியது. கல்யாணமான புதிதில் குடியிருப்பில் இருந்த காலம் பொற்காலம். தினமும் அருவிக்குப் போய்விடுவான்.

சங்கு ஒரு பேரருவி. சங்கருவி. அருவியைக் கட்டியாளும் ஆசையில் அருவியே அருவியே என்று அடிக்கடி கூடிப் பிரிந்து, வெட்கம் விட்டு வெள்ளிக்கொலுசு சப்திக்கும் பாதங்களில் விழுந்து கிடந்திருக்கிறான். கண்ணீர் துடைத்து, தலையைத் தடவிக் கொடுத்து, கன்னத்தில் தட்டி, கண்ணா கவலைப்படாதே என்று ஆறுதல் கூறி அரவணைத்து விடியப் பண்ணியிருக்கிறாள் அவள்.

சங்கு கோர்ட் மூலமாக விவாகரத்து கேட்டிருந்தாள். இவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. மனச் சங்கடமாக, குழப்பமாக, கோபமாக; உணர்வுகளின் கொந்தளிப்பு. சங்கு நீயா. என்னிடமா. எதுக்கு. எப்படி. வாழ்ந்ததை நினைத்துப் பார்த்தாயா. பெரியவன் யார். என் உரு. ஒருவரோடு ஒருவர் கூடிக் கலந்து ஒருவரையொருவர் மதித்து வாழ்ந்த காலம் கனவா. பேசியதெல்லாம் பிதற்றல். விவாகரத்தா. என்னிடம் நீயா. ஏன். வேண்டாம். வேண்டாம். வேண்டவே வேண்டாம். யார் உன் மனசைக் கெடுத்தது. கெடுத்தாலும் கெடலாமா. போடி, போ, போக்கத்தவளே. தேடித்தேடி வரும் தீ மனசை அவிக்க முடியுமா.

காலையில் தட்டில் எச்சில் இட்லி சாப்பிட்டாயே. மதியம் வங்கிக்கு வந்தபோது சோறு சாப்பிடும் நேரம் உருட்டிப் போடச் சொல்லி வாங்கியது. நான் வந்து இருந்த நாள்களில் உன் உடம்பு பருத்து, முகம் மலர்ந்து, ஒரு பூரிப்புக் கூட அம்மன் போல நின்றாயே. இரண்டு பிள்ளைகள். உன்னைப் போலச் சின்னவன். என்னைப் போலப் பெரியவன். எப்படி. எப்படி. காதல். எல்லாம் பொய்யா; எல்லாம் என்ன?

குடிகாரனாம். அடித்து உதைத்து ஹிம்ஸை பண்ணினானாம். பதினாலு வருஷமாய்க் குடும்பத்துக்கு ஒன்றும் செய்ததில்லையாம். சரிதான். குடித்தது யாரால். உன்னால், உன் குடும்பத்தால். நீ என் கூட வந்து இல்லாத கொடுமையால். உன் ஆதரவில் காலம் கழிக்கத் தங்களோடேயே வைத்துக்கொண்ட உன் தாயின் சுயநலம் இதுக்குக் காரணம்.

அடிப்பதெல்லாம் விட்டு எத்தனை வருஷமாச்சு, உன் முன்கோபம், வாய், பதிலுக்குப் பதில் பேசும் குணம். சும்மா இருக்க முடியுமா. தோடு தெறித்து விழ அடித்த காலம் விட்டு இன்று என்ன.

உதை, ஹிம்ஸை இதெல்லாம் அதிகம். வக்கீலின் வழக்கமான பேச்சு. சென்னையில் பத்திரிகையில் வேலை பார்த்து மிச்சம் அனுப்புவது ரொம்பக் கஷ்டம். கூட வந்து இருக்கச் சொன்னால் ஆயிரம் சமாதானம் சொல்வாய்.

ஸ்டோரில் இத்தனை ஆயிரம் சார்ட்டேஜ் என்பாய். நான் எங்கே போக.

பெரிய அக்காவும் மதினியும்தாம் எல்லாம் கவனித்துக்கொண்டார்கள். செம்பு நிறையப் பால் கொண்டுபோய் வைத்தார்கள். ஜமுக்காளம், தலையணை எடுத்துக் கொண்டுபோய்ப் போட்டார்கள். அன்றைக்கு இரவு பதினொரு மணிக்கு மேல் ஆகிவிட்டது. இவனுக்கானால் எரிச்சல். அம்மாவிடம் கோபத்தைக் காண்பித்துவிட்டான். ஒருபக்கம் தூக்கம் வருகிறது. இன்னொரு புறம் உடம்பு அசதி. அசதியில்தான் தூக்கம் போல.

முகூர்த்தம் காலை ஆறரை மணி. முந்தைய நாள் ராத்திரி சுத்தமாகத் தூக்கமில்லை. மணிப்பாண்டியன், ரங்கநாதன் எல்லோரும் சேர்ந்து கேலிசெய்து கொண்டிருந்தார்கள். மின்சாரம் போய்விட்டது. புழுக்கத்தில் தூங்கவே முடியவில்லை. அதற்கு முன் நாள் இரவுவரை கல்யாண வேலைகள். பெரிய தம்பி சேகர் வடகரை ஷெரீபைப் பார்த்து அம்பது தேங்காய் கேட்டு வாங்கிக்கொண்டு வந்தான். சைக்கிளிலேயே போய்விட்டு வந்தான். இவனுக்கு மளிகைச் சாமான்கள் எடுத்துவைக்கும் வேலை. பகலில் போய்த் தூங்க இடம் கிடைக்கவில்லை. எல்லா ரூமிலும் ஆள்கள் இருந்தார்கள்.

இவனுக்கு ஒன்றும் அவசரமில்லை. ஆனால், இவ்வளவு நேரமாக்குவது அநியாயம். கடைசியில் ஸ்டோர் ரூமில்தான் படுக்கை போட்டிருந்தது. உள்ளே சங்கு படுத்திருந்தாள். இவன் தூக்கக் கலக்கத்தோடு நுழைந்தான். செம்புப் பாலை எடுத்துக் கொடுக்க, தகையில் முக்காலும் குடித்துவிட்டு, அவள் முகத்தைப் பார்த்து ஞாபகம் வந்து, மிச்சம் கொடுத்தான். மாயமாய் முடிந்துபோயிற்று எல்லாம்.

ஆனால், தொடர்ந்து வீனஸ் பங்களாவில் ஆனந்தமாக இருந்தார்கள். ராத்திரி தூங்கப்போகும்போது அருவி ஓசையும் சில்வண்டுகள் சப்தமும் மட்டுமே கேட்கும், அந்தக் கடைசி அறை வாய்த்தது புண்ணியம். அதில் வாழ்ந்தது பூர்ணம். பக்கத்திலேயே ஒரு ஓடை. அதன் சலசல தூங்கவும் பண்ணும், விழித்திருக்க நினைத்தால் அதுக்கும் வழியுண்டு. மலையிருட்டு ஏகாந்தமாகக் கிடக்கும். அந்தச் சூழலில் சிகரெட் பிடிக்கக் கூடத் தோன்றாது. அதுதான் இவனுடைய வசந்த காலம்.

காலையில் சிற்றருவிக்குத்தான் போவது. அதுதான் பக்கம். சங்கு துவைத்து அலசுவது பிடிக்காமல், இவன் அலசப் போக அவளுக்குக் கோபம். அதிலிருந்து இவன் துணிகளை அவள் துவைப்பதில்லை. இவன் சாப்பிட்ட எச்சில் இலையில் மனம் கூசாமல் சாப்பிட்டாள். தியேட்டரில் நகைச்சுவைக் காட்சிகளில் கையை அழுத்திக் கிள்ளுவாள். இவன்தான் படுக்கை விரிக்க வேண்டும். விடிந்ததும் இவன்தான் முதலில் எழும்புவான். அவளுக்கு லீவு புதன்கிழமை. ஒவ்வொரு வாரமும் தென்காசி தியேட்டர் போகத் தவறாது. இவன் இல்லாமல் தீராது. கல்யாண வீடு, சடங்கு வீடு, குலதெய்வத்தைக் கும்பிடப் போக, இவன் கூட வர வேண்டும்.

அருமையாக அவியல் வைப்பாள். உருளைக்கிழங்கு சாம்பார், முட்டைக்கோஸ் துவரம், பாகற்காய்ப் பொரியல், கருணைக்கிழங்கு மசியல். என்ன குறை வைத்தாள். பர்ஸையே இவன் கையில்தான் கொடுத்திருந்தாள்.

என்ன ஆயிற்று சங்குவுக்கு. புத்தி கெட்டுப் போயிற்றா. மனசில் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாள். வாழ்க்கை என்ன விளையாட்டா. பிள்ளைகளையாவது பார்க்க வேண்டாம்?

சமாதானம் செய்துவிடலாம். பார்த்தால் கோபம் தீர்ந்துவிடும். பேசினால் ராசியாகிவிடுவாள். அவள் குணம் தெரியாதா. எல்லாம் மூணே முக்கால் நாழிகைதான்.

பஸ் நுழையுமிடம் வெளியே போகுமிடமாக மாறியிருந்தது. பக்கத்தில் ஒரு புதிய லாட்ஜ் முளைத்திருந்தது. ஒரு நல்ல ஹோட்டல் தோன்றியிருந்தது. மணி ஐயர் கடையில் காபி குடித்துவிட்டுக் குமரேசன்பிள்ளை கடையில் வில்ஸ் ஃபில்டர் வாங்கிப் பற்றவைத்தபடி நடந்தான். ஜோல்னாப் பையில் சிகரெட் பாக்கெட் கிடப்பது இப்போதுதான் ஞாபகத்துக்கு வந்தது. அதனாலென்ன, இருக்கட்டும் என்று நினைத்துக்கொண்டான். அக்னி நட்சத்திர வெயில் எரிச்சலூட்டியது. (சென்னை

வெயில் பழகிவிட்டிருந்தது. தெரிவதில்லை.) வியர்வை சட்டையை நனைத்திருந்தது. பதினாறு மணி நேர பஸ் பிரயாணம் அயர்ச்சியை உண்டு பண்ணியிருந்தது. பாதங்கள் வீங்கியிருந்தன. வயசு.

முதலில் பாத்ரூம் போக வேண்டும். பல் தேய்க்க வேண்டும். குளிரக்குளிரக் குளிக்க வேண்டும். சங்கு வீட்டில் இருக்க வேண்டும். இருப்பாள். எங்கே போகப்போகிறாள். லீவுதானே.

வளவுக்குள் நுழைகையிலேயே இவனைப் பார்த்ததும் விறுவிறுவென்று வீட்டுக்குள் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டாள்.

“உள்ளே வரக்கூடாது” என்றாள்.

“முதல்ல கதவைத் திறடி. உன்கூடக் கொஞ்சம் பேசணும். நா சொல்றத கேட்டுட்டுப் பிறகு சொல்லு.”

“இல்ல. இனிமே பேசுறதுக்கு ஒண்ணும் இல்ல. எல்லாம் முடிஞ்சு போச்சு. நீங்க போலாம்.”

“இல்லடி. இதக் கேளு.”

“இல்ல. இல்ல. நா ஒண்ணும் கேக்கல. கேட்டதெல்லாம் போதும்.”

“கதவைத் திற சங்கு. இப்படி நிக்க வச்சுப் பேசுறதே எனக்கு அசிங்கமா இருக்கு. கோபம் வந்தா கதவ உடைச்சுருவேன்.”

முடிவில் வெளியே வந்து சடசடவென்று பொரிந்தாள்.

“அம்பது பைசா பூ வாங்கிக் கொடுத்திருப்பியா. வருஷம் ஒரு புடவையாவது வாங்கிக் கொடுத்தியா. இந்தப் பிள்ளையளுக்கு என்னவாவது செஞ்சிருப்பியா. பதினாலு வருஷம் பட்டது போதும். இனியும் பட முடியாது. உனக்குக் குடிக்கக் காசு கொடுக்கணும். கவிதை புஸ்தகம் போடப் பணம் தரணும். கொல்லூர் போகணும்பே. சாமி கனவில் வரும், பட்டீஸ்வரம் போகணும்பே. ஒரு இடத்தில் ஒழுங்கா இருக்கமாட்டே. உட்கார்ந்து திங்க வேண்டியது. காலம் பூரா கதை எழுதுறேன், கவிதை எழுதறேன்னு உழைக்காம இருப்பே. என்ன மனுஷன் நீ. என் நகையெல்லாம் போச்சு. கையெடுத்துக் கும்பிடுதேன். போயிரு. இந்தப் பிள்ளையளுக்காகக் கொஞ்ச காலம் வாழணும்னு இருக்கேன். உன்கூட வாழ்ந்ததெல்லாம் போதும், அவ்வளவுதான். எல்லாம் முடிஞ்சு போச்சு.”

இவன் மறித்துச் சொல்லப் பார்த்தான். பேசவிட்டால்தானே. ‘இல்ல சங்கு, இந்த முறை மட்டும்’ என்று மறுத்துப் பேசிப் பார்த்தான். பிரயோஜனம் இல்லை.

இவளுக்கு என்ன ஹிஸ்டீரியாவா. இத்தனை வருஷப் பொறுமையும் உடைந்து ஆங்காரம் திரண்டு வந்துவிட்டதா. நிச்சயம் இது இவன் சங்கு இல்லை. அந்தச் சங்குவை இனி பார்க்கவே முடியாது. இது பிசாசு.

அடைத்த கதவு இவனைக் கேலி செய்கிறமாதிரி இருந்தது. பக்கத்து வீட்டில் போய் டி.வி. பார்த்துவிட்டு வந்த பெரியவன் கவலையுடன் நின்றுகொண்டிருந்தான். சின்னவன் வெளித் திண்ணையில் உட்கார்ந்து ஏதோ மெக்கானிக் வேலை செய்துகொண்டிருந்தான். எதிர்வீட்டில் எல்லாவற்றையும் பார்த்திருப்பார்கள்; கேட்டிருப்பார்கள்.

பெரியவனைக் கிட்டே கூப்பிட்டு ஒரு பத்து ரூபாய்த் தாளை எடுத்துக் கொடுத்தான். “நீயும் தம்பியும் அஞ்சு அஞ்சு ரூபா எடுத்துக்குங்க. நா. போறேன்.” கிளம்பினான். பெரியவன் கூடவே வந்தான், பஸ் ஸ்டாண்டுக்கு.

“எங்க போற” என்று பரிவோடு விசாரித்தான்.

“மதுரை போயிட்டு, மெட்ராஸ்.”

பஸ் புறப்படும்வரை இருந்தான். கையசைத்து வழியனுப்பி வைத்தான்.

ஊர் எல்லை தாண்டியதுமே காற்று வந்து முகத்தில் அப்பி, சிகையைக் கலைத்தது. இவனுக்குச் சரஞ்சரமாய் நினைவுகள்.

இன்றைக்கும் குடிக்காமல் இருக்க முடியாது. விதியைத் தொழுது வணங்கி விடுதலை பெற முடியுமா. இவனைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

ஆண்டன் பெனி



# விருதுகளும் இலக்கிய நிழல்களும்

காலையில் எழுந்ததும் செய்தித்தாள் படிக்கிற பலருக்கும் இன்றைய தினத்தின் ராசிபலன் பார்க்கப் பிடிக்கும். அதுபோலவே முகநூலைத் திறந்ததும் அன்றைய தினத்துக்கான இலக்கிய விருதுப் பட்டியலைத் தேடும் கொடிய நோய் எனக்குள் எப்படி வந்ததென்று தெரியவில்லை.

பல மருத்துவர்களும் கைவிட்ட நிலையில், இன்னமும் இந்த நோயினால் நான் துயரப்படுகிறேன். இதற்காகவே ஒரு ஓய்வு நாளில் இந்த இலக்கியப் பிரபஞ்சத்தில், மொத்தம் எத்தனை வகையான விருதுகள் இருக்கின்றன என்று எண்ணிப் பார்த்ததில் ‘சீனிவாசன்’ ‘சுப்பிரமணியன்’ என்ற பெயர்களுக்கு அடுத்தபடியாக ‘பாரதியார்’ விருதுகளும் ‘பாவேந்தர்’ விருதுகளும் எண்ணற்ற அளவில் விண்வெளியில் உலா வருகின்றன.

இங்கு வாழும் இலக்கிய அமைப்புகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். விருதுகளை அப்படி முடியவில்லை. வங்கிகளின் பணம் எண்ணுகிற மெஷின் தேவைப்படுகிறது.

இதிலொரு சோகம் என்னவென்றால்.. ‘விருது வழங்கும் அமைப்புகளுக்கான பட்ஜெட்டை விடவும், விருது வாங்குகிறவர்களின் பட்ஜெட் தொகை அதிகமாக இருக்கிறது’ - இலக்கிய உளவியல் துறையின் இரகசிய அறிக்கை இப்படிச் சொல்கிறது. ஒரு விருதுக்காக இத்தனை பணம் செலவழிக்க வேண்டுமா? இத்தனை சிபாரிசு வேண்டுமா? என யோசித்தால்.. வேண்டும் என்றே நினைக்கவைக்கிறது, விருது பெறுகிறவர்களின் மெடிக்கல் ரிபோர்ட்.

இலக்கிய வானில் உலாவரும் சர்க்கரை நோயாளிகளுக்குப் பாரதியார் விருதும், இதய நோயாளிகளுக்குக் கண்ணதாசன்



விருதும், இரத்தக் கொதிப்புக்காரர்களுக்குப் பாவேந்தர் விருதும் என அவர்களின் மனதும் உடலும் சமநிலை அடைய, இப்படியாகச் சிலபல விருதுகள் தீர்வாக இருக்கின்றன.

கடும் பிணியின் பாதிப்பில் அவசரச் சிகிச்சைப் பிரிவில் இருக்கும் ஆளைக் குணமாக்குவதற்கெல்லாம், இலக்கிய விருதுகள் இருப்பதை நினைத்து மனம் ஆனந்தம் கொள்கிறது. கடவுள்களாலும் கைவிடப்பட்டவர்களை ஒரு விருது குணமாக்கும் எனில், நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்தானே.

இப்படித்தான் ஒருமுறை 'மீரா விருது' பெற்ற ஒரு தோழியைச் சந்திக்க நேர்ந்தது என் அதிர்ஷ்டம் என்றே நினைக்கிறேன். 'யாருங்க இந்த மீரா?' என்றதும், நவீன எழுத்துக்களில் முக்கியமான பெண் எழுத்தாளர் அவர் என்றும், அவருடைய பிறந்தநாளே மகளிர் தினமாகக் கொண்டாடப்படுவதாகவும் சொன்னார். அவர் இப்படிச் சொன்னது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. மறுநாள் என் கனவில் வந்த 'கவிஞர் மீரா' அவரது மொத்தக் கவிதைகள் தொகுப்பையும் தன்னுடைய சமாதியில் வைத்து எரித்துவிடச் சொன்னார்.

இப்படியான சூழலில் "தனி ஒரு மனிதனுக்கு விருதில்லை எனில், இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதியார் சொல்லியிருக்கக் கூடாது. 'கறி விருந்துக்கு வந்த அனைவருக்கும் விருது' என்று அறிவித்துவிட்டார்கள். 'யாராரு இன்னும் விருது வாங்கலை?' என்று ஒரு மூன்றாம் வகுப்பு குழந்தையிடம் கேட்டால் 'ரமேஷ் அப்பாவும், சுரேஷ் அப்பாவும்' என்கிறாள். இந்தச் சேதி அவர்கள் காதில் விழுந்ததும், அவங்களும் 'மச்சி டீ சொல்லேன்' மாதிரி விருதுக்குச் சொல்லிவிட்டார்கள். அந்தச் சிறு குழந்தைக்கென இருந்த ஒரு பதிலையும் அழித்துவிட்டார்கள் நயவஞ்சகர்கள்.

சமீபத்திய விருது வழங்கும் விழாவில், தன் கணவன் விருது வாங்கியதை அரங்கத்தின் ஓரத்தில் அமர்ந்து நேரில் பார்த்து 'தாலி கட்டிய பொழுதின் பெரிதுவக்கும் தன் கணவனைச் சான்றோன்' எனக் கேட்டுக் கண்ணீர் சிந்திய ஒரு மனைவியை நானறிவேன். சொந்த மனைவியுடன் இலக்கிய அரங்கத்தில் உலா வருகிறவர்கள் இருப்பதால்தான் இன்னமும் மார்கழி மாதத்தில் பனி பொழிகிறது, சித்திரை மாசத்தில் வெயில் அடிக்கிறது, ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 21ஆம் தேதி மழை பெய்கிறது.

மட்டுமல்ல, ஒரு விருது மேடையில் 'இந்த விருதினை என் காதலிக்குச் சமர்ப்பணம் செய்கிறேன்' என்று அறிவித்த காதலனை, நினைத்து நினைத்து, முதிர்பருவம் அடைந்தும் இன்னமும் திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கும் ஒரு தோழியையும் நானறிவேன். அவன் கிடைக்காமல் போனதை விடவும் அந்த விருது சமர்ப்பணம் அவளின் வாழ்நாளுக்கும் போதுமானதாக இருக்கிறது. மனைவிமார்களுக்குச் சமர்ப்பணம் செய்து இப்படியான பெறும்பேறடைய ஒரு விருது கண்டுபிடித்தால் பரவாயில்லை.

ஏன் இந்த விருதுகளுக்கு மட்டும் இப்படியொரு மாயசக்தி? கடவுளுக்கு நிகரான அதிசயங்களைச் செய்கின்றனவே.



'மதுப்பாட்டிலின் திருகாத மூடி' என்றொரு விருது வழங்கும் அமைப்பின் விழாவுக்குப் போயிருந்தேன். கொஞ்சம் தலை சாய்த்தாலே கண்கள் / காதுகள் / நாசிகள் வழியாக இரவின் மது, ததும்பி வழிய வழிய விழா நடத்தி முடித்தார்கள். வெளியூர் போக பெட்ரோல் பங்கில் 'தம்பி டேங்க புல் பண்ணு' என்பது மாதிரி, வெளியூர் வந்தால் மேல் மாடி வரை புல் பண்ணிக்கொள்ள, ஆறுதலாக இருக்கும் இந்த விருது விழாக்களை நான் ஆராதிக்கிறேன்.

கல்லூரியின் இலக்கிய மன்றத் திருவிழாவுக்குச் சென்றிருந்த என் நண்பர் தான் எழுதிய புத்தகங்கள், பெற்ற விருதுகள், பயணித்த பேருந்துகள், பெற்ற பயனாடைகள் விபரங்களைச் சிறப்பு விருந்தினர் அறிமுகத்திற்காக எழுதித் தந்துள்ளார். விழா நேரம் முழுக்க இதை மட்டுமே வாசிக்க முடிந்திருக்கிறது. பிறகு அந்தக் கல்லூரி நிர்வாகம் இதையே மூன்றாமாண்டு அறிவியல் பாடத்திட்டத்தில் 'விருதுகளும் நியூட்டனின் நான்காம் விதிகளும்' என்கிற தலைப்பில் சேர்த்திருக்கிறது என்பது தனி வரலாறு.

இசைஞானிக்கு அன்னக்கிளி இசைப் பதிவில் இடையூறு நடந்ததுபோல், விருது பெறும்போது போட்டோ பதிவாகாமல் போன ஒரு தம்பி, நம்பிக்கையாய் உழைத்துத் தனது இருபத்து ஏழாம் வயதில் சிறந்த எழுத்தாளருக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதினைப் பெற்று மகிழ்ந்தது விருது வரலாற்றின் உச்சம் என்றே நினைக்கிறேன். அந்த மேடையில் அவன் துள்ளிக் குதித்து, தன் பால்மணம் மாறாத சிரித்த முகத்துடன் புகைப்படத்திற்கு நின்றது இன்னும் நினைவில் இருக்கிறது.

ரியல் எஸ்டேட், ஷேர் மார்க்கெட், திருமணத் தகவல் மையம் என எல்லா ஆலோசனை மையங்களுக்கும் இந்தச் சமூகம் அங்கீகாரம் வழங்கியிருக்கிறது, அதேபோல் அங்கங்கே சிதறிக்கிடக்கும், விருது ஆலோசனை மையங்களும், அதன் நிர்வாகிகளும் கௌரவப்படுத்தப்பட வேண்டும்.

விருதுகளால் தன்னிறைவு பெறும் ஒரு சமுதாயத்தை உருவாக்க நாம் அனைவரும் சிறுகதை / நாவல் / கவிதை / ஐக்கூ என்கிற பேதமின்றி ஒற்றுமையுடன் பாடுபட வேண்டும். அப்போதுதான் நம் உலகம் இந்தப் பிரபஞ்சத்தில் வல்லரசாகும்.

நேர்காணல்
தமிழில்: ஆனந்தராஜ்

ஆங்கிலத்தில்:
ஸ்காட் எஸ்பாஸிட்டோ (தி பாரிஸ் ரிவ்யூ)



# ‘வேண்டுமென்றே நாம் படைப்பூக்கத்தைப் பகுத்தறிவுச் சிந்தனையிலிருந்து பிரிக்கிறோம்..’

## எழுத்தாளர் மியா கூட்டோவுடனான நேர்காணல்

மொசாம்பிக்கில் 1955இல் போர்ச்சுக்கீசிய வந்தேறிப் பெற்றோருக்குப் பிறந்த மியா கூட்டோ போர்ச்சுக்கீசிய மொழியில் மிக முக்கியமான இலக்கியப் படைப்பாளியாக அறியப்படுகிறார்.

அவர் எழுதியுள்ள இருபதுக்கும் அதிகமான நூல்கள் பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுள் 1990லிருந்து ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டவை, அவருக்கு ஆங்கிலத்தில் தீவிரமாக வாசிக்கக்கூடிய வாசகர்களைக் கொடுத்திருக்கின்றன. கூட்டோவின் புனைவு பலவகைப்பட்டதாக உள்ளது. எனினும் அவருக்கு 20 வயதாகி இரண்டு வருடம் கழித்து அவருடைய நாடு போர்ச்சுக்கலிடமிருந்து விடுதலை பெற்றிருந்தபொழுதான 1977இல் எழுந்த மொசாம்பிக் உள்நாட்டு யுத்தம் பற்றி அடிக்கடி அவர் எழுதுகிறார். அவர் எழுத்துக்களில் திரும்பத் திரும்ப வருகிற சர்யலிசத் தன்மைகள் அவரது புனைவை லத்தீன் அமெரிக்காவின் மாய யதார்த்தத்துடன் ஒப்புமைப்படுத்திப் பார்க்கவைக்கின்றன. அது குறித்து அவர் புளகாங்கிதமே அடைகிறார்.

கூட்டோவின் நீண்டகால மொழிபெயர்ப்பாளரான டேவிட் ப்ருக்க்ஷாவினால் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு பிப்ளியோசிஸ் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ள “தி டியூனர் ஆஃப் சைலன்சஸ்” (The Tuner of Silences) என்ற நூல் தனது மனைவியின் கொடூர மரணத்திற்குப் பிறகு தனது குழந்தைகளுடன் கைவிடப்பட்ட, ஒரு மொசாம்பிக் இயற்கைப் பாதுகாப்பிடத்திற்கு வருகிற விட்டாலிகோ என்ற ஒரு தகப்பனின் கதையைக் கூறுகிறது. விட்டோலிகோவின் ஆளுமை, அவரது

தவிர்க்கவியலாத வீழ்ச்சி ஆகியவற்றின் தன்மையை விவரிக்கிறபோது, அடிக்கடி இப்படியான சில விஷயங்களில் தீவிரமாக ஆழ்கிறார் கூட்டோ: அடையாளத்தைக் கட்டமைத்தல் மற்றும் அச்செயல்முறையில் நினைவும் மொழியும் ஆற்றுகிற பங்கு.


சமீபத்தில் ட்யூனர் நாவலின் பாதிப்புகள் விவரங்கள் மற்றும் கூட்டோவிற்கு அவரது பெயரிலுள்ள முதற்பெயர் (மியா) வந்த விசித்திரம் ஆகியவை குறித்து எங்களது மின்னஞ்சல் தொடர்புகளில் பேசினோம்.

**அங்கோலா எழுத்தாளர் ஜோஸ் லுவாண்டினோவியரா மற்றும் பிரேசிலின் ஜோவா குமராஸ் ரோஸா என்ற இருவரும் போர்ச்சுக்கீசிய மொழியைப் புரிந்துகொள்வதில் உங்கள் மீது தாக்கங்களை ஏற்படுத்தியவர்கள் எனக் கூறியிருக்கிறீர்கள். மொசாம்பிக்கிற்குள்ளிருந்து என்ன விதமான கலாச்சாரத் தாக்கங்களை நீங்கள் பெற்று இருக்கிறீர்கள்?**

எனக்கு அதிகமாக அகத்தூண்டலை ஏற்படுத்தியவர்கள் என்ற அளவில் லுவாண்டினோவையும் குமராஸ் ரோஸாவையும் நான் வழக்கமாகக் குறிப்பிடுகிறேன். ஆனால் என் குழந்தைப்பருவத்தை நிறைத்த நபர்களும் இந்தியப் பெருங்கடலில் இருக்கும் எனது சொந்த ஊரும் முக்கியம். பிற இடங்களைப் பற்றியும் பிற வாழ்க்கையைப் பற்றியும் கனவு காணத் துவங்கிய நான் பிறந்த இடத்திற்கு அருகிலுள்ள இடம் என என்னால் இனம் காண முடியாத விஷயங்களிலிருந்து எனது எழுத்தின் மீதான மிக முக்கிய தாக்கங்களைப் பெறுகிறேன். முரண் என்னவென்றால், எழுத்தறிவிற்குச் சம்பந்தமில்லாத உலகத்திலிருந்து எனது எழுத்திற்கான முக்கிய அகத்தூண்டலுக்கான ஆதாரம் வந்தது. மொசாம்பிக்கில் வாய்மொழிக் கலாச்சாரம் இப்போதும் பலமாக இருக்கிறது. இங்கு எதார்த்தத்தைக் கதைகளாக மாற்றிவிடும் திறமை நகர்ப்புறங்களில் கூட இன்னும் மிக உயிர்ப்புடன் இருக்கிறது. மேற்கு ஆப்பிரிக்காவின் பாணர் / கதைசொல்லிகளின் தனிப்பட்ட திறமையாகக் கதை சொல்லுதல் இருக்கவில்லை, சாதாரணக் குடிமகனும் இந்தத் திறனுடையவனாக இருக்கிறான். வெறும் வார்த்தைகளால் மட்டுமின்றி அவர்களது முழு உடலையும் கொண்டு கதைகளைக் கூறுகின்றனர். பாடல்களையும் கவிதைகளையும் தனித்துவமிக்க மொழியாகக் கொண்டு.

**வெகுஜனப் பத்திரிகையுலகில் உங்கள் எழுத்து பொதுவாக “மாய யதார்த்தம்” என வகைப்படுத்தப்படுகிறதே?**

அந்த மாதிரியான வகைப்படுத்தல்களுக்கு நான் எந்த முக்கியத்துவமும் கொடுப்பதில்லை; அவை எழுத்தாளர்களால் உருவாக்கப்படுபவை அல்ல என்பதால். அவை வேறு எங்கிருந்தோ வருவதால் அவை ஆப்பிரிக்க எழுத்தினைப் பற்றி விவரிக்கின்றனவா என எனக்கு ஆழமான சந்தேகங்கள் உண்டு. ஏனெனில் ஒரு ஆப்பிரிக்க எழுத்தாளருக்கு எதார்த்தத்தையும் மாயத்தன்மையையும் ஒரே விஷயத்தின் இரண்டு தூண்களாகக் கருதுவது மிகக் கடினமானது. ஏனெனில் அத்தகைய எல்லைகளைத் தொடர்ந்து கடப்பதிலிருந்துதான் நாங்கள் எவ்வாறு உணர்கிறோம் சிந்திக்கிறோம் என்பது



வருகிறது. வகைமைகளுக்கிடையே எல்லைகளைக் கடக்கும் இந்த ஆசை ஆப்பிரிக்காவுக்கு மட்டும் உரியதன்று. மனிதர்கள் என்ற அளவில் அது நமது பொதுவான ஆசையாகும்.

**எல்லைகளைத் திணிப்பதிலுள்ள ஆர்வம் பற்றியும் மனித உள்ளுணர்வு அவற்றைக் கடப்பது பற்றியும் "த ட்யூனர் ஆப் சைலன்சஸ்" பேசுகிறது. அந்தரங்கமான ஒரு சரணாலயத்திற்குள் தன்னையும் தனது குழந்தைகளையும் தனிமைப்படுத்திக்கொள்ள ஒரு தகப்பன் மேற்கொள்கிற முயற்சிகளைப் பற்றியது அந்நூல். அவ்விடத்தை அவர் "ஜெசூசலேம்" என பெயரிடுகிறார் அக்குழந்தைகளின் தாயின் மரணத்திற்குப் பிறகும், அக்குழந்தைகள் வேறு இடம் கிளம்ப விரும்பும் ஆசையினால். இச்செயல் வேகத்தைப் போர்ச்சுக்கலிலிருந்து வரும் மார்த்தா என்ற பெண்ணின் வருகை குலைக்கிறது. காலனியத்தை ஏற்படுத்தும் ஒரு நாடு என்ற வகையில் போர்ச்சுக்கல் அதற்கேயுரிய எல்லைச் செயல்பாடுகளை மொசாம்பிக்குடன் கொண்டுள்ளது. ஒரு கட்டத்தில் லிஸ்பன் நகரை "ஐரோப்பிய நகரங்களிலேயே மிகவும் ஆப்பிரிக்கத் தன்மையுடையது" எனக் குறிப்பிடுகிறீர்கள். இந்த மக்களைப் பற்றிய கதையைக் கூறுவதில் எது உங்களுக்கு சுவாரஸ்யம் தருவதாக இருந்தது?**

எனது நூல்கள் அனைத்திலும் அடையாளத்தைத் தேடுவதுதான் முக்கியப் பிரச்சனையாக இருக்கிறது. ஒருவரது அடையாளத்தை வரையறுப்பது மிகவும் அத்தியாவசியமானதாக இருந்த ஒரு நாட்டில், ஒரு வரலாற்றுத் தருணத்தில் நான் பிறந்தேன். அடையாளம் என்பது எப்போதும் கானல் நீராக இருக்கிறது. ஆனால் மொசாம்பிக்கில் கடந்த 30 ஆண்டுகளில் நாங்கள் யார் என்பது பற்றியும் எதனுடன் நாங்கள் உறைகிறோம் என்பது பற்றியும் எங்களுக்கு ஒரு தெளிவான வரையறை அளிக்கப்பட்டது. தேசிய அடையாளம் எங்களிடம் ஒரு பயணத்தைக் கோரியது பழங்குடியில் இருந்து நாட்டிற்கு. இனம் மற்றும் பாலினம் என்பதிலிருந்து ஒரு ஒன்றுபட்ட உட்பொருள் என்பதற்குப் பயணித்தோம். எல்லைகளைக் கடத்தலால் விளைந்தது இப்படியான ஒரு பயணம். ஆனால் அனைத்து உயிரினங்களும் எல்லைகளால் வரையறுக்கப்பட்டவை என்ற நிஜத்தால் அது எதிர்க்கப்படுகிறது. ஒரு உயிரியலாளர் என்ற எனது தனிப்பட்ட செயல்பாட்டின் அளவில் இயற்கை எவ்வாறு இந்த எல்லைகளுக்காக ஏங்குகிறது என்பதை நான் தொடர்ந்து பார்க்கிறேன். ஆனால் அவை இயற்கையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நாம் நமது சமூகத்தில், சமரசம் மற்றும் தற்செயல்கள் என்பனவற்றிலிருந்து உருவாக்கப்படும் ஊடு கடத்தும் இயல்புள்ள எல்லைகளைக் கட்டுவதில் சிரமமாக உணர்கிறோம். தி ட்யூனர் ஆப் சைலன்சஸ் நூலிலிருந்து முக்கியக் கதாபாத்திரங்கள் நமது எல்லைகளுக்குள் மேற்கொள்ளப்படுகிற இந்த இயக்க எல்லையின் காவியப் பயணத்தைப் பகிர்ந்துகொள்கின்றன.

**ஆண்களுக்கு எல்லைகளை உருவாக்குவதிலும் உடைப்பதிலும் பெண்கள் வகிக்கும் பங்கு என்ன என்று நீங்கள் கருதுகிறீர்கள்? உண்மையில் மார்த்தா வரும்போதுதான் ஜெசூசலேம் (ஜெருசலேம் அல்ல) உடையத் துவங்குகிறது. மேலும் நாவலின் முதல் வரியினால் நான் துணுக்குற்றேன் - "முதல் முதலாக ஒரு பெண்ணை நான் பார்த்தபோது எனக்கு பதினோரு வயது, அந்தத் திடீர் ஆச்சரியத்தில் ஆட்பட்ட நிலையில் எனக்குக் கண்ணீர் முட்டியது".**

பெண்களின் பங்கு உலகளாவிய தன்மை உடையதென நான் நினைக்கிறேன். ஒரு கலாச்சாரத்தையும் சமுதாயத்தையும் தொடர்ந்து மறு உருவாக்கம் செய்கிற சமூக இழைகளுடன் அவர்கள் ஆண்களைவிட அதிக நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளனர். மொசாம்பிக்கைப் பொறுத்தளவில், அன்றாட உயிர் வாழ்தல் முதலியவற்றில் நம்ப முடியாதளவிற்குப் பெண்கள் துடிப்புடன் இருக்கின்றனர். பதினாறு ஆண்டுகள் நடந்த உள்நாட்டு யுத்தத்திற்குப் பிறகு அமைதியையும் சமூகத்தையும் 'மறுகட்டமைப்பு' செய்ததிலும் அவர்கள் அடிப்படைப் பங்கினை வகித்தனர். மொசாம்பிக்கில் எங்களிடம் ஒரு சொலவடை உண்டு - பெண்களுக்குக் குலம் இல்லை. எல்லைகளைத் தாண்டி மிகவும் ஒட்டுறவான இணக்கமான அடையாளங்களை உருவாக்குவதில் பெண்களுக்குள்ள திறனை இந்தச் சொலவடை



வெளிப்படுத்துகிறது. ஒரு எழுத்தாளராக நான் பெண் கதாபாத்திரங்களுக்கு மிகவும் முன்னுரிமை தருகிறேன், அவை மிகவும் சிக்கலானதும் புதிரானதுமான ஆளுமைகளுக்கு இடந்தருவதால்.

**வாழ்நாள் முழுவதும் தன்னுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் அடையாளத்துடன் வாழ்தல் என்ற சுமையிலிருந்து விடுவித்ததால், மார்த்தா, ஜெகூசலேமை விடுதலை அளிக்கிற ஒன்றாகக் கண்டாள். ஒரு கட்டத்தில் அவள் சொல்கிறாள், "ஒரு பொய்யை வாழவேண்டுமெனில், அது எங்களுடைய பொய்யாக இருக்கட்டும்". அவள் சொல்வது சரிதானா?**


நமது அடையாளம் என நாம் நினைப்பதை நிலைநிறுத்துகிற நம்பிக்கைகள் பெரும்பாலும் கருத்தியல்ரீதியிலான கட்டமைப்புகளாக இருக்கின்றன. நம்மைப் பற்றியும் சமூகத்தில் நமது இடம் பற்றியும் பிம்பத்தை உருவாக்குகிற அவை மாயத்தோற்றங்களாகும். ஒருமுறை, ஐரோப்பாவில் நடந்த ஒரு கருத்தரங்கின்போது ஆப்பிரிக்கரைப் பற்றிய ஒரு குறிப்பிடத்தகுந்த அம்சத்தைக் கூறுமாறு என்னிடம் ஒரு இளைஞன் கேட்டான். நான் வேறொரு கேள்வியைப் பதிலாகக் கேட்டேன் - அவனது கருத்துப்படி, ஐரோப்பியனின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் எது? நாம் அடையாளம் என்பதற்கு அடிப்படையாகக் கொள்ளத் தேர்ந்தெடுக்கிற எந்த அம்சத்தைப் பற்றியும் இதே கேள்வியை நீங்கள் கேட்கலாம். ஏனெனில் அடையாளங்கள் வரலாற்றுப்பூர்வ மற்றும் கலாச்சாரக் கண்டுபிடிப்புகளாக இருக்கின்றன.

**நமது அடையாளங்களைக் கட்டமைப்பதில் நினைவின் பங்களிப்பு குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? ஹெர்மன் ஹெஸ்ஸேயிலிருந்து, நாவலின் தொடக்கத்தில் வரும் குறிப்பு, சில குறிப்பிட்ட அடையாளங்களுக்குள் நினைவு நம்மை ஒரு வலையில் வீழ்த்துகிறது என்பதைக் குறிப்பாகக் காட்டுகிறது. "மிகக் குருட்டுத்தனமானதும் பெரும் வன்முறையானதுமான மனித ஆசைகளைப் பிரதிபலிக்கிற படிமங்கள் உடைய ஒரு புத்தகம் என்பதைவிடப் பெரிதாக உலகின் முழு வரலாறு இருக்கவில்லை: மறப்பதற்கான ஆசை". தகப்பன் விட்டாலிகோ கூறுவது அதை எதிரொலிப்பதாக இருக்கிறது, "காலம் ஒரு விஷம்... அதிகமாக**

நான் நினைவுபடுத்திக்கொள்ளக் கொள்ள, நான் உயிர் வாழ்வது குறைகிறது".

நாம் நினைவுகளால் உருவாக்கப்பட்டவர்கள் என்பது நமக்குத் தெரியும். ஆனால் எந்தளவிற்கு நாம் மறதியினால் உருவாக்கப்பட்டவர்கள் என்பது பற்றி நமக்குத் தெரியாது. மறத்தலை நாம் ஒரு இல்லாமையாக ஒரு வெற்றிடமாக ஒரு இன்மையாகக் கருதுகிறோம். ஆனால் பல விஷயங்களில் நரம்பியல் நோய் என்பதன்றி, மறத்தல் ஒரு செயல்பாடாக இருக்கிறது. நினைவுகூர்தலைப் போன்ற அதேயளவு முயற்சியைக் கோரும் இது, ஒரு விருப்பமாக / தேர்வாக இருக்கிறது. இது தனிநபர்களுக்கும் சமூகங்களுக்கும் ஒரே அளவில் பொருந்தக்கூடியது. நீங்கள் மொசாம்பிக்கிற்குச் சென்றால், போர்க்காலங்களை மறந்துவிட மக்கள் முடிவெடுத்துவிட்டார்கள் என்பதை நீங்கள் காணமுடியும். அது ஒரு விடுபடல் அல்ல. அது கொடூரமான காலகட்டங்களை மறப்பதற்கான ஒரு வேண்டாவெறுப்பான முயற்சி. ஏனெனில் இந்தக் கொடூரம் கடந்தகாலத்தைச் சேர்ந்தது மட்டுமின்றி நமது நிகழ்காலமாக மீண்டும் மாறக்கூடும் என மக்கள் அஞ்சுகின்றனர். இன்னும் சொல்வதானால், மொசாம்பிக்கின் கிராமப்புறப் பகுதிகளில் இப்போதும் காலத்தின் நேர்கோடற்ற தன்மை பற்றிய கருத்து வலுவாக இருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில் இறந்தகாலம் கடந்து சென்றுவிடவில்லை.

நினைவின் மீதான மொழியின் தாக்கம் குறித்தும் அப்புத்தகம் நிறைய விவாதிக்கிறது. தனது இளைய மகனைக் கட்டுப்படுத்தும் வழிகளில் ஒன்றாக, கதைச்சொல்லி விட்டாலிகோ அவனை வாசிக்கவும் எழுதவும் விடாமல் செய்ய முயற்சிக்கின்றான். அதேபோலச் சில குறிப்பிட்ட வார்த்தைகளையும் பெயர்களையும் பயன்படுத்தாமல் இருப்பதன் மூலம், அவனது கடந்தகாலத்தைச் சூழ்ந்திருக்கும் தீவிர உணர்வுகளைக் கட்டுப்படுத்த அந்தத் தகப்பன் முனைகிறான். எனினும் தனது இளைய மகனை அவனது அமைதியை எழுப்புகிற ஆற்றலுக்காக அத்தகப்பன்




பாராட்டவும் செய்கிறான். தலைப்பிற்குரிய "டியூனர் ஆப் சைலன்சஸ்" அவன்தான். அவர்களது சொல்லாடலில் அமைதியின் பங்களிப்பு என எதை நீங்கள் பார்க்கிறீர்கள்?

ஒரு குறிப்பிட்ட விதமான சூழ்நிலையின் மீது ஒரு பெயரைத் திணிப்பதற்கான முயற்சிதான் அமைதி என்பது. ஒலியற்றதை / ஒலியின்மையை நாம் காணுகிற இடத்தில் அனைத்துவிதமான சாடைக்குறிப்புகளையும் சமிக்ஞைகளையும் பிற உயிரினங்கள் காண முடியும். நான் பிறந்து வாழ்ந்துகொண்டிருக்கும் சமூகத்தில் அமைதி ஒரு இன்மையாகப் பார்க்கப்படுவதில்லை. சொல்லப்போனால், ஒரு குழுவினர் உரையாடிக்கொண்டிருந்தால் திடீரென்று தோன்றுவதாக இருக்கிறது அமைதி. அது ஐரோப்பாவில் நிகழ்ந்தால் உடனடியாக ஒரு அசூயையை அது உருவாக்குகிறது. வெற்றிடம் பற்றிய பயம் எழுகிறது. அதை மறைக்க யாராவது ஒருவர் தனக்குத் தோன்றுவதைச் சொல்லுவார். மொசாம்பிக்கில் அமைதிகளும் உரையாடலின் பகுதியாக இருக்கின்றன. ஆனால் அந்தக் கணங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு மக்கள்

அஞ்சுவதில்லை. ஏனெனில், அவர்களைப் பொறுத்தளவில் அமைதி என்பது ஒரு இன்மை அல்ல, அப்போதுதான் இறந்துபோனவர்களும் தொலைந்துபோனவர்களும் எங்களுடன் தொடர்பு கொள்வார்கள். எனது குழந்தைப் பருவத்திலிருந்து அமைதியைக் குறித்து அஞ்சாமல் இருக்கவும், மேலும் வார்த்தைகளின் இன்மையில் மட்டும் இயம்பப்படும் ஒலிகளையும் இசையையும் கவனிக்கவும் நான் கற்றுக்கொண்டேன்.

**ஒன்றை "அமைதி" என்று அழைப்பதை, நம்மால் விளக்கமுடியாத ஒன்றின் மீது ஒரு பெயரைத் திணிப்பது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதேபோல, உங்கள் புனைவில் சர்ரியல் கூறுகளை நீங்கள் பயன்படுத்துவதை, பெயரிடுவதை எதிர்க்கும் விஷயங்களைப் பற்றி பேசுகிற ஒரு வழியாக நீங்கள் பார்க்கிறீர்களா?**

நம்மால் புரிந்துகொள்ள முடிகிற சட்ட திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஊகிக்கக்கூடிய ஒரு உலகை நம்பும்படி நாம் அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம். அதுபோல, அந்த நிலைமாறாததும் ஊகிக்கக்கூடியதுமான உலகிற்குத் தொடர்பற்ற எதையும் பற்றிப் பதற்றமடைவதற்கும் நாம் கற்றுக்கொடுக்கப்பட்டிருக்கிறோம். ஆப்பிரிக்காவில் அல்லது உலகில் எந்தப் பகுதியாக இருந்தாலும், சட்டங்கள் மற்றும் துயரங்கள் இணக்கம் மற்றும் கீழ்ப்படியாதிருத்தல் ஆகியவற்றை ஒரே சமயத்தில் அடிப்படையாகக் கொண்டிருக்கிற ஒரு உலகின் முழு சிக்கல் தன்மையையும் பயமின்றி ஏற்றுக்கொள்ளக் கதை சொல்லுதல் நமக்கு உதவ முடியும். ஆனால் இந்தக் கதைகள் நம்மைக் கவரும்போதிலும், பயம் இன்னமும் இருக்கிறது. கலை என்ற வார்த்தையை அந்தக் கணங்களுக்குப் பயன்படுத்துவதன் மூலம் அவற்றை நாம் தனிமைப்படுத்திச் சமநிலைப்படுத்த வேண்டியுள்ளது, படைப்பூக்கத்தின் சுவையார்ந்த தருணங்களாக. இவ்வாறாக, வேண்டுமென்றே நாம் படைப்பூக்கத்தைப் பகுத்தறிவுச் சிந்தனையிலிருந்து பிரிக்கிறோம்.

அப்புத்தகத்தின் ஆங்கிலத் தலைப்பு எனக்கு ஆர்வமளித்தது. போர்ச்சுக்கீசிய மொழியில் அது Jesusalem என திரும்பத் திரும்ப வருகிற இடப்பெயர்; ஆங்கிலத்தில் அது "Jezoosalem" என அந்தத் தகப்பனின் புகலிடமாகக் கூறப்படுகிறது. ஆனால் ஆங்கிலத்தலைப்பு "The Tuner of Silences" (தி டியூனர் ஆஃப் சைலன்ஸ்) என்பது பார்வை மையத்தைத் தகப்பனிடமிருந்து மகனுக்கு மாற்றுகிறது, மேலும் ஒரு இடம் என்பதிலிருந்து அதிகமாக ஒரு கருத்து என்பதற்கும். அதை நீங்கள் விரும்புகிறீர்களா?


ஆரம்பத்திலிருந்து அத்தலைப்பு போர்ச்சுக்கீசியப் பதிப்பில் வரிசையில் இருந்தது. மேலும் எனது இரண்டாவது தெரிவாக அது இருந்ததால் அது வைக்கப்பட்டது. போர்ச்சுக்கீசிய மொழியில் அது மிகவும் கவித்துவத்துடன் இருப்பதால் நான் அதைப் பயன்படுத்தவில்லை. ஆனால் அதை நான் விரும்புகிறேன், நான் ஒரு கவிஞன்.

**முடிவாக, உங்கள் பெயர் உங்களுக்கு எப்படி வந்தது என்பதைக் கேட்க விரும்பினேன். பூனைகள் மீதான உங்களின் பிரியத்திலிருந்து அது வந்தது என நான் படித்திருக்கிறேன். போர்ச்சுக்கீசிய மொழியில் Meow என்பது Mior எனப்படும். அது உண்மையா?**

ஆமாம், அது உண்மைதான். எனக்கு இரண்டு வயதாக இருக்கும்போது என் அம்மா உணவு தருகிற எங்கள் வராந்தாவிற்கு எல்லாவிதமான பூனைகளும் வந்தன. நான் வெறுமனே அவைகளை நேசிக்க மட்டும் செய்யவில்லை என்றும், நான் என்னை அவைகளில் ஒன்றாகக் கருதிக்கொண்டேன் என்றும் என் பெற்றோர் வழக்கமாய்க் கூறுவதுண்டு. எனவே ஒருநாள், எனது பெயர் இனி அன்டோனியோ அல்ல, மியா (Meow) என அறிவித்தேன். அதை அவர்கள் பெரிதாக எடுத்துக்கொண்டார்கள். மேலும் என் பெயரை நானே தேர்ந்தெடுக்கக் கிடைத்த அந்த வாய்ப்பு, என் முதல் புனைவுப் படைப்பின் துவக்கமாக இருந்தது. எனக்கு ஒரு கதாபாத்திரமும் கிடைத்தது, அந்த அவனுக்கான கதை கூறலின் மீது இன்னமும் உழைத்துக்கொண்டு இருக்கிறேன்.

சிறுகதை

சாஸ்தா




# கோபங்கள்

“இதோ பார்... முன்னாலயே கிளம்பிப் போய்ச் சீக்கிரம் வர்றதுன்னா கிளம்பு. இல்லைனா போகவே வேண்டாம்” என்று அவன் விரட்ட, “இதோ... ஒரு நிமிஷம்...” என்று அவள் கிளம்புகிற பதட்டத்தில் கைகளில் கிடைத்ததை உருட்டுகிறாள்.

சில நிமிடங்கள் கழித்து அவன் எழுந்து வந்து, “இன்னும் எவ்வளவு நேரம்தான் மேக்கப் பண்ணுவே? எவனுக்குக் காட்டப் போறே உன் அழகை...?” என்று அவளைப் பார்த்துக் கத்தினான்.

“பொட்டு தேடினேன்... அதுக்குள்ளே அவசரப்படுறீங்களே... சரி. சரி. பொட்டு வச்சுக்க வேணாம். கிளம்புங்க...” என்றாள் அவள்.

“ஆமா... ஏற்கனவே முகம் அழகு வழியுது. இதிலே பொட்டு வேற இல்லைன்னா அவ்வளவுதான். எல்லாக் கண்றாவியையும் வச்சுக்கிட்டுச் சீக்கிரம் கிளம்பித் தொலை” என்றான் அவன்.

“எது சொன்னாலும், எது செஞ்சாலும் குத்தம்தானா...” என்று அவள் முணுமுணுத்து பொட்டைத் தேடினாள்.

“ஏதாவது மொணமொணத்தையோ மூஞ் சியிலேயே குத்துவேன்” என்று கத்திவிட்டுப் போய் வாசலில் நின்றுகொண்டான்.

திண்ணையில் விளையாடிக்கொண்டிருந்த மகனிடம், “டேய் மணி... இன்னும் என்ன விளையாட்டு? நாங்க கிளம்பியாச்சுல்ல...?” என்று அவன் கைகளைப் பிடித்து இழுத்துக்கொண்டு, அவசர அவசரமாய்க் கதவைப் பூட்டிக்கொண்டு ஓடி வந்து, தெருவில் முன்னால் போகும் கணவனோடு சேர்ந்துகொண்டாள் இவள்.

பஸ்ஸில் கணவன் நிற்க, அவள் மணியோடு ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்தாள். சினிமாவுக்குப் போகும்போது இருப்பதை விட இப்போது மிகக் குதூகலமாய் இருப்பதாக உணர்ந்தாள். ஆனாலும் மணியின் தொந்தரவால்தான் அவள் பீச்சுக்குப் போகவே அரை மனதோடு சம்மதித்துக் கிளம்பினாள்.

‘என்னவோ இன்னிக்கு இவர் ஆபீஸ்ல இருந்து வந்ததிலிருந்து சிடுசிடுவென்று விழுந்துகொண்டிருக்கிறார்’ என்று

நினைத்துக்கொண்டாள். அவன் எப்போதும் அப்படித்தான். அலுவலகத்தில் ஏற்படுகிற கோபத்தை வீட்டுக்கு வந்து இவளிடம் காண்பிப்பான். அதை ஒன்றும் சொல்லாமலேயே சமாளிப்பது அவளுக்கே பழக்கமாகி இருந்தது.

பஸ் நின்றதும் இறங்கினார்கள். கடற்கரைச் சாலையில் கார்களும், காந்தியும், கண்ணகியும் காற்று வாங்கினார்கள். யுவன்களும், யுவதிகளும் உரசிக்கொண்டு சாஃப்டி ஐஸ்கிரீம் சாஃப்டிக்கொண்டிருந்தார்கள்.

மணி கடற்கரை மணலைப் பார்த்ததும் உற்சாகம் தாளாமல் மணலில் ஓடினான்; விழுந்தான்; எழுந்தான். அவனை அதட்டிக்கொண்டே இவர்களும் கடலை நோக்கி நடந்தார்கள்.

இந்தப் பக்கம் குழந்தைகள் கவலையற்று விளையாடின. 'நீ கொடுத்த பிசாத்து மூணு ரூபாய்க்குக் குதிரை இவ்வளவு ஓடினது போதும்' என்று நினைத்த குதிரைக்காரச் சிறுவன் அடித்த ஒரு 'விசிலு'க்கு, ஒரு குதிரை சுவிட்ச் போட்டது போல எபௌட் டர்ன் ஆனது.

அந்தப் பக்கம் "அ...லாட்டு... லாட்டு...சார். எத எடுத்தாலும் ஒரு ரூபா. லாட்டு லாட்டு சார்..." என்று ஒருத்தன் லாட்டிக்கொண்டிருந்தான். பக்கத்தில் ஏழெட்டு கமல்ஹாசன்களும், ரஜினிகாந்த்களும் ஸ்ரீதேவிகளைத் தேடி அலைந்தார்கள்.

"அப்பா... அந்தத் துப்பாக்கி வாங்கிக் குடேன்..." என்று ஆரம்பித்தான் மணி.

"எல்லாம் திரும்பி வீட்டுக்குப் போகும்போது வாங்கிக்கலாம். பேசாம வா..." இழுக்கப்பட்டு, தயங்கிப் போனான் மணி.

இவர்கள் மூவரும் அலைகளில் போய் நின்றார்கள். 'இந்த அலைகளும் தன் கணவனைப் போலக் காரணமேயில்லாமல் யார் மீதோ கோபம் கொண்டு சீறுகின்றன' என்று நினைத்துக்கொண்டு, காலில் விழுந்த அலைகளை 'நீடூழி வாழ்க' என்று ஆசீர்வதித்தாள்.

கடலில் நின்றிருந்த கப்பல்களைப் பார்த்ததும் மணி சொன்னான் "அப்பா, நாமளும் ஒரு நாள் கப்பல்ல ஏறிப் போகலாம்பா."

"சரி."

"எப்போ போலாம்?"

"அப்புறமா போலாம்டா."

அவள் அவர்களது பேச்சில் ஈடுபாடு கொள்ளாமல், சிறுவன் ஒருவனும் அவனுடைய பொமரேனியன் நாயும் அலைகளைத் துரத்தி ஓடுவதையும், அலைகளால் துரத்தப்பட்டு ஓடுவதையும் பார்த்து ரசித்தாள். அதற்கு அப்பால் ஒரு இளைஞன் தன் செருப்பைக் கடலில் வீசியெறிந்து விளையாடுவதைப் பார்த்தாள்.

"கப்பல்லாம் எங்கேப்பா போகும்?" என்று மணி மறுபடி ஆரம்பித்தான்.

"அந்தமான், சிங்கப்பூர் எல்லாம் போகும்."

"எப்படி போகும்?"

"நேரா போய் அதோ தெரியுதில்ல... கோடு மாதிரி கடல். அதற்கும் அந்தப் பக்கம் போகும்."

"அங்கேயும் கடல்தானே இருக்கு. எங்க இருக்கு சிங்கப்பூர்?"

"அது வந்து... சும்மா தொண தொணன்னு பேசிட்டு இருக்காம வேடிக்கை பார்."

பதில் சொல்ல முடியாமல் அவன் தவிப்பதைப் பார்த்து இவளுக்குச் சிரிப்பு வந்தது. மணியின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக, "இங்கே பார்..." என்று அழைத்து, தன் காலில் இருந்த ஸ்லிப்பரைக் கழட்டிக் கடலில் வீசினாள்.

"அறிவு கெட்டவளே... போட்டுக்கிட்டு இருக்கிற செருப்பை கழட்டி வீசறியே, உனக்குக் கொஞ்சமாவது மூள இருக்கா? அது அப்படியே போச்சுதுன்னா உங்க அப்பனா புது செருப்பு வாங்கி தருவான்?" என்று இவன் கத்தினான்.

ஓவியங்கள்: அழ.ரஜினிகாந்தன்



“கத்தாதிங்க. தானா அது வரும்” என்று அவனைப் பார்க்காமல் சொல்லிவிட்டு, “இதோ வந்துருச்சு பாருங்க” என்று அலைகள் கொண்டு வந்து தந்த செருப்பை எடுத்து, அவன் மூக்கை உடைக்கிறாற் போல் மறுபடியும் செருப்பைக் கடலில் வீசினாள்.

அவன் முறைத்துப் பார்த்துவிட்டு அலைகளில் தப்தப்பென்று கால்களை அடிக்கிற மணியிடம் கத்தினான். “குதிக்காதே. தண்ணி தெறிச்சு பேண்ட் சட்டை எல்லாம் நனையுது பாரு...”

அவள் கடலில் வீசின செருப்பு மீண்டும் மிதந்து திரும்பி வந்தது. அவளிடம் “இந்தா... மணி கையைப் பிடிச்சுக்கோ. நான் போய் அங்கே உட்கார்ரேன்” என்று சொல்லிவிட்டு நடந்து சற்றுத் தள்ளிப் போய் மணலில் உட்கார்ந்தான்.

அவன் நகர்ந்ததும், “அவர் கிடக்கார். நீ குதிடா ராஜா...” என்று மணியின் காதோரம் சொல்லி, அவன் அலைகளில் குதிப்பதில் சிரித்து சந்தோஷப்படுவதைப் பார்த்துத் தானும் சந்தோஷப்பட்டாள்.

“அம்மா என்கிட்டே குடுமா. நானும் செருப்பை வீசுறேன்” என்று அவள் செருப்பைக் கேட்டு வாங்கிக் கடலில் வீசி எறிந்தான் மணி.

கொஞ்சம் தள்ளி ஒரு இளைஞன் கடலுக்குச் சற்று உள்ளே போய்க் குளிப்பதை மணிக்கு வேடிக்கை காட்டினாள். ஒரு பெரிய அலை இவர்களை நனைத்துவிடுவது போல் வருவதைப் பார்த்து மணியோடு பின் வாங்கினாள். அந்த அலையில் அவளுடைய செருப்பு வரவில்லை.

‘செருப்பு எங்கே’ என்று பார்வைகளால் மேய்ந்தாள். ஒன்றும் கண்களில் மாட்டவில்லை. அங்கேயும் இங்கேயுமாகக் கொஞ்சம் நடந்து பார்த்தாள்.

“என்னம்மா?” மணி கேட்டான்.

“என்னடி...?” என்று அங்கிருந்தே கத்திக் கேட்டான் இவன்.

“செருப்பு வரலைங்க இன்னும்...” என்றாள் தேடிக்கொண்டே.

அவன் எழுந்து வந்து, "நான்தான் அப்பவே சொன்னேனே... நல்லா தொலையட்டும்" என்று அவளுக்கு வெறுப்பேற்றினான்.

"இல்லே... மணி கொஞ்சம் தூரத்திலே வீசிட்டான். அதுதான்..." என்று சொல்லிவிட்டு மீண்டும் கொஞ்சம் அலைந்து தேடி, பின் கடைசியில் காலை வாரிவிட்ட செருப்பையும், கடலையும் சபித்தாள். 'இந்த மனுஷன் குதிப்பாரே கிடந்து' என்று மனதிற்குள் தவித்தாள்.

"இந்த ஒரு செருப்பையும் எதுக்குப் போட்டுக்கிட்டு நிக்கற? அதையும் வீசி எறிஞ்சிட வேண்டியதுதானே? உடம்பு முழுக்கத் திமிருடி உனக்கு. இனிமே நான் உனக்கு செருப்பு வாங்கிக் கொடுத்தா என்னை 'ஏண்டா பயலே' ன்னு கேளு" என்று செருப்பைத் தேடுவதில் உதவி செய்யாமல் அவளுக்கு எரிச்சலூட்டினான்.

அவளுக்கு அழுகை வந்தது. 'இவர் புத்தி தெரிஞ்சிருந்தும் விளையாட்டாக இருந்துவிட்டேனே... என் புத்திய காணாமல் போன செருப்பாலேயே அடிச்சுக்கணும். இந்த ஜென்மம் முழுக்க சொல்லிக் காண்பிப்பாரே... இவர் சொன்னா மாதிரி அப்பா வந்தால்தான் இனிமே செருப்பு வாங்கி தரச் சொல்லணும்' என்று மனசுக்குள் புலம்பினாள்.

கடற்கரைச் சாலைக் கட்டிடங்களுக்குப் பின் சூரியன் ஒளிந்துகொள்ள, இருட்டத் தொடங்கியதால் நீலக் கடல் கொஞ்சம் கொஞ்சமாகக் கருங்கடலாகிக் கொண்டிருந்தது. அவள் மணியை இழுத்துக்கொண்டு கரைக்கு வந்து அவன் அருகே உட்கார்ந்தாள்.

மெதுவாக, "கோவிச்சுக்காதீங்க. இனிமே செருப்பு வாங்கித் தாங்கன்னு உங்களைக் கேட்கவே மாட்டேன்" என்றாள்.

"பேசாதே... எனக்கு வாயிலே கன்னா பின்னான்னு வருது" என்று சொல்லி முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

அவள் ஏதும் பேசாமல் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து இருந்த ஒரு புதுக் கணவன் தன் புது மனைவியிடம் ஏதோ சொல்லிச் சிரிப்பதை அநியாயமான பொறாமையுடன் பார்த்தாள்.

மணி பொந்துக்குள்ளே இருந்து வெளியே வருகிற நண்டுகளை விரட்டி விளையாடிக்கொண்டிருந்தான். 'குட் ஈவினிங்' என்று சொல்லிக்கொண்டு சந்திரன் கடலுக்குள்ளே இருந்து வந்த அழகை அவளால் ரசிக்க முடியவில்லை. ஆனால் அவன் ரசிக்கத் தெரியாமல் வேறெதையோ பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒரு ஐஸ் வண்டிக்காரன் அவர்களுக்குப் பக்கத்தில் வண்டியைத் தள்ளிக்கொண்டு போனான்.

"அப்பா... ஐஸ்கிரீம் வாங்கித்தாப்பா" என்று மணி பக்கத்தில் ஓடி வந்தான்.

"வேணாம். உனக்கு ஜலதோஷம் பிடிக்கும்."

"ஒன்னும் வராதுப்பா..."

"வாங்கித்தான் கொடுங்களேன், ஆசையா கேட்கிறான் இல்ல?" என்று அவள் குறுக்கிட்டாள்.

"நீ ஏதாவது பேசினியோ மூஞ்சி மொகரையெல்லாம் பேத்துப் போடுவேன்" என்று அவன் கத்தின கத்தலில், அவள் வாயை மூடிக்கொண்டு தலை திருப்பிக் கடலைப் பார்த்தாள்.

"அப்பா ஐஸ்கிரீம் போகுதுப்பா. சீக்கிரம் காசு கொடுப்பா" என்று மணி சிணுங்க ஆரம்பித்தான்.

"சொன்னா கேளு. ஐஸ் உனக்கு ஒத்துக்காது. கடல் காத்து வேற. உடம்புக்கு எதாவது வந்துச்சுன்னா டாக்டர்கிட்ட காட்ட என்கிட்ட பணம் இல்லை" என்றான் கடுகடுப்புடன்.

"ஜொரம்லாம் வராது. ஒன்னே ஒன்னு வாங்கிக் கொடுப்பா" என்று இவனுடைய சட்டைப் பையில் மணி கையை விட்டுக் காசையெடுக்க முயற்சித்தான்.



சட்டைப் பையை இழுத்ததில் சரிந்து, அதனாலும் எரிச்சல் பட்டு, “சொன்னா கேட்க மாட்டே...?” என்று மணியின் கையைப் பிடித்து இழுத்து, முதுகில் ஓங்கி ஒரு அறை வைத்தான்.

அடித்ததற்காகவும், ஐஸ்காரன் போய்விட்டதற்காகவும் சேர்த்து மணி அழ ஆரம்பித்தான். கை கால்களை உதைத்துக்கொண்டான்.

‘இந்த மனுஷன் புத்தி தெரிஞ்சிக்காம, சனியன் இது வேற உயிரை வாங்குது பாரு’ என்று நினைத்துக்கொண்டு, “சனியனே... என்ன அடம்? அப்பாதான் வேண்டாம்னு சொன்னார் இல்ல? அழாதே. வாயை மூடு” என்று சொல்லி அவளும் மணியின் தொடையில் பலமாகக் கிள்ளினாள்.

அவன்மேல் உள்ள கோபத்தை அவளும், அவள்மேல் உள்ள கோபத்தை அவனும் மணியின் மீது கொட்டிக்கொண்டிருந்தார்கள்.

அது புரியாமல் ‘கேவலம், ஐஸ் கேட்டதற்கா இவர்கள் அடிக்கிறார்கள்?’ என்று புரிந்துகொண்ட மணி, “கிள்ளாதம்மா. எனக்கு ஐஸ் வேண்டாம். அடிக்காதேப்பா...” என்று அழுது புலம்பிக்கொண்டிருந்தான்.

கடல் இப்போதும் சீறிக்கொண்டிருந்தது...

கவிஜி



# மீட்டெடுக்கப்படும் காலங்கள்

**திரைப்படம் : Poet of the wastes**

கடைசியாக யாருக்குக் கடிதம் எழுதினீர்கள்?

யோசிக்க முடியவில்லைதானே!

ஆம்.. கடிதங்களை நாம் பிரிந்து நீண்ட காலமாகிவிட்டது. ஆனாலும் யாரோ யாருக்கோ எழுதிய கடிதங்கள் இன்னும் ஏதாவது ஒரு மூலையில் பிரிக்கப்படாமலோ.. பிரித்தும் படிக்கப்படாமலோ... படித்தும் புரியப்படாமலோ இருக்கலாம்.

பிரிக்கப்படாத கடிதங்களில் பிரியங்களோ பிரிவுகளோ தங்கள் தூரங்களை எட்டுவதே இல்லை. படித்துவிட்டுக் கிழித்தெறியப்படும் கடிதங்களில் உதாசீனம் உருகொண்டபடியே இருக்கிறது. படிக்காமலே கிழித்து வீசப்படும் கடிதங்களில் காலச்சுமை கவிழ்ந்துகொண்டிருக்கிறது.

கடிதத்தில் விரியும் மனதைக் குறுஞ் செய்திக்குள் அடக்கிவிட்ட நம்மை நாமே மீண்டும் எழுதிப்பார்க்கச் செய்யும் ஓர் அற்புதக் கடிதம் இந்தப் படம்.

எழுத்துக்களில் நீண்ட காலம் ஒன்று உண்டு. அது தீரவும் முடியாத தீர்க்கவும் முடியாத சொற்களின் வழிகளாலும் சொற்களிலும் சொல்லாத வலிகளாலும் நிறைந்து கிடக்கிறது. வார்த்தைகளின் ஊடாக மனதும் மனதின் தவிப்புக்கள் மூலமாக வாழ்வும் மனக்கண் முன் விரிந்த அக்காலத்தின் கண்ணாடி... இல்லாத காற்றிலும் அசைந்தபடியே இருக்கிறது.

கடிதங்களில் காதல் செய்யும் பாக்கியம் 80களில் பிறந்தவர்களோடு முடிந்துபோனது காலத்தின் பின் மதில்களில் பின்தங்கிவிட்ட தூரத்து நினைவுகள்.

கடிதங்களின் திறப்புக்குப் பின்னும் முன்னும் அசைபோடும் மனதுக்குள் "Poet of the wastes" (2005) என்ற ஈரானியப் படம். பார்த்த கணத்திலிருந்து எழுதிக்கொண்டே இருப்பதை யாரிடம் படித்துக் காட்ட.

அல்லது யாருக்கு எழுதிப் போட. எழுதி முடித்தும் அனுப்பாத கடிதங்கள் ஏக்கத்தில் தன்னைக் குறுக்கிக்கொண்ட இதயத்தைக் கொண்டிருக்கின்றன. எழுதி அனுப்பியும் பிரித்துப் படிக்காத கடிதங்கள் நின்றுபோன இதயத்தின் வெறுமையைக் கொண்டிருக்கின்றன.

மனம் சொல்லும் வரிகளில் தூரத்து மானுடம் நெருங்குவதாகத் தோன்றச் செய்யும் நிம்மதியைக் கொண்டிருப்பது உண்மைதான். அதன் நோக்கம் செய்திகளைக் கொண்டு சேர்த்த ஆழ்மனதின் தவிப்புகளின் தீவிரத்தை அமைதிப்படுத்துவதாக இருக்கிறது. இப்படி சொல்லிக்கொண்டே இருக்க சிறந்த வழி கடிதங்கள். மனிதனின் மாபெரும் கண்டுபிடிப்பு சொற்கள். சொற்களின் வழியே சோகமோ இன்பமோ பேரன்போ பெரும் வலியோ அது தொடர்ந்து கடத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்குத் தூது போலச் செல்லும் சொற்கள்... பின் தோகை விரிப்பதும் சோர்ந்து வீழ்வதும் படிக்கும் கைகளில் இருக்கிறது.

சிறுவயதில் எங்கள் வீட்டுக்கு வரும் கடிதங்களையெல்லாம் ஒரு ஊசி முனையில் குத்திச் சேகரிப்பது வழக்கம். வீட்டில் உள்ள உறுப்பினர்கள் யாவருக்கும் பொதுவாக அது எப்போது வேண்டுமானாலும் யாராலும் படிக்கப்படும். கடிதங்களைப் படிக்கச் சொல்லி வீடே கேட்பதில் இருக்கும் நேர்த்தி நெஞ்சுக்கினியவை. தனிக்கடிதங்கள் தலையணைக்கடியே கண்ணீர் சுரக்கும்.

விடுதியில் இருந்த காலகட்டத்தில் என் அப்பாவிடம் இருந்து வரும் கடிதங்களைப் பாக்கெட்டிலேயே வைத்துக்கொண்டு வேண்டும்போது தோன்றும்போது எடுத்தெடுத்துப் படித்த நினைவுகள் கண் முன்னே படபடவென விரிகின்றன.


தூரத்தில் இருப்பவருக்குக் கடிதங்கள் துணை. தனிமையில் கிடப்பவருக்குக் கடிதங்களே கடவுள்.

நீரோடை போலப் பயணிக்கும் திரைக்கதையில் திகைக்கவைக்கும் அன்பைச் சொட்டிக்கொண்டே செல்கிறார் இயக்குனர் 'முகமத் அஹ்மாதி'. ஈரான் படங்களில் எப்போதும் இதயத்தின் ஈரத்தை உணர முடியும். வாழ்வின் நெருக்கத்தை அதன் வழக்கத்திலேயே காண நேரிடும்போது உணர்வுக்குள் ஊடுருவும் உண்மை மகத்தானதாக ஆகிவிடுகிறது. ஒரு சோகத்தின் எல்லையை இன்னொரு சோகம் மீட்டெடுக்கும் தூரங்களைக் கடிதங்களே கட்டமைக்கின்றன. மாயப் பாலத்தின் வழியே நிகழும் இதயத் தேவைகளைக் கடிதங்களே பூர்த்தி செய்கின்றன. சொல்லொணாத் துயரத்தையும் வரி வரியாய் இறங்கும் எழுத்துக்கள் வடிகட்டும்.

எங்கெங்கோ வேலை தேடிக் கடைசியில் குப்பை பொறுக்கும் வேலைக்கு வந்திருக்கிறான் நாயகன். அறிவியல் டெஸ்ட், மத டெஸ்ட், பிறகு அரசியல் டெஸ்ட் என நாயகன் வேலைக்காகக் கலந்துகொண்ட நேர்காணலில் எதிர்கொள்ளும் பிரச்சனை உலகப் பொதுப் பிரச்சனை என்றே நம்பலாம். அது நமக்குச் சிரிப்பை வர வைத்தாலும்... அதிகார வர்க்கத்தின் அடிப்படைக் கிறுக்குத்தனங்களை நமக்குப் பளிச்செனக் காட்டிவிடுகிறது. வேலை தேடுகிறவனைக் கோமாளியாக்கும் போக்கு எங்கும் ஒரே அளவுகோலில்தான் இருக்கின்றன. கோட்டுக்கு அந்தப் பக்கம் கோட்டு போட்டு அமர்ந்திருக்கும் சூனா பானாக்கள் உலகமெங்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள். கதை நாயகன் வெள்ளந்தியாகக் கேட்கும் எந்தக் கேள்விக்கும் அதிகாரத் தொனி தன் பதிலையே பதிலாக்குகிறது.

பிறகுதான் இந்த வேலை அவனைச் சுத்தக் கம்பளம் விரித்து வரவேற்கிறது. குப்பை பொறுக்கும் தூய்மையாளர்கள் சீருடையில் நின்று உறுதி எடுத்துக்கொள்கையில் நமக்கும் உற்சாகம் பீறிடுகிறது. எந்த வேலை செய்தால் என்ன.. அதில் உறுதிப்பாடு வேண்டும் என்ற முழக்கம் நமக்கும் ஏற்படுகிறது.

இந்த வாழ்வின் சுவாரசியம் அவரவர் வேலைகள் சார்ந்து அமைந்துவிடுவதை இயல்பென்றே நம்பலாம். அப்படி



குப்பைகளினூடாக ஆர்வத்தைக் கிளறும்படி சுவாரசியத்தை உணரும்படி ஏதாவது கிடைக்கிறதா என்று பார்ப்பது வழக்கம்தான். அப்படி கிடைத்த கிழிந்த கடிதங்களை ஒவ்வொரு இரவிலும் ஒட்ட வைத்துப் படிப்பது அவனுக்குப் பிடித்தமானதாக இருக்கிறது. அப்படி ஒருநாள் அவளின் கடிதங்களை அவன் கண்டெடுக்கிறான். அது ஒரு தங்கை அவள் அண்ணனுக்கு எழுதிய கடிதம். அக்கடிதத்தைத் தாங்கி நிற்பது வாழ்வின் போராட்டக் கணங்கள். வறுமையும் சோகமும் தன்னைத் துரத்தித் துரத்திக் கிழித்துக்கொண்டிருப்பதை வரிகளாக்கி இருக்கிறாள். இவ்வாழ்வு நிலைகுலையாமல் இருக்க... உதவி கோரும் கடிதம். ஆனால் அவள் அண்ணனால் அது படிக்கப்படாமலே கிழிபடுகிறது.

கேட்கப்படாமலே அடைபடும் சொற்கள் என்ன செய்யும். வாய் விட்டு அழவும் முடியாத அதன் தர்க்கம் மௌனத்தில் மூழ்கும். அது மரணத்துக்கு ஒப்பானது. உயிர்த்தெழுதல் காலத்தின் கையில். அல்லது இப்படத்தில் வரும் குப்பை பொறுக்கும் நாயகனின் கையில். குப்பைகளின் கவிஞன் ஆக இருக்கும் அவனை அக்கடிதம் தேர்ந்தெடுத்துக்கொள்கிறது.

அண்ணனோ படிக்காமலே கிழித்துப் போட்டுவிடுகிறான்.. இது தொடர்கிறது. நாயகனோ அதை எடுத்தெடுத்து ஒட்டவைத்து ஒட்டவைத்துப் படிக்கிறான். ஆரம்பத்தில் ஆர்வமும் சுவாரசியமும்தான் அதைச் செய்யவைக்கின்றன. ஆனால் ஒரு கட்டத்துக்குப் பின் அக்கடிதத்தை உணர்வுபூர்வமாக நெருங்குகிறான். அக்கடிதத்துக்குக் காத்திருக்கவும் செய்கிறான். பிறகு அவனே அக்கடிதத்துக்குப் பதில் கடிதங்கள் எழுதுகிறான். கடிதங்களின் வழியே அந்தப் பெண்ணின் வாழ்வு அவனுக்குப் புலப்படுகிறது. அதன் இயலாமை அவனைச் சுடுகிறது. உறவு பலப்படுகிறது. கடிதங்கள் தொடர்கின்றன. காலத்தின் பிரிக்கப்படாத நான்கு பக்கமும் இரண்டு இதயங்களின் வழியே வெகு நுட்பமாக விவரிக்கப்படுகின்றன. சொற்களின் வழியே

சிதறும் தானியங்கள்.. மீண்டும் சொற்களாய் விளைந்து குவிவதுதான் பேரன்பின் சாட்சி. பெரும் வாழ்வுக்குப் பொருட்கள் வேண்டும். இதயம் நிரம்பும் சிறு வாழ்வுக்குச் சின்னச் சின்ன நம்பிக்கைகள் போதும். அதைக் கடிதங்கள் செய்கின்றன.

கடிதங்களைப் போல ஆறுதல் தரும் ஒளியைக் காண்பது அரிது. எவ்விருட்டுக்கும் அவ்வொளியின் வரிகள் அன்பெனும் சுடராய் ஆறுதல் வார்க்கும். அது ஓர் இரவின் தனிமையை.. ஒரு பகலின் நீளத்தை.. ஒரு பனிமூட்டத்தின் போக்கை.. பெரு மழையின் சாரலை... எல்லாம் கடந்து படிப்பவரையும் எழுதுபவரையும் சேர்த்துவிடுகிறது. வென்றெடுக்க வேண்டிய ஒரு துக்கத்தை... சொல்லித் தீர வேண்டிய ஒரு நிகழ்வை... வெளிப்படுத்த வேண்டிய ஒரு மௌனத்தை... பகிரப்பட வேண்டிய ஒரு பாழ்மனத்தை... கடிதங்கள் கடவுளைப் போல வென்றெடுத்துவிடுகின்றன.

படத்தின் இறுதியில் அவளின் கஷ்டத்தைப் போக்க தன் சேமிப்புப் பணத்தையெல்லாம் அவளுக்கு அனுப்பிவிடுகிறான். பின் ஒரு நாளில் அவள் அவனைத் தேடிவர நேரிடும்போது தன் அடையாளத்தை மறைத்துக்கொண்டு ஓர் எழுதப்படாத கடிதமாகவோ எழுதிப் படிக்கப்படாத கடிதமாகவோ படிக்க ஆர்வம் இருந்தும் திறக்கப்படாத கடிதமாகவோ ஒதுங்கிப் போய்விடுகிறான்.

இந்த இடத்தில்தான் மானுட அவஸ்தையை உணர்கிறோம். மானுட மர்மமும் வெளிப்படுகிறது. கடிதங்களின் மூலமாக அன்பையும் நம்பிக்கையையும் கொடுத்தவன், தன் சேமிப்பை எல்லாம் அவளின் கஷ்டங்களுக்காக அனுப்பியவன், அவளைக் காண நேரிடுகையில் தன்னை மறைத்துக்கொள்கிறான். இந்த முடிச்சில்தான் இந்தக் கதை காற்றுவெளியில் உயரப் பறக்கிறது.

இது ஒரு மகத்தான படைப்பு. எப்போது பார்த்தாலும் அதன் தாக்கம் வரி வரியாய் நிகழும். எப்படி பார்த்தாலும் அதன் சுமை நிழலென நம்மைத் துரத்தும்.

அன்புக்கு ஏங்கும் உறவுக்குக் கடிதங்கள் எத்தனை ஆறுதல் எனக் கடிதங்கள் எழுதிய கைகளுக்குத் தெரியும். கடிதங்களைப் படித்த கண்களுக்குப் புரியும். தூரங்களை இணைக்கும் பாலங்கள் கடிதங்கள்தானே ஒரு காலத்தில். அது எக்காலத்திலும் சிறந்த நினைவுகளையே கொண்டிருப்பதை உணர்ந்தவர் உணர்வார்.

படம் முடிந்த கணத்தில் யாருக்காவது கடிதம் எழுத வேண்டும் போலத் தோன்றியது.

யோசித்து யோசித்துப் பார்த்தும் யாருக்கு எழுதுவது என்று தெரியாமல் தடுமாறுகிறது இக்காலம். சிறு வயதில் அப்பாவிடம் இருந்து வந்த கடிதங்கள்... ஒரு அக்காவுக்கு அந்த அக்காவின் காதலனுக்காக நான் எழுதிக் கொடுத்த கடிதங்கள்... என் காதலிக்கு நான் எழுதிய கடிதங்கள்... அவள் எனக்கு எழுதிய கடிதங்கள்.. அவள் எனக்குக் கடைசியாக எழுதிய கடிதம்.. மாமாவுக்கு எழுதிய கடிதங்கள்... பாட்டிக்கு எழுதிய கடிதங்கள்... யாருக்கோ வந்த கடிதங்களை நான் பிரித்துப் பார்த்த நொடிகள்... ஊர்ப் பெரியவர் மாதம் ஒருமுறை என்னை அழைத்து எழுதச் சொல்லும் கடிதங்கள்.. அதைப் பற்றி யாரிடமும் சொல்லக் கூடாது என்ற அவரின் நினைவுகள் என எழுத எழுதப் பாதியிலேயே விட்டுவிட்ட கடிதங்களாகவே படுகிறது இவ்வாழ்வின் பக்கங்கள்.

எழுதப்படாத பல கடிதங்களை நினைவுக்குள் கொண்டு வரச் செய்த இந்தப் படத்தின் ஒவ்வொரு வரிகளிலும் நான் சுழன்று சுழன்று கடிதத்தின் காலங்களை மீட்டெடுக்கிறேன். குறுஞ்செய்திகளை விட்டுத் தூரம் ஓடும் எனக்கு இப்போது ஒரு கடிதம் வேண்டும். குப்பை பொறுக்கும் இளைஞனின் பேரன்பைப் போல.

அவன் பொறுக்கியது குப்பையாக இருக்கலாம். ஆனால் விதைத்தது நவமணிகள்.

**மொழி : இரானிய மொழி**

**இயக்கம் : Mohamad Ahmadi**

**ஆண்டு : 2005**

மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் சிற்றிதழ்களில் கதை, கவிதைகளை நான் தொடர்ந்து எழுதியதைப் போலவே, நாளிதழ்களில் கட்டுரை, திரை விமர்சனம், நூல் மதிப்புரை எழுதியும், கேலிச் சித்திரம் எனப்படும் கார்ட்டூன்களை வரைந்தனுப்பியும் கொண்டிருந்தேன் (நானுங்கூட ஓவியனாக்கும்!).

என்னால் எல்லா வகையான படைப்புகளையும் எழுத முடியும் என்கிற நம்பிக்கையைத் தூண்டி எழுதவைத்தவர் தோழர் அசாக் என்று அன்போடு அழைக்கும் எழுத்தாளர் அ.குமரேசன். அன்றைய மதுரை 'தீக்கதிர்' நாளிதழின் துணையாசிரியராக இருந்தார்.

செவ்வாய்கிழமையன்று மாலை, இரவு என இரு காட்சிகளில் வேறுவேறு திரைப்படங்களைப் பார்த்துவிட்டு, அன்றிரவே இரு படங்களுக்கும் விமர்சனங்களை எழுதி, அஞ்சலில் அனுப்புவேன். அத்தோடு நூல் விமர்சனம், ஒரு கவிதை, கூடவே கார்ட்டூன் ஒன்றும் வரைந்தனுப்பி வைப்பேன். மு.முருகேசன், மு.முருகேஷ், மு.மு, புதுகை சின்னமுருகு, முருகுபாரதி, முத்துமாரி மகன் எனப் பல பெயர்களில் 'தீக்கதிர்' நாளிதழின் 'வண்ணக்கதிர்' ஞாயிறு இணைப்பில் என் எழுத்துக்கள் வெளிவரும்.


அந்தக் காலகட்டத்தில் மதுரையில் இருந்து 'தினசரி' என்றொரு நாளிதழும் வெளிவந்தது. ஆறே பக்கங்கள் கொண்ட அந்த நாளிதழில் நல்ல பல கட்டுரைகளும், ஓரிரு கவிதைகளும், ஓவியங்களுடன் இடம்பெறும். எங்களூரில் இருந்த ஏ ஒன் தேநீர் நிலையத்தில் மட்டுமே 'தீக்கதிர்', 'தினசரி' நாளிதழ்களைப் படிக்க முடியும். அதற்காகவே காலையில் முதல் ஆளாகச் சென்றுவிடுவேன். தேநீர் குடிக்க அல்ல.. நாளிதழ்களைப் படிக்க.

'தினசரி' நாளிதழில் எனது கருத்துக்கள், குறுங்கட்டுரைகள் தொடர்ந்து வெளியாகின. என் கட்டுரை பிரசுரமான நாளிதழை ஆர்வத்துடன் நான் படிப்பதைத் தேநீர் கடைக்கார அண்ணன் கவனித்துவிட்டு, "இன்னிக்கும் நீ எழுதியிருக்கியா..? சரி.. சரி.. ஈவினிங் வந்து பேப்பரை எடுத்துக்க.." என்று சொல்வார். சில நேரங்களில் அவரே தனியே எடுத்து வைத்துக் கொடுப்பார்.

'தினத்தந்தி' நாளிதழில் தினமும் 'சிரிப்புப் பக்கம்' என்ற ஒன்று வெளிவரும். நகைச்சுவையோடு, அதற்கான படத்தையும் நாமே வரைந்து அனுப்ப வேண்டும். அஞ்சலட்டையில் இந்தியன் இங்கில் படத்தை வரைய வேண்டும். அதற்காகவே ஒரு இந்தியன் இங்க் பாட்டில் வாங்கி, வாரத்திற்கு நான்கைந்து நகைச்சுவை துணுக்குகளை ஓவியத்தோடு அனுப்பிவைப்பேன். அதில் ஒன்றிரண்டு பிரசுரமாகும். அதற்குச் சன்மானமாகப் பத்து ரூபாய் மணியார்டர் அனுப்பிவைப்பார்கள்.

'தினசரி' நாளிதழில் வெளிவரும் ஓவியங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. நேர்த்தியான வீச்சும் அழகும் நிறைந்த புதுமையான கோணத்தில் அடர்கோடுகளால் வரையப்பட்ட அந்த ஓவியங்களின்கீழ் அதை வரைந்த ஓவியரின் பெயர் ஸ்ரீரசா என்றிருந்தது. மனசில் ஆழமாக அந்தப் பெயரை ஒருமுறை சொல்லிக்கொண்டேன். என் சிறு கவிதையொன்று அவரது ஓவியத்துடன் வெளியான நாளில் பெரிதும் மகிழ்ந்துபோனேன். பிறகு, மூட்டா ஜர்னல், தீக்கதிர், செம்மலர் இதழ்களிலும் ஸ்ரீரசா எனும் பெயரோடு வெளிவரும் அவரது ஓவியங்களைப் பார்த்துப் பிரமித்துப்போவேன்.

அடுத்தடுத்த ஆண்டுகளில் எனக்குப் பிடித்த அண்ணனாக, கவிஞராக, தோழனாக, தமுஎகசவின் தலைவர்களுள் ஒருவராக, நான் பிறந்த புதுக்கோட்டை மண்ணின்






மாப்பிள்ளையாக எனப் பல அவதாரங்களை ஸ்ரீரசா எடுக்கப்போகிறார் என்று அப்போது எனக்குத் தெரிந்திருக்க வாய்ப்பேயில்லை.

மதுரை கோரிப்பாளையத்தில் சுப்பிரமணியன் - அழகம்மாள் தம்பதியினரின் மகனாக 1963ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் தேதி பிறந்தவர் ரவிக்குமார். எட்டாம் வகுப்பு வரை நேரு பள்ளியிலும், பிளஸ் டூ வரை செயின்ட் மேரீஸ் பள்ளியிலும் படித்தார்.

பின்னர் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பி.ஏ., படிப்பு, யாதவ கல்லூரியில் எம்.ஏ., படிப்பு எனத் தனது கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தார்.

சிறுவயதிலிருந்தே ஓவியங்களை வரைவதில் ஆர்வமுடன் இருந்த ரவிக்குமாருக்கு, ஓவியக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்பது விருப்பமாக இருந்தது. அதற்காக சென்னை, கும்பகோணம் அரசு ஓவியக் கல்லூரிகளில் சேர விண்ணப்பித்தார். சென்னையிலிருந்து அவருக்கு அழைப்பும் வந்தது. சென்னை மாநகரத்தின் நெருக்கடியான சூழல் ஒவ்வாமையை ஏற்படுத்தவே, ஓவியக் கல்லூரியில் சேராமலேயே தன்னியல்பில் ஓவியங்களை வரையத் தொடங்கி, ஓவியராக மலர்ந்தார்.

1980களில் மதுரையில் இருந்து வெளிவந்த மாத இதழான 'தமிழ்ப்பிரபா'வுக்காகத் தனது முதல் ஓவியத்தை வரைந்தளித்தார். பிறகு நண்பர்களோடு சேர்ந்து நடத்திய கையெழுத்து இதழான 'முள்'ளிலும் ஓவியங்களை வரைந்தார். 'மதுரை' எனும் இதழிலும் ஓவியங்கள் இடம்பெற்றன.

யாதவ கல்லூரியில் படிக்கும்போது பேராசிரியர்களின் அமைப்பான 'மூட்டா'வுடன் நெருக்கமானார். அவர்கள் நடத்திய 'மூட்டா ஜர்னல்' இதழுக்கும் ஓவியங்களை வரைந்தார். 1983-84களில் அமெரிக்கன் கல்லூரியில் படிக்கிற காலத்தில் இடதுசாரி மாணவர் இயக்கங்களோடு அறிமுகமானார்.

'தினசரி' நாளிதழில் பகுதி நேரப் பணியாக ஓவியங்களை வரைந்துகொண்டே, கவிஞர் மீரா தொடங்கிய 'அன்னம் விடு தூது' இதழுக்கான ஓவியங்களையும் வரைந்தார். மதுரையில் நண்பர்கள் தன்னார்வத்தோடு நடத்திய 'சமத்துவச் சிந்தனை' இதழுக்கும் ஓவியங்களை அளித்தார்.

தனது இளமுனைவர் பட்ட ஆய்வினை 1988இல் 'குதிரையெடுப்பு' எனும் தலைப்பின்கீழ் செய்து, அதனை ஒரு நூலாகவும் கொண்டுவந்தார். '90களில் தமிழ் சினிமாவின் கதையம்சம்' எனும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினைச் செய்தார்.

1987இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கல்வி பல்லூடக ஆய்வு மையத்தில் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார்.

ஒருவரிடம் எது குறித்து வேண்டுமானாலும் காத்திரமாகப் பேச முடியுமென்றால் அது முனைவர் பேராசிரியர் சு.ரவிக்குமார் எனக் கல்லூரி வட்டத்தில் அறியப்பட்ட ஓவியர் ஸ்ரீரசாவிடம் பேசலாம். கவிதை, கதை, நாவல், ஓவியம், சிற்பம், திரைப்படம், இசை, தத்துவம், சமயம், வரலாறு, நுண்கலை, நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பு, ஆவணப்படம், புத்தகப் பதிப்பென அனைத்துத் துறைகள் சார்ந்த அறிவையும் ஒருங்கே பெற்றவர் ஸ்ரீரசா. அவரது அறிவின் நீட்சிக்குக் காரணம், அவரது தேடலுடன் கூடிய தொடர் வாசிப்புதான். தொடக்கத்தில் ஓவியக்கவிஞர் என்று அமுதபாரதியை மட்டுமே குறிப்பிட்டு வந்த நான், பின்னாளில் ஓவியக்கவிஞர் எனப் ப்ரியமுடன் சொல்லத்தக்க ஆளுமையாக ஸ்ரீரசாவைக் கண்டு மகிழ்ந்தேன்.

எப்போதும் புத்தகங்கள் சூழ்ந்த உலகத்திற்குள்ளேயே கலந்திருப்பார் ஸ்ரீரசா. தன் பார்வைக்கு வரும் எந்தவொரு புதிய புத்தகத்தையும் படிக்காமல் விடமாட்டார். வீடெங்கும் பல்துறை நூல்கள் நிறைந்திருக்கும். நம்மிடம் பேசிக்கொண்டே சென்று, ஒரு நூலைக் கையில் எடுப்பார். அந்த நூலிலுள்ள ஏதாவது ஒரு புதிய செய்தியை ரசனையுடன் நமக்குச் சொல்வார்.

'சிட்டு' எனும் பதிப்பகத்தைத் தொடங்கி, பேராசிரியர் அருணன், எழுத்தாளர்

மேலாண்மை பொன்னுச்சாமி ஆகியோரின் நூல்களைப் பதிப்பித்தார். பின்னர் 'காலம் வெளியீடு' என்ற பதிப்பகத்தின் மூலமாக, 'பூவின் நிழல்' எனும் புதுக்கவிதை நூலையும், ரமா.ராமநாதனின் 'குயிலின் நிறம்' எனும் ஹைக்கூ நூலையும், கவிவர்மனின் 'தூக்குக்கயிற்றின் மரணம்' எனும் பகத்சிங்கின் கவிதை வடிவிலான வரலாற்று நூலையும் முன்வெளியீட்டுத் திட்டத்தின் மூலமாகப் பதிப்பித்தார். அதன் மூலமாக இன்றுவரை நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுவருகிறார்.

மறுபடி மானுடம், கரித்துண்டுகள் ஒளிரும் காலம் ஆகிய இரு கவிதை நூல்களையும், உடைந்து கிடந்தது நிலவு எனும் கையடக்க ஹைக்கூ கவிதை நூலினையும் ஒரே சமயத்தில் வெளிக்கொண்டு வந்தார்.

கவிதைகளில் உறுதிபட வெளிப்படும் சமூக ஞானமும், தெளிந்த அரசியல் பார்வையும், கவித்துவத் தெறிப்பும் ஸ்ரீரசாவின் கவிதைகளின் காணப்படும் தனித்துவமான அம்சங்களாகும்.

2015ஆம் ஆண்டில் வெளியான 'துச்சம்' கவிதை நூலில்,

'ஒரு வரியோ
இரண்டு மூன்றோ
எழுது ஒரு கவிதை'

என இளைய படைப்பாளிகளை எழுதத் தூண்டும் வகையில் எழுதியுள்ள கவிஞர் ஸ்ரீரசா,

'பக்தி மணக்கும் பழனி
பால் மணக்கும் பழனி
சுற்றி மணக்கும் பீ'

எனச் சமூக எதார்த்தத்தையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

2018இல் 'ஆயிரந்தலை ஆதியரவம்' எனும் கவிதை நூலினை எழுதினார். அந்த நூலுக்கு எழுதிய முன்னுரையை 'பாசிசத்துக்கு எதிரான அணிவகுப்பில்' என்று தலைப்பிட்டு எழுதியிருப்பார். அதுதான் ஸ்ரீரசாவின் அரசியல் புரிதலுக்கான சான்று. ஏன் எழுதுகிறோம், எதற்காக எழுதுகிறோம் என்பதில் துளியும் குழப்பமின்றி எழுதுவதால் சரியான அரசியல் நிலைப்பாடுடைய கவிதைகளைத் தொடர்ந்து படைத்தளிக்க முடிகிறது.

'மரத்திடம் பேசுகிறாய்
கிளியிடம் கொஞ்சுகின்றாய்
பூக்களிடம் நெக்குருகுகின்றாய்
பட்டுப்பூச்சிகளிடம் பாடுகின்றாய்
கவிஞனென்று சொல்லி
தாள்களில் உழுது நிறைக்கின்றாய்
அச்சேற்றி விட்டதாய்
அகம் மகிழ்கின்றாய்
மனிதர்களோடு பேச
அன்பின் மொழியற்ற நீ.'

ஒரு படைப்பாளிக்கு இருக்க வேண்டிய முதன்மையான குணம், சக மனிதர்கள் மீது அன்பு செலுத்துதல் என்பதே. அதுவே இல்லாதவர்களை மனிதரென்றே ஏற்காதபோது, கவிஞரென்று எப்படிச் சொல்வது..?

'பாஞ்சாலியின் நிர்வாணம்' என்றொரு கவிதையை இப்படி முடித்திருப்பார்;

'விவசாயியின் இடையிலிருந்து
நில ஆடை உருவும்
கிரிமினல்களிடமிருந்து காக்க
கை நீட்டி ஆடை தர
மாயக் கண்ணனும் வரவில்லை – ஒரு
மயிராண்டியும் வரவில்லை.'

இந்தச் சமூகக் கோபம்தான் ஒரு படைப்பாளியை மட்டுமல்ல, படைப்பையும் உயிர்ப்போடு வைத்திருப்பது. அப்படியான உயிர்ப்பின் தெறிப்பு ஸ்ரீரசாவின் அனைத்துப் படைப்புகளிலும் திண்ணமாக வெளிப்படுவதைக் காணலாம்.

'வாழ்வு
சாவின் சாவு'

கால்நூற்றாண்டுகளுக்கு முன்பு வாசித்த ஸ்ரீரசாவின் இந்த இரு வரிக் கவிதையானது இப்போதும் என்னைத் தொடர்ந்து வருகிறது.







2023இல் 'தோற்றுக்கொண்டிருப்பவனின் ஆடைகள்' எனும் கவிதை நூலை எழுதினார். அதில், ஆழமும் அர்த்தமும் பொதிந்த குறுங்கவிதைகளும் பல நீள்கவிதைகளும் உள்ளன.

'வரவு செலவென்பது
திட்டம்
கடன் வரவு
வரவா செலவா?
கடன் செலவு
செலவா வரவா?'

என்றெழுப்பும் கேள்விகளைப் போலவே, சமூக விமர்சனங்களையும் தன் கவிதைகளில் 'நறுக்'கென வைப்பது ஸ்ரீரசாவின் கவிதைப் பாணி.

'கடவுளறிந்தவர் நாத்திகர்
அறியாதவர் ஆத்திகர்
கடவுளறிய நாத்திகராகு'

என்று பகுத்தறிவின் பக்கமாக மனித குலத்தை வழிநடத்தும் வேலையைச் செவ்வனே செய்யும் வேலையை ஸ்ரீரசாவின் கவிதைகள் செய்கின்றன. தனது எந்த நூலிலும் முன்னுரையோ, அணிந்துரையோ இல்லாமல் வெளியிடும் ஸ்ரீரசா, இந்த நூலில் தனது நண்பரான இளங்கோவன் தாயுமானவரின் பின்னுரையை இணைத்திருப்பார்.

'சூதானமா இருங்க ரவி!' என்று எழுதியிருக்கும் பின்னுரையில், ஸ்ரீரசாவின் சத்திய ஆவேசமிக்க வரிகளைக் கோடிட்டுக் காட்டி, சமகால அரசியலையும், சாமானிய மனிதர்கள் படும் துயரினையும் எவ்விதப் பகட்டுமில்லாமல் பொதுவெளியில் கவிதையாகத் தோலுரிக்கும் கவிஞரை, மதவாதச் சக்திகளிடமிருந்து கவனமாக இருக்கச் சொல்லிருப்பார் அவரது நண்பர். நானும் சொல்கிறேன்.. 'இன்னும் கவனமாகக் களமாடுங்கள்.. அண்ணா!'



ஸ்ரீரசாவின் கவிதைகளில் அங்கங்கே மார்க்சிய அழகியல் பார்வையுடன் கூடிய கவிதைகளையும் காணலாம். அதென்ன மார்க்சியப் பார்வை..? இந்த வாழ்க்கை எவ்வளவு நெருக்குதல்களைத் தந்தபோதும், அதற்குள்ளும் விடிவெள்ளியெனச் சிறுநம்பிக்கை துளிர்க்க, பொன்விடியலுக்காகப் போராடும் வேளையிலும், இயற்கையின் பேரழகைக் கண்டு மனம் நெகிழும் கவிதை வரிகளை எழுதுவதாகும். அதையே ஸ்ரீரசாவும் எழுதியுள்ளார்.

'சிறியதொரு காற்றசைக்கிறது
சிறியதொரு நூலை
மனதிலொரு பாம்பு.'

கண்களுக்கும் மனதிற்குமான இடைவெளியில் நடந்தேறும் தோற்றப்பிழைகளை இதைவிடச் செறிவாய்ச் சொல்லிவிட முடியாதுதான்.

'உடைந்து கிடந்தது நிலவு' எனும் ஹைக்கூ நூலில் ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளோடு போட்டிப்போடும் விதத்தில் பல கவிதைகள் இருந்தாலும், என்னை மிகவும் கவர்ந்த ஹைக்கூ இது;

'கல்யாணப் பந்தலில்
நந்தவனம் செய்யும்
கொட்டகைக்காரர்கள்.'

திருமண விழாக்களுக்குச் செல்லும்போதெல்லாம் என்கூடவே இந்த ஹைக்கூவும் கைப்பிடித்து உடன்வரும்.

இலக்கியமும் சினிமாவும், பாரதிராஜா திரைப்படங்கள், கழுதைமேலேறி அமெரிக்கா போகலாமா?, அரசியல் சினிமா ஆகிய திரைத்துறை சார்ந்த நூல்களையும், 'குடிக்க வைத்துக் குடிக்கும்' எனும் கவிதைக் குறுநூலையும் எழுதியுள்ள ஸ்ரீரசாவின், 'சாதிலிங்கம்' குறிப்பிடத்தக்க கவிதை நூல். ஆண்குறியை லிங்கமாக வழிபடும் முறையைக் கவிதை வழியாக நிறுவியிருக்கும் முதல் கவிதை நூல் இதுவாகத்தான் இருக்கும். இந்த

நூல் ஏனோ போதிய கவனம் பெறாமல் போனது.

ரஷ்யப் புரட்சியின் வரலாற்றைப் பல நூறு வண்ண ஓவியங்களாக்கி, 'மானுடம் கண்ட மகத்தான புரட்சி' எனும் சித்திர வரலாற்று நூலாக 2024இல் வெளியிட்டார். எதிர் கொள், ஒன்பதாம் வெட்டு, தெருப்பாவை ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ள ஸ்ரீரசா, 'பேசு உனக்காக' எனும் குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் பற்றிய ஆவணப் படமொன்றையும் இயக்கியுள்ளார்.

ஏதாவது ஒரு கூட்டத்தில் உட்கார்ந்திருக்கையில் கையிலொரு பேனாவும் தாளும் கிடைத்துவிட்டால், அந்தத் தாளை அழகிய சித்திரங்களால் அர்த்தப்படுத்திவிடுவார். அப்படியாக அவர் வரைந்த ஓவியங்களே எனது 'கடவுளோடு விளையாடும் குழந்தைகள்' நூலில் இடம்பெற்றன. பென்சில், சாக்பீஸ் போன்ற பொருள்களில் உருவங்களைச் செதுக்குவதிலும் வல்லவர்.

சமுதாயத்தின் நடப்பு உண்மைகளைச் சுடச்சுடக் கவிதையாக்கும் ஸ்ரீரசாவின் பல கவிதைகளில் கதைகளுக்கான கூறுகளும் கலந்தேயிருக்கின்றன. என்றாலும், 'ஒன்பதாம் வெட்டு' எனும் நூலிலுள்ள 'கோச் எண் 5, சீட் எண் 64' எனக்குப் பிடித்தமான கதைக் கவிதை;

'அவசர வேலையாய்த்
தூரந் தொலைவு
செல்ல வேண்டிய புத்தன்,
விரைவு ரயிலில்
போகலாம் என
முடிவு செய்தான்..'

நல்ல முடிவுதான்; சரி, பிறகு –
'பயணச்சீட்டு வரிசையில்
ஏகப்பட்ட கூட்டம்
பயணச் சீட்டுக்
கிடைக்கவில்லை..'

தட்கல் பதிவு முறையோ, மொபைல் பதிவு முறையோ புத்தனுக்குத் தெரியவில்லை.

புத்தன் பக்கத்தில் மகாவீரரும் வந்து நிற்கின்றார். கடவுளர்கள் விஷ்ணு, லட்சுமி, பிரம்மன், முருகன், வள்ளி என அனைவரும் நிற்கின்றனர். காத்தன், ஐயனார், இயேசு, நபிகள், சைத்தான், அசுரர் என ஏகக்கூட்டம். யாருக்கும் டிக்கெட் கிடைக்கவில்லை.

'ஆர்எஸ்எஸ் – பாஜக
ஆளுமிந்தக் காலத்தில்
இந்தியாவின்
பிரதமர் மட்டும்
பறக்கும் சக்தியை
வைத்திருக்கிறார்..'

இப்படியாகத் தொடரும் கதைக் கவிதையானது,

'அவிழ்த்து விட்ட
சடை முடிக்குள்
ஒளிந்திருந்த
கங்காதேவிக்கு
டிக்கெட் கேட்டு,
அது என்னவென்றே தெரியாமல்
மலங்க மலங்க அவள் விழிக்க
கண்களில் கங்கை
தாரையாகப் பொழிந்து கொண்டிருந்தது
ஆதார் அட்டை,
வாக்காளர் அட்டை,
குடியுரிமைச் சான்றிதழ்
என ஒன்றுமே அவளிடம் இல்லையாம்..'


(பிப்ரவரி 17 2020)

என்று முடிகிறது.

காலத்தின் குரலாய் ஒலிக்கின்ற ஓவியக்கவிஞர் ஸ்ரீரசாவின் கவிதைகள், சமகால அரசியல் போக்குகளைச் சாடுவதிலும், கவிதையைச் சம்மட்டியாக்கி, சமூக அநீதிகள் மீது ஓங்கியடிப்பதிலும் தனித்த அடையாளத்துடன் கவனத்தைக் கோருபவை என்பதில் துளியும் சந்தேகமில்லை.

– இன்னும் வரும்...

ச.உமா கண்ணன்




# ஆச்சி

"ஆ...ச்சி, என்ன அரைக்கீங்க?!" என்று முற்றத்தில் தனியாக இருந்த ஒரு அம்மியில் முன்னும் பின்னுமாகப் பச்சை நிறத்தில் எதையோ அரைத்துக்கொண்டிருந்த ஆச்சியை நோக்கிச் சத்தமாகக் கேட்டபடி வந்தாள் செல்வி. தங்கம்மை ஆச்சியின் பேத்தி. உதட்டைக் குவித்து விரலை அதன் மீது வைத்து அமைதியாக இருக்கும்படி சைகை காட்டினாள், ஆச்சி.

தன் உதடுகளைக் குவித்து வலது கையைச் சாய்வாக வைத்து ரகசியம் பேசுவது போன்ற கிசுகிசு குரலில் "ஆச்சி... இது என்னது?" என்று மீண்டும் கேட்டாள் செல்வி. ஆச்சியிடமிருந்து பதில் வரவில்லை. ஆனால் அரைப்பது தொடர்ந்துகொண்டிருந்தது. ஆவலை அடக்க முடியாத செல்வி மீண்டும் கேட்டாள்.

இப்போது பொறுமையிழந்த ஆச்சி,

"ஏளா, பேசாதன்னு சைகை காட்டினா திரும்பத் திரும்பக் கேட்டுட்டு இருக்கே. இனி நான் எல்லா மருந்தையும் திரும்பல்ல அரைக்கணும்?" என்றாள்.

"ஏ ஆச்சி, கெட்ட வார்த்தையா சொல்ற...? எங்கம்மாட்ட சொல்லப் போறேன்... போ..." என்றபடி அம்மாவை நோக்கி ஓடினாள் செல்வி.

செல்வி, பள்ளி விடுமுறையில் தன் அம்மா அப்பாவுடன் ஆச்சி வீடு வந்திருக்கிறாள்.

"போளா, போய் கொம்மைட்ட நல்லா சொல்லு" என்றபடி அவள் பின்னால் வந்தாள் ஆச்சி.

அடுக்களையில் சமைத்துக்கொண்டிருந்த அம்மாவிடம் சென்று "அம்மா, ஆச்சி கெட்ட வார்த்தையா பேசுறாங்க. நீங்க அவங்க வாயில சூடு வைங்க" என்றாள் செல்வி.

"சூடு வைக்கணுமா? இங்க வா நீ!" என்று சிரித்த ஆச்சி மருமகளிடம்,

"எம்மா, சுசீலா, வாய் பேசாம மருந்து அரைக்கணும்னா இவ என்னது என்னதுன்னு இருக்க வுடல. இனி எல்லாம் இரண்டாவதும் அரைக்கணும்" என்றாள்.

"மருந்து யாருக்கு மாமி?" என்றாள் சுசீலா.

"தெக்கூரு செல்லமணிக்கப் பேரனுக்கு. ஒரு வாரமா பீத்தண்ணியும் வாந்தியுமா இருக்காம். வயிறு ஏத்தி வச்சிருக்கு போல.

அதான் கூட்டிட்டு வரட்டாண்ணா. குடலேத்தம் பாத்து மருந்து குடுக்கணும். இன்னும் செத்த நேரத்தில வந்துருவா. சரிம்மா, நீ உன் சோலியப் பாரு. நான் அடுத்ததும் அரைக்கப் போறேன்” என்று கிளம்பிய ஆச்சியின் பின்னால் செல்வி நடந்தாள்.

“ஏட்டி, ஆச்சி மருந்து அரைக்கும்போது பேசப்புடாது. நீ போய் ஆச்சியத் தொந்தரவு பண்ணாத” என்றாள் சுசீலா தன் மகளிடம்.

“நான் பேசாம பாத்துட்டு மட்டும் இருப்பேன்” என்று உறுதி சொல்லிவிட்டு ஆச்சியைப் பின் தொடர்ந்தாள் செல்வி.

ஆச்சி, மழை நேரத்தில் கூரையிலிருந்து சொட்டுச் சொட்டாக மண்ணில் தண்ணீர் விழும் இடத்தில் இருக்கும் குட்டிக்குட்டிப் புனல் போன்ற பள்ளங்களில் உள்ள மிருதுவான மண்ணில் புதைந்து இருந்த கோலியான் சிலவற்றைப் பிடித்தாள்; பிறகு வேறு சில இலைகளையும் பறித்து வந்தாள். அம்மியை நன்றாகக் கழுவிவிட்டு, அவற்றை வைத்து அரைக்க ஆரம்பித்தாள். அமைதியாக அவள் செய்வதைப் பார்த்துக்கொண்டே நின்றாள் செல்வி. அரைத்து முடித்ததும் மருந்தை ஒரு பூவரசு இலையைப் பறித்து அதில் வைத்த ஆச்சி, அம்மியைக் கொஞ்சம் தண்ணீரில் அலம்பி அதை ஒரு சங்கு கரண்டியில் எடுத்தாள். பிறகு அம்மியை நன்றாகக் கழுவிக் குழவியை அதற்கான இடத்தில் வைத்துவிட்டு வீட்டை நோக்கி நடந்தாள். செல்வியும் அவள் பின்னால் நடந்தாள். வீட்டில் வீறிட்டு அழும் குழந்தையின் சத்தம் கேட்டது.

“மாமி, அவுங்க வந்தாச்சு” என்றாள் சுசீலா.

குழந்தையைப் பார்த்ததும் தங்கம்மை ஆச்சி,

“சட்டையைக் கழத்திட்டு புள்ளய நேரா புடி” என்று பிடிக்கச் சொல்லிவிட்டு வயிற்றை அங்கங்கே தட்டிப் பார்த்தாள்; பிறகு தன் ஒரு காதை குழந்தையின் வயிற்றில் அழுத்தி சத்தத்தைக் கவனித்தாள்; உச்சந்தலையில் கை விரல் வைத்துப் பார்த்தாள். ஒரு பாயை விரித்துக் குழந்தையை அதில் படுக்க வைக்கச் சொல்லி விட்டு,

“பேதி எப்படி போகுது?” என்றாள்.

“ஒரு மாதிரியா திரிஞ்சுபோன தயிர் மாதிரி போகுது. உடம்பெல்லாம் ஒரு நாத்தம் இருக்கு. சுருண்டு சுருண்டு அழுதுட்டு இருக்கான்” என்றாள் செல்லமணி.

“ம்...” என்ற பாட்டி, ஒரு பெட்டியில் வைத்திருந்த விபூதியை எடுத்து வயிற்றில் மேலிருந்து கீழாக சில இடங்களில் சற்றே அழுத்தம் கொடுத்துத் தடவினாள். குழந்தை அழுதுகொண்டேதான் இருந்தது.

பின்னர் குழந்தையைக் கவிழ்த்துப் படுக்க வைத்து முதுகிலும் அது போன்றே விபூதியை வைத்துத் தடவிவிட்டுக்கொண்டே நடு முதுகில் ஆங்காங்கே சதையை மடக்கிப் பிடித்து இழுத்தாள். ஒவ்வொன்றிலும் சொடக்கு விடுவது போன்ற சத்தம் வந்தது.

பின்னர் குழந்தையை இரு அக்குள் பகுதியில் பிடித்துத் தூக்கச் சொல்லிக் குழந்தையின் கால்களை வலது காலை இடது பக்கம், இடது காலை வலது பக்கம் என்று பிடித்து ஆட்டிவிட்டுப் பட்டென்று



ஓவியங்கள்: அ.ழ.ரஜினிகாந்தன்

உதறி இழுத்தாள். மீண்டும் ஒரு சொடக்குச் சத்தம் கேட்டது. பிறகு தான் அரைத்து வைத்திருந்த மருந்தைக் குழந்தையின் உச்சந்தலையில் நடுவில், கெட்டியாக, தப்பளமாக வைத்தாள். கொஞ்சம் மட்டும் சங்கு மூலம் வாயில் புகட்டினாள்.

“அவ்வளவுதான். இரண்டு நாள்ல சரியாயிரும்,” என்றாள் ஆச்சி.

“எக்கா, எவ்வளவு ரூபாய் தரணும்?”

“ஒண்ணும் வேண்டாம். பிள்ளையைத் தூக்கிட்டுப் போ” என்றாள் ஆச்சி.

குழந்தையின் சிணுங்கல் கொஞ்சம் குறைந்திருந்தது.

“எக்கா, எத்தனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு அலஞ்சேன் தெரியுமா? சரியாவல. பூத்தங்கம் மைனிதான் ஒருநாள் பாத்துட்டு உங்கள்ட்ட வந்து பாக்கச் சொன்னாவ. அவங்க பேரனுக்கு இதுபோல ரொம்பக் கஷ்டப்பட்டு பிறகு உங்கள்ட்ட வந்து நல்லா சரியாயிட்டுன்னு சொன்னாவ. இனி கவலை இல்லக்கா” என்றபடி குழந்தையைத் தூக்கிக்கொண்டு சென்றாள் செல்லமணி.

எல்லாவற்றையும் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த செல்வி அவர்கள் போனதும் கேட்டாள்…

“ஆச்சி, நீங்க ஏன் காசு வாங்கல?”

“எல்லாம் கஷ்டப்படறவங்கள்ல மக்கா…? நமக்கு முடிஞ்ச எதாவது உதவியச் செய்யணும். அதுக்கு எதையும் எதிர்பார்க்கப்புடாது” என்றாள் பாட்டி.

அடுத்த நாள் காலையில் ஆச்சி, “சுசீலா, விளைக்குப் போயிட்டு வாறேம்மா” என்று ஒரு குட்டி விளக்குமாறும், சாக்கும் வைத்த ஒரு கடவப்பெட்டியை இடுப்பிலும் பழங்கள் பறிக்கும் மூங்கில் கொக்கிக்கம்பு ஒன்றைக் கையிலும் பிடித்தபடி கிளம்பினாள்.

“ஆச்சி, நானும் வாறேன்” என்றாள் செல்வி.

“வேண்டாம் மக்கா, செடி செத்த கெடக்கும்” என்றாள் ஆச்சி.

“நானும் வருவேன்” என்று ஆச்சியின் கையைப் பலமாகப் பிடித்துக்கொண்டு கிளம்பத் தயாரானாள் செல்வி.

“எம்மா சுசீலா, செல்வி எங்கூட விளைக்கு வரேன்னு நிக்கா” என்றாள் ஆச்சி.

“உங்க கூடத்தானே… வரட்டும் மாமி. கூட்டிட்டுப் போங்க” என்று சுசீலா அனுமதி கொடுத்ததும் இருவரும் கிளம்பினார்கள்.

“செருப்பப் போட்டுக்க மக்கா” என்று செருப்பைப் போட்டதும் வலது கையால் அவளைப் பற்றிக்கொண்டு நடந்தாள் ஆச்சி. வழியில் ‘ஆச்சியும் பேத்தியும் எங்கே போறிய?’ ‘என்னைக்கு வந்தாவ?’ ‘எத்தனை நாள் லீவு?’ என்று யாராவது கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டே வந்தாள் ஆச்சி.

விளைக்குப் போனதும் முள்ளாலான வேலிக்கதவைக் கவனமாகத் திறந்த ஆச்சி, “கொஞ்சம் இங்கேயே நில்லு மக்கா” என்று உள்ளே சென்று பெட்டியை வைத்துவிட்டு ஒரு இடத்தைச் சுத்தம் செய்தாள்; ஒரு கம்பால் ஆங்காங்கே தரையில் தட்டிவிட்டுப் பின்னர் செல்வியை உள்ளே அழைத்துவிட்டு வேலிக்கதவை மூடினார். அங்கு பத்துபோல கொல்லா (முந்திரி) மரங்கள், பல வகையான மாமரங்கள், பனை மரங்கள், மஞ்சணத்தி மரங்கள் போன்றவை தெரிந்தன. கொல்லா மரத்தில் மஞ்சள், சிவப்பு நிறங்களில் கிடந்த பழங்கள் சூரிய ஒளியில் விளக்குப் போட்டது போல மின்னிக்கொண்டிருந்தன. வகை வகையான சிறிய செடிகள், புல் போன்றவை மண்ணைப் பற்றியபடி வளர்ந்து கிடந்தன. தலையில் பூ வைத்தது போன்ற பூஞ்செட்டைப் புற்கள் அடர்ந்து உயர்ந்து வளர்ந்து காற்றில் ஆடிக்கொண்டு இருந்தன.

“இந்தப் பூஞ்செட்டப் புல்லு துணில பட்டா மாட்டிக்கிட்டு உடம்புல குத்தும். தள்ளி வா மக்கா” என்றாள் ஆச்சி.

“இதையெல்லாம் ஏன் வளக்குறீங்க ஆச்சி”

“இதெல்லாம் தானே முளச்சி வளந்திருக்கு மக்கா. இந்தப் பூஞ்செட்டப் புல்ல வச்சி நாங்க வெளக்குமாறு செய்வோம். தூக்குதுக்குப்



பஞ்சுபோல இருக்கும்” நடுவே எந்தச் செடிகளும் இல்லாத சிறிய பாதை போன்ற பகுதி தெரிந்தது.

“மக்கா, இந்தப் பாதையிலே வா. எல்லா இடமும் முள்ளு கெடக்கும். எதாவது கடிச்சிரப்புடாது” என்ற ஆச்சி, தான் பெருக்கிச் சுத்தம் செய்து வைத்திருந்த இடத்தில் அவளை நிற்கச் சொன்னாள். முதல்முறையாக இதுபோன்ற இடத்திற்கு வந்த செல்விக்கு, காற்றில் அசையும் மரங்கள் எழுப்பும் ஓசை ஒரு பயத்தை ஏற்படுத்தியது. ஒருவேளை அவள் கேட்ட கதைகளின் விளைவாகக் கூட இருக்கலாம். “நான் உங்க பக்கத்திலயே நிக்கிறேன் ஆச்சி” என்று பக்கத்தில் வந்து நின்றுகொண்டாள்.

மரத்தில் கிடந்த கொல்லாப்பழங்களை இலாவகமாகப் பறித்த ஆச்சி, “மக்கா, இந்தப் பழங்களப் பெறக்கி அங்கே விரிச்சிருக்க சாக்குலப் போடு மக்கா. துணியில பட்டுறாம... கறை போவாது” என்றாள்.

ஆச்சி பழங்கள் பறிக்க ஆரம்பித்ததும் பழங்களின் மணமும் இலைகளின் மணமும் அந்த இடத்தை நிறைத்தன. ஆங்காங்கே வகை வகையான குருவிகள் பழங்களைக் கொத்திக்கொண்டும், ஒலியெழுப்பியபடியும் அங்கும் இங்கும் பறந்துகொண்டும் இருந்தன.

ஆச்சி பழங்களைப் பறித்து முடிக்கும்போது செல்வி கிட்டத்தட்ட எல்லாப் பழங்களையும் பொறுக்கிச் சேர்த்திருந்தாள். பயமும் குறைந்திருந்தது. பறவைகள் தின்று பாதியும் மீதியுமாகக் கொட்டையுடன் கிடந்த பழங்களை ஆச்சி பொறுக்கிச் சேர்த்தாள்.

“பரவால்லியே மக்கா... வேகமா எடுத்துப் போட்டுட்டியே...” என்று பேத்தியைப் பாராட்டியபடி கொட்டைகளைத் தனியே திருக ஆரம்பித்த பாட்டி, மோசமான பழங்களை ஒதுக்கிவிட்டு நல்ல பழங்களை எடுத்து வைத்தாள். செல்விக்குக் கைப்பறியாகப் பறித்த நல்ல இனிப்பான பழங்களைப் பிய்த்துக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னாள்.

“நல்லா இருக்கு ஆச்சி. ஆனா தொண்டைல லேசா கடிக்குது” என்றபடியே சுவைத்துத் தின்றாள் செல்வி. கூட்டிய சருகைப் பெட்டியில் அள்ளிய ஆச்சி அதன் மீது கொட்டைகள் தனியே பழங்கள் தனியே எடுத்து வைத்தாள். பனைமரத்தின் அடியில் விழுந்து கிடந்த பனம்பழங்களையும் எடுத்து ஒரு பக்கம் வைத்தாள்.

“ஆச்சி, இது என்ன பழம்?”

“இதான் பனம்பழம் மக்கா”

“இவ்வளவு பெருசா இருக்கு? நல்ல மணமா இருக்கு ஆச்சி” என்று அதில் ஒன்றை முகர்ந்துவிட்டுப் பெட்டியில் வைத்தாள் செல்வி.

“மாம்பழம் எதுவும் இப்ப இல்லியே மக்கா! இனி வரும்போது கிடைக்கும் என்ன? போவமா?” என்று பெட்டியைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு மூங்கில் கம்பு இடது கையிலும் செல்வியை வலது கையிலும் பிடித்தபடி வேலியை மூடிவிட்டுக் கிளம்பினாள் ஆச்சி. வழியில் ஆங்காங்கே வீடுகள் இருந்தன.

ஒரு வீட்டைக் கடந்து செல்லும்போது, “தங்கம்மக்கோ… பேத்திகூட விளைக்கு வந்தியளோ? பேத்தி அசப்புல ஒங்களப் போலே இருக்கா!” என்று சொல்லிக்கொண்டே வந்த ஒரு பெண், “எக்கோ, நல்ல கொல்லாம்பழம் இருக்கா? திங்க ஆசையா இருக்கு. உங்க விளையில உள்ளது நல்லா இருக்கும்” என்றாள்.

“இந்நா, ஒரு கை புடி” என்று பெட்டியை இறக்கிய ஆச்சி கொஞ்சம் பழங்களை எடுத்து அவளிடம் கொடுத்தாள்.

“எக்கா, பனம்பழமும் ஒண்ணு தருவியளா?” என்று ஆசையுடன் கேட்க, “ஒண்ணு எடுத்துக்க” என்றாள் ஆச்சி.

முகம் மலர அவற்றை வாங்கிக்கொண்டவள், பெட்டியைத் தூக்கி விட்டுவிட்டு, “போயிட்டு வா மக்கா” என்று செல்வி கன்னத்தையும் செல்லமாகக் கிள்ளிவிட்டாள்.



கொஞ்ச தூரம் நகர்ந்ததும், “ஆச்சி, நீங்க கஷ்டப்பட்டு ஒவ்வொண்ணா பறிச்சிட்டு வந்து கேக்கறவங்களுக்கு எல்லாம் ஏன் ஆச்சி கொடுக்கீங்க?!” என்று ஆச்சியிடம் கேட்டாள் செல்வி.

“மக்கா, நமக்கு ஆண்டவன் எல்லாம் செழிப்பா தந்திருக்கான். இல்லாதவங்களுக்கு நாம குடுக்கணும். மரம் இவ்வளவு பழமெல்லாம் தரதாலதானே நாம திங்க முடியுது?” என்று ஆச்சி சொன்னது புரிந்தும் புரியாமலும் இருந்தாலும் “ம்” என்று தலையை ஆட்டிக்கொண்டாள் செல்வி.

வீடு வந்ததும் பழங்கள், கொட்டைகளைத் தனித்தனியே எடுத்து வைத்த ஆச்சி, கொஞ்சம் பழங்களை எடுத்து சுசீலாவிடம் கொடுத்து, “இதக் கழுவி வெட்டி லேசா உப்பு தூத்தி வைம்மா. எல்லாரும் திங்கலாம். தொண்டைல புடிக்காது” என்றாள். மீதியுள்ள பழங்களை வெளியே திண்ணையில் ஒரு பெட்டியில் வைத்தாள்.

“ஆச்சி, கொல்லாம்பழம் எடுத்துக்கிடட்டா?” என்று சிறிய பனை ஓலைப் பெட்டியுடன் வந்த நாலைந்து சிறுவர் சிறுமிகள் அந்தப் பழங்களை எடுத்ததும் ஒன்றைக் கடித்தபடி மீதியை எடுத்துச் சென்றார்கள்.

பேத்திக்குத் தலைநிறைய எண்ணெய் வைத்துவிட்டு இருவரும் குளித்துவிட்டு வந்தனர்.

“எம்மா சுசீலா, சோறு பொங்கியாச்சாம்மா? பிள்ளைக்குப் பசிக்குமே” என்ற ஆச்சியிடம், “வேலை முடிச்சாச்சு மாமி. சாப்பிடலாம்” என்று இரு தட்டுகளில் சோறு வைத்து, மீன் குழம்பு ஊற்றி முட்டையும் வைத்து ஒன்றை ஆச்சியிடமும் ஒன்றை செல்வியிடமும் நீட்டினாள் சுசீலா.

“நான் ஆச்சி கூடத்தான் சாப்பிடுவேன்” என்று ஆச்சியிடம் வாங்கிச் சாப்பிடக் கையை நீட்டினாள் செல்வி. சோற்றை நன்றாகப் பிசைந்து அதில் மீன் துண்டும் முட்டையும் பிய்த்து வைத்து சிறு சிறு உருண்டைகளாகப் பிடித்துக் கொடுத்தாள் ஆச்சி.

“ஆச்சி, சூப்பரா இருக்கு” என்றபடி வேகமாக விழுங்கினாள் செல்வி. “அவசரப்படாம, நல்லா மென்னு தின்னு மக்கா” என்று ஆச்சி சொன்னதும் ஒவ்வொரு உருண்டைகளையும் சுவைத்துச் சாப்பிட்டாள் செல்வி.

“சுசீலா சமைக்கது எல்லாமே நல்லா ருசியா இருக்கு!” என்று மருமகளைப் பாராட்டினாள் ஆச்சி.

“ஆமா ஆச்சி, அம்மா ருசியா சமைப்பாங்க. அதை நீங்க பிசைஞ்சு உருட்டித் தந்தா அதவிட ருசியா இருக்கு” என்றாள் செல்வி.

சாப்பிட்டதும் காலை நீட்டி அமர்ந்த ஆச்சி வெற்றிலையைக் காம்பைக் கிள்ளி விட்டுச் சுண்ணாம்பு டப்பாவில் இருந்து சுண்ணாம்பை எடுத்து அதில் தடவினாள். பாக்குத் துண்டு ஒன்றை வாயில் போட்டு ‘கடக்’ என்று கடித்தவள், மடக்கிய வெற்றிலையை வாயில் வைத்து மெல்ல ஆரம்பித்தாள்.

“ஆச்சி, எனக்கு?” என்றாள் செல்வி.

“இது நீ திங்கப்புடாது மக்கா! தலையச் சுத்தும்” என்ற ஆச்சி கொஞ்ச நேரத்தில் அதைத் துப்பி வாயைக் கொப்பளித்துவிட்டு வந்தாள்.

“தலையெல்லாம் அரிக்குது மக்கா... கொஞ்சம் பேன் கிடக்கான்னு பாரு மக்கா!” என்று பேத்தியிடம் கேட்டாள் ஆச்சி.

“ஐயே... எனக்குப் பேன் பிடிக்கத் தெரியாதே ஆச்சி!” என்ற பேத்தியிடம் “சும்மா பாரு மக்கா” என்றாள் ஆச்சி. உயர்ந்த படிக்கட்டில் அமர்ந்து ஆச்சி தலையைத் தன் மடியில் சரித்துக்கொண்டு ஆச்சியின் தலையைத் தன் விரல்களால் பிரித்துப் பிரித்துப் பார்த்தாள் செல்வி.

“என் பேத்தி பேன் பாக்கது எவ்வளவு சொகமா இருக்கு தெரியுமா?” என்ற ஆச்சி, “நான் கொஞ்ச நேரம் படுக்கேன் மக்கா... நீ கொஞ்ச நேரம் அம்மை கிட்டப் போ” என்றாள். தரையில் தன் முந்தானையை விரித்து இடது கையை மடக்கித் தலைக்கு வைத்தபடி ஒருக்களித்துப் படுத்தாள்.

“ஆச்சி, நானும் உங்க கூடப் படுப்பேன்” என்று படுத்தவளை அணைத்தபடி படுத்துக்கொண்டாள் ஆச்சி. “காலமிது காலமிது கண்ணுறங்கு மகளே...” என்று மென்மையாகப் பாடியபடி மெதுவாகத் தலையை வருடிக் கொடுத்தாள். சிறிது நேரத்தில் இருவரும் தூங்கிவிட்டார்கள். செல்வி விழித்தபோது, ஆச்சி அருகில் இல்லை; ஒரு பாயில் தலையணையில் தலை வைத்துப் படுத்திருந்தாள் செல்வி.

“ஆச்சி...” என்று அழைத்தாள்.

“வா மக்கா...” என்ற ஆச்சி அப்போதுதான் வந்திருந்த தன் மகனிடம், “சுந்தரு, நீ செல்விய எங்கிட்டதான் உட்டுட்டுப் போணும்னு நெனைக்கேன்” என்றாள் சிரித்துக்கொண்டே. அவள் கைகள் சுட்ட முந்திரிக் கொட்டைகளைப் பக்குவமாக உடைத்துப் பருப்பை எடுத்துக்கொண்டிருந்தன.

“ஆமாம்மா, உங்க பேத்திய நீங்களே வச்சிக்கிடுங்க” என்றார் அப்பா. அப்பாவின் தோளில் தொங்கியபடி, “அப்பா, அப்ப

ஸ்கூலுக்குப் போகண்டாமா?" என்றாள் செல்வி.

"ஆமா... அப்படின்னா செல்வி ஆச்சி கூடவே இருந்துக்கிடுவா போல" என்றபடி வந்த அம்மா முந்திரிப் பருப்பையும் கருப்பட்டிக் காப்பியையும் கொண்டுவந்தாள். எல்லோரும் பேசிச் சிரித்தபடியே இருக்க வேளை இருட்ட ஆரம்பித்தது.

"ஆச்சி, நீங்க எல்லா நாளும் தனியேவா இருப்பீங்க?" என்று ஆச்சி மடியில் படுத்திருந்த செல்வி அக்கறையுடன் கேட்டாள்.

"யாராவது வந்துட்டும் போயிட்டும்தான் இருப்பாங்க மக்கா" என்றாள் ஆச்சி.

"இப்ப யாருமே வரல?!"

"உங்க மகன் குடும்பம் வந்திருக்கில்லா. நீங்க அவங்கள நல்லா பாருங்க. நாங்க பிறகு வருவோம்னு சொன்னாங்க மக்கா."

"அப்படியா? சரி ஆச்சி" என்றாள் செல்வி பெரிய மனுஷி போல.

அடுத்த நாள் காலையே வீடு களை கட்ட ஆரம்பித்து இருந்தது. சுசீலாவின் அம்மா, அப்பா, தம்பி; சுந்தரின் தங்கையும் தங்கை கணவரும் என்று எல்லோரும் வந்துவிட்டனர். எல்லோரும் சேர்ந்து செல்வியைக் கிண்டல் செய்துகொண்டிருந்தனர்.


"செல்வி, கண்ணாடில முகத்தை நல்லா பாத்துக்க. வரும்போது தலையில முடி இருக்காது" என்றாள் அத்தை.

எல்லோருமாக ஒரு வேனில் உவரி கோவிலுக்குக் கிளம்பினார்கள். முப்பந்தல் அருகே வரும்போது வண்டியை நிறுத்திக் காணிக்கை செலுத்திப் பிரசாதம் பெற்றுக்கொண்டு வேன் மீண்டும் கிளம்பியது. எல்லோரும் குடும்பக் கதை பேசுவதும் கிண்டல் செய்வதுமாகக் கலகலப்பாக இருந்தது.

தங்கம்மை ஆச்சி சுந்தருக்கு மொட்டை போட உவரி வந்த கதையைச் சொன்னதும், "அப்பா, நீங்க மொட்டைக்குப் பயந்து ஏம்ப்பா ஓடுனீங்க? நான் பயப்பட மாட்டேன்" என்றாள் செல்வி.

கோயில் சென்று மொட்டை போட்டுத் தலையில் பூசிய சந்தனத்துடன் வேனில் வீடு திரும்பும்போதே நன்றாகத் தூங்கிவிட்டாள் செல்வி.

அடுத்த நாள் காலையில் ஒரு இனிப்பான மணம் நாசியை எட்ட, "ஆச்சி, நல்லா மணக்குது ஆச்சி... என்னது ஆச்சி?" என்று கேட்டபடி வந்த செல்வியை, "பல்லத் தேச்சிட்டு வா மக்கா, தாறேன்" என்று சொல்லியபடி நன்றாகக் கொத்திக் கொட்டைகளை எடுத்துவிட்டுக் கருப்பட்டி சேர்த்து வேக வைத்த பனம்பழத் துண்டுகளை ஒரு தட்டில் எடுத்து ஆற வைத்தாள் ஆச்சி. பானையில் தேன் போல் இருந்த பாகும் கொஞ்சம் எடுத்து அதில் ஊற்றினாள். செல்வி வந்ததும் அவளிடம் "கொஞ்சம் கொஞ்சமா எடுத்துச் சாப்பிடு மக்கா" என்றாள்.



முதலில் கொஞ்சம் தொட்டுத் தன் நாவில் வைத்த செல்வி சப்புக் கொட்டியபடி அதைச் சாப்பிட ஆரம்பித்தாள்.

"ஆச்சி, தேன்போல இருக்கு. இல்லை, அதைவிட நல்லா இருக்கு" என்றாள்.

"நல்லா இனிப்ப உறிஞ்சிச் சவச்சிட்டு நார்போல இருக்கத இதுல துப்பிரு மக்க" என்று ஒரு இலையைக் கொடுத்தாள் ஆச்சி.

இரவில் ஆச்சியிடம் கதை கேட்டபடி தூங்குவதும், காலையில் ஆச்சியுடனே நடப்பதுமாக இருந்த செல்வி புறப்படும் நாள் வந்தது...

"மக்கா, நீ இப்ப கௌம்புறியா மக்கா?" என்ற ஆச்சியிடம், "நான் உங்க கூடவே இருக்கேன் ஆச்சி" என்றாள்.

"அப்புறம் ஸ்கூலுக்குப் போணுமே மக்கா! நீ நல்லா படிச்சு பெரிய ஆளா வரணும் மக்கா. நல்லா படிக்கணும்; அம்மா அப்பா சொல்றதக் கேட்டு நடக்கணும்."

"சரி ஆச்சி" என்ற செல்வி, "ஆச்சி, நீங்க தனியா தானே இருக்கீங்க? எங்க கூட வந்திருங்க ஆச்சி" என்றாள்.

சொர்க்கத்தை விட்டுவிட்டுப் போவதுபோல இருந்தது அவளுக்கு.

"இப்ப முடியாது மக்கா. கொஞ்ச நாள்ல வருவேன்" என்ற ஆச்சி அவளை அணைத்து முத்தமிட்டாள்.

கண்களில் பெருகிய கண்ணீரை யாரும் அறியாமல் துடைத்துக்கொண்டாள். ஆனால் களையிழந்துபோன அவள் முகம் வருத்தத்தைக் காட்டிக் கொடுத்தது. எந்தப் பிரச்சினை வந்தாலும் கலங்காமல் மலை போன்ற உறுதியுடன் நிற்கும் அம்மா கலங்குவது கண்ட சுந்தர் அம்மாவின் தோள்களைப் பற்றிக்கொண்டான். அப்பா இல்லாத குறையே தெரியாமல் வளர்த்தவள் அல்லவா அவள்!

மகன், மருமகள் இருவரும் காலைத் தொட்டு வணங்கினார்கள். செல்வியையும் "செல்வி, ஆச்சி காலத் தொட்டுக் கும்பிட்டு ஆசீர்வாதம் வாங்கிக்கம்மா!" என்றாள் அம்மா சுசீலா.

"எல்லா நாளும் நானே பொங்கி நான் மட்டும் சாப்பிட்டுக்கிட்டு இருந்தேன். நீங்க கூட இருந்த இவ்வளவு நாளும் நீ விதவிதமா வாய்க்கு ருசியா ஆக்கிப் போட்டது மட்டுமில்லாம வீட்டில ஒரு வேலை இல்லாம பாத்துக்கிட்டம்மா" என்று மருமகள் சுசீலாவிடம் அன்புடன் சொன்ன ஆச்சி, எல்லோரையும் ஆசீர்வதித்துக் கையில் கொஞ்சம் ரூபாயும் கொடுத்தாள்.

"எல்லாரும் நல்லா இருக்கணும் மக்கா. நல்லபடியா போய்ட்டு வாங்க. நேரம் கிடைக்கும்போது கட்டாயம் வாங்க" என்றாள்.

செல்வி ஆச்சி கைகளை இறுகப் பற்றியிருந்தாள்.

காரில் பொருட்களை எடுத்து வைத்துவிட்டு முதலில் சுசீலா ஏறியதும், "செல்வி... வா..." என்று அழைத்தாள்.

செல்வியோ, "ஆச்சி, ஆச்சி... எனக்கு ஆச்சி வேணும்" என்று ஆச்சி கைகளை இன்னும் பலமாகப் பிடித்துக்கொண்டு அவளை இறுக்கமாகக் கட்டிக்கொண்டாள்.

அவளை அமைதிப்படுத்திக் காரில் ஏற்றும்போதும் ஆச்சியைப் பார்த்துக் கையை நீட்டியபடி மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தாள் செல்வி.

"அழப்புடாது மக்கா" என்று அவளை மீண்டும் முத்தமிட்டாள் ஆச்சி. கார் நகர ஆரம்பித்தது.

"டேய்... பிளசர் காருடா" என்றபடி நாலைந்து சிறுவர்கள் அந்தக் காரின் பின்னாலேயே ஓடினார்கள்.

ஆச்சிக்கோ தன் காலடியில் தரையே நகர்வதுபோல் தோன்றியது. அப்படியே அமர்ந்துவிட்டாள். அந்த வீடு ஒரே நிமிடத்தில் வெறுமையைப் பூண்டுகொண்டது போலத் தோன்றியது அவளுக்கு!

## தமிழ் நிலத்து வீரமங்கையர்கள் தொடர் - 7

தி.கலையரசி



# நாகம்மையார்

இந்தியாவில் அனைத்து மாநிலங்களையும் வளர்ச்சியின் பார்வையில் வைத்து மதிப்பீடு செய்யும்போது, தமிழ்ச்சமூகம் தொழில் முன்னேற்றத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் இன்று முதல் இடத்தில் தனித்து நிற்பதை யாராலும் மறுக்க முடியாது. இதற்கு வலுவான அடித்தளத்தைப் பல தலைவர்களின் சிந்தனைப் பங்களிப்பும் செயலூக்கத் திறமையும் அமைத்துக் கொடுத்ததைத் தமிழ் வரலாறு என்றும் பேசும். ஆண்களும் பெண்களும் பாலியல் பேதமின்றிச் சமூகப் பின்னடைவுகளை எதிர்த்துப் பங்காற்றிய புரட்சிகரமான போராட்டங்கள் ஒவ்வொன்றும் மனித வளத்தை நோக்கி எழுப்பப்பட்ட வெற்றிப் படிகள். அத்தகைய பெண்களின் வரிசையில் மிக முக்கியமான போராளியாக வாழ்ந்தவர் பெரியார் ஈ.வெ.ராவின் மனைவி நாகம்மையார்.

ஒரு சமுதாயம் மேம்பட்டுத் தழைக்க வேண்டும் என்றால் ஆண்களுக்கு நிகராக பெண்களும் கோலோச்ச வேண்டும் என்பது பெரியாரும் எஸ்.இராமநாதனும் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கத்தின் தலையாய பிரச்சாரங்களில் ஒன்று. நாகம்மையார் பெரியாருடன் சக தொண்டர்களில் ஒருவராகத் தம்மை இணைத்துக்கொண்டவர்.

1885ஆம் ஆண்டு சேலம் மாவட்டம் தாதம்பட்டியில் பிறந்தவர் பெரியாரின் முறைப்பெண்ணான நாகம்மையார். பெரியாரைத்தான் மணம் முடிப்பேன் என்று உறுதியாக இருந்து 1898இல் திருமணம் புரிந்துகொண்டார். சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை இல்லாத பெரியார் தன் மனைவி நாகம்மைக்குள்ளும் பகுத்தறிவுச் சிந்தனையை வளர்த்தார். பெரும் வணிகக் குடும்பத்தில் இருந்ததால் பட்டாடை உடுத்தியிருந்த நாகம்மை ஒத்துழையாமை இயக்கத்தில் பெரியார் தீவிரமாகச் செயல்படத் தொடங்கியதும் தானும் இணைந்துகொண்டு கதர் ஆடைக்கு முக்கியத்துவம் தந்தார்.

நாகம்மையைப் பற்றிக் குறிப்பிடும்போது பலரும் அவரின் விருந்தோம்பலைப் புகழ்வார்கள். நள்ளிரவு நேரத்தில் வந்தாலும் தொண்டர்களைக் கனிவுடன் உபசரித்து அனுப்புவது நாகம்மையின் சிறந்த பண்பு.

1921ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியில் இருந்தபோது கள்ளுக்கடை மறியலை முன்னெடுத்தார் பெரியார். தன் தோப்பில் இருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார். போராட்டம் தீவிரமானதை உணர்ந்த ஆங்கிலேய அரசு தடை உத்தரவு போட்டது. ஆனால் அந்த உத்தரவையும் மீறிப் போராடிச் சிறை சென்றார் பெரியார். சிறை சென்றாலும் போராட்டம் தொடர்ந்தது. நாகம்மையும் பெரியாரின் சகோதரி கண்ணம்மாளும் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தார்கள். பெண்கள் செல்லவே துணியாத கள்ளுக்கடை பகுதியில் தொண்டர்களோடு போராட்டம் நடத்தினார்கள். ஏராளமான பெண்கள் இவர்களுடன் இணைந்து அணிவகுத்தார்கள். தேசிய அளவில் பேசக்கூடிய போராட்டமாக உருவெடுத்திருந்தது.

கள்ளுக்கடை மறியல் போராட்டத்தை நிறுத்தச் சொல்லிச் சிலர் காந்தியிடம் கேட்டபோது “மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை. அது ஈரோட்டில் இரண்டு பெண்களிடம் இருக்கிறது. அவர்களைத்தான் கேட்க வேண்டும்” என்றார். அந்த அளவிற்கு அவர்களின் போராட்டம் தீவிரமாக இருந்தது. “பெரியார் பேச்சோடு நில்லாமல் தம் வீட்டுப் பெண்களை மறியல் செய்ய வைத்தார், இதைக் கேட்ட தமிழகமே அதிசயித்தது” எனக் காமராஜர் வியந்து பாராட்டினார்.

கேரளாவில் தாழ்த்தப்பட்ட மக்களைத் தெருவுக்குள் அனுமதிக்காததை எதிர்த்த பெரியாரின் வைக்கம் போராட்டம் நாம் அனைவரும் ஏற்கனவே அறிந்த ஒன்று. அதில் நாகம்மை உள்ளிட்ட பல பெண்களின் பங்களிப்பும் இருந்தது. கண்ணம்மாள் உள்ளிட்ட ஐந்து பெண்களுடன் வைக்கம் தெருவுக்குள் நுழைந்தார் நாகம்மை. “எந்த



சாதி?” என போலீஸ் கேட்க, “சாதி பார்த்து அனுமதிப்பதும் மறுப்பதும் கூடாது. அனைவரையும் அனுமதிக்க வேண்டும்” என்று வாதாடினார் நாகம்மை. போராட்டத்தில் கலந்துகொண்ட ஆண்கள் மீதான நடவடிக்கையே இவர்களின் மீதும் எடுக்கப்பட்டது. முடிவில் வைக்கம் போராட்டம் சிறப்பான முறையில் வெற்றி பெற்றது.

அவர் மாநிலக் காங்கிரஸ் உறுப்பினராகவும் அகில இந்தியக் காங்கிரஸ் உறுப்பினராகவும் இருந்துள்ளார். ஏராளமான மேடைகளில் சொற்பொழிவாற்றியுள்ளார். 1925இல் சில கருத்து வேறுபாடுகளால் காங்கிரசை விட்டு வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்ட பெரியாருடன் தானும் இணைந்து இறுதி மூச்சு வரை சுயமரியாதைச் சுடராகப் பிரகாசித்தார்.

பள்ளிக்கே சென்றிராத நாகம்மை சமூகச் சீர்திருத்தக் கருத்தில் உறுதியாக இருந்தது பலரையும் வியக்க வைத்தது. பெரியாருக்கு உகந்த தோழராக வாழ்ந்து

வந்தார். பெரியார் சுற்றுப்பயணத்தில் இருக்கும்போதெல்லாம் 'குடியரசு' பத்திரிகையின் பொறுப்புகளை ஏற்றுச் சிறப்பாக நடத்தினார். மூடநம்பிக்கைகள் பரவிக் கிடந்த அந்தக் காலத்தில் அதற்கு எதிராகக் குரல் கொடுப்பது அத்தனை எளிதான காரியம் அல்ல. நாகம்மை துணிவோடு அந்தப் பணியைச் செய்தார். 1929ஆம் ஆண்டுகளில் சாதி மறுப்பு மற்றும் விதவைத் திருமணங்கள் பலவும் நாகம்மை தலைமையில் நடைபெற்றுள்ளன.

சமூக நலனுக்காக உழைத்த நாகம்மையார் 1933 மே 11ஆம் நாள் இயற்கை எய்தினார். அவரின் இழப்பைப் பற்றி "நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும் வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை நன்றாக உணர்ந்தேன். இவற்றுக்கு நான் கூறும் சிறிய சமாதானம் நாகம்மாளின் இவ்வளவு காரியங்களையும் பொதுநலச் சேவையில் ஈடுபட்ட பிறகு பொதுநலக் காரியங்களுக்கும் சுயமரியாதை இயக்கத்துக்குமே பயன்படுத்தி வந்தேன் என்பதுதான்" எனக் குறிப்பிட்டார் பெரியார். நாகம்மையின் சமூகப் பணி நினைவாக நாகம்மையார் இல்லம் என்ற பெயரில் ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கான இல்லம் தந்தை பெரியாரால் 1959ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் பல பள்ளிகள் நாகம்மையின் பெயரில் துவங்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு உயர்கல்வி வழங்குவதற்குத் தமிழக அரசாங்கம் பெரியார் ஈவேரா நாகம்மை இலவசக் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு என்ற பெரியாரின் சுயமரியாதைத் தத்துவத்தின் வழி நின்றவர் நாகம்மை.

"யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர் தர வாரா, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், மேலிருந்தும் மேலல்லார் மேல் அல்லர், கீழிருந்தும் கீழல்லார் கீழ் அல்லர், அறத்தால் வருவதே இன்பம், மெய்ப்பொருள் காண்பது அறிவு, ஒன்றே குலம் ஒருவனே தேவன், கோயில் ஆவது ஏதடா? குளங்கள் ஆவது ஏதடா? சாதியாவது ஏதடா? பூசை பூசை என்று நீர் பூசை செய்யும் பேதைகாள், சாதிப்பிரிவினிலே தீயை மூட்டுவோம், தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை தேவாரம் ஏதுக்கடி குதம்பாய்?, எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்று அறியேன், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன், சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர் அலைந்து அலைந்து வீணே அழிதல் அழகலவே. இதன் நீட்சிதான் பெரியாரியம். மனுவுக்கு எதிரான முற்போக்குத் தமிழ் மரபின் சிந்தனை பெரியாரியம்" என்பார் திரு.ப.திருமாவேலன். அவரின் கூற்றுக்கிணங்க, பகுத்தறிவின் ஒளியில் பூத்த பெண் மலர்கள் ஏராளம். அவர்கள் சுயமரியாதை மிகுந்த வீராங்கனைகள். அவர்களில் முதன்மையான தோழராக நாகம்மையார் தம் வாழ்வை அர்ப்பணித்தார்.




புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**இலக்கிய படைப்பு குழுமம்**

43, அஜந்தா டவர்ஸ், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம், சென்னை – 600 024
Ph: +91 7338847788

padaippu | admin@padaippu.com | www.padaippu.com